100 நாள் வேலை உறுதித் திட்டம், விவசாயத்தோடு இணைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது செயல்படுத்தப்படவில்லை. இதனால் விவசாயத் தொழிலாளர்கள் வேலை கிடைக்கப்பெறாமல் விவசாயம் அழியும் நிலையில் உள்ளது என்பதை நான் பதிவு செய்கிறேன். விவசாய விளை பொருள்களைச் சேமிக்க உலகத் தரம் வாய்ந்த குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்போவதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அது நிறைவேற்றப்படவில்லை.

மழைக் காலங்களில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி நிலத்தடி நீராதாரத்தைப் பெருக்கத் தேவைப்படும் அளவிற்குத் தடுப்பணைகள் கட்டப்படவில்லை. நெல்லை மாவட்டத்தில் கடையம் பகுதியில் முந்திரிப் பருப்புப் பதப்படுத்தும் தொழிற்சாலையையும், புளியங்குடி, கடையநல்லூர் பகுதியில் எலுமிச்சம்பழத்திலிருந்து mermalade தயாரிக்கும் தொழிற்சாலையையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் ஒன்றும் நடக்கவில்லை.

உணவுப் பாதுகாப்புச் சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும். ஆரோக்கியமற்ற உணவுப் பண்டங்கள் விற்பதைத் தடை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் வழக்குமொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று சொல்லப்பட்டது. ஆனால், அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தேவையான உபகரணங்கள் இல்லை. குறிப்பாக, புகழ்பெற்ற மருத்துவமனையாகிய, சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் PET Scan இல்லாதது மிகவும் கவலை அளிப்பதாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன், குறைந்தபட்சம் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலாவது PET Scan நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

நான் சமீபத்தில் பொது மருத்துவமனைக்குச் சென்று பார்க்கும்பொழுது 'Haemodialyser' தேவையான எண்ணிக்கையில் இல்லை என்று அங்குள்ள மருத்துவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். நீங்கள் அதையும் நிரப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவக் கண்காணிப்பாளர், மருத்துவர்களை அவமரியாதையாக நடத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, மருத்துவர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து போராட்டம் செய்திருக்கிறார்கள். பொதுவாகவே, அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் Superintendent-க்கும், Dean-க்கும் இடையே ஒரு பனிப் போர் நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழில் நலிவடைந்து நெசவாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் நலனில் கூடுதல் அக்கறை காட்டவேண்டும். பருத்தி நூல் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுமார் 20 ஆண்டுக் காலமாக அறிவொளி இயக்கம், தொடர் கல்வித் திட்டம், வளர் கல்வித் திட்டம் இவற்றைத் தொடர்ந்து பெண்கள் எழுத்தறிவுத் திட்டம் மற்றும் கற்கும் பாரதம் ஆகிய திட்டங்களில் பணியாற்றியும், பணிப் பாதுகாப்பின்றி தவிக்கும் சுமார் 25 ஆயிரம் பணியாளர்களுக்கு மாற்றுப் பணி கொடுத்து அவர்களது குடும்பங்களை வாழ வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் முழுமையாக நடைபெறவில்லை. பல ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களில் திடக்கழிவுகள் மலைபோல் குவிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் சுற்றுப்புறங்கள் மாசுபடுகின்றன. இதைத் தடுக்க, திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் சிறப்பாக நடைபெற உரிய நிதியை ஒதுக்கி, உரிய பணியாளர்களை நியமனம் செய்யாதது அரசின் மெத்தனப் போக்கைக் காட்டுகிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முதலிலே, எனது தொகுதி சார்ந்த ஒன்றிரண்டு பிரச்சினைகளை முன்வைக்க விரும்புகின்றேன். தொடர்ந்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற காட்டுமன்னார்கோவில் தொகுதியில், நிரந்தரமான வெள்ளத் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும்விதமாக, கொள்ளிடத்தின் இடது கரையைப் பலப்படுத்துவதற்காக சுமார் 108 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இப்பொழுது பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அதிலே, சிதம்பரம் வட்டம், ஜெயங்கொண்டம்பட்டினம் கிராமத்தில் இருக்கும் மக்கள் அங்கே கரையோரமாகக் குடியிருப்புகளைக் கட்டி, கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். அந்தக் குடியிருப்புகளையெல்லாம் அகற்ற வேண்டுமென்று இப்பொழுது பொதுப் பணித் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியிருப்பதாக அந்த மக்கள் புகார் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய குடியிருப்புகளுக்கு எந்தவித ஊறும் நேர்ந்து

விடாமல் இந்த வெள்ளப் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்திடுமாறு நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

தேனி மாவட்டம், ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் கடந்த 15 ஆண்டுகளாகப் பணியாற்றியும், பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பை வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்பொழுது, பகுதிநேர நியாய விலைக் கடைளைத் திறப்பதற்குக் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால், சமத்துவபுரங்களிலே இன்றைக்கு 100 வீடுகளை நமது அரசு கட்டித் தருகிறது. அந்த சமத்துவபுரத்திலே வாழ்கின்ற மக்கள், பக்கத்திலே இருக்கின்ற கிராமங்களுக்குச் சென்றுதான் தங்களுடைய ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, சிறப்பு நேர்வாக இந்த விதியைத் தளர்த்தி, 100 குடும்ப அட்டைகள் இருந்தாலே, அங்கே பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் இந்தப் பேரவையின் வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே அனைவரும் சமம் என்கின்ற கொள்கையை நாட்டிலே பரப்பவேண்டுமென்பதற்காகத்தான், தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய கொள்கைவழித் திட்டமாக, பெரியார் நினைவு சமத்துவபுரத்தை உருவாக்குகிறார்கள். அதிலே, 100 வீடுகள்தான் கட்டப்படுகின்றன. 150 கார்டுகள் இருந்தால்தான் பகுதிநேர நியாய விலைக் கடைகள் என்று அரசாங்கம் ஏற்கெனவே விதி வைத்திருந்தாலும்கூட, இதற்கு அரசாங்கம் சிறப்புச் சலுகையைப் பயன்படுத்தி, இப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்ற 174 பெரியார் நினைவு சமத்துவபுரங்களில், 125 இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டுவிட்டன. உறுப்பினர் அவர்களுடைய

கடலூர் மாவட்டத்தில்கூட, 4 பெரியார் நினைவு சமத்துவபுரங்களிலே நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டுவிட்டன. எஞ்சி இருக்கின்ற 49 சமத்துவபுரங்களில் அரசு தொடர்ந்து இந்தக் கடைகளைத் திறப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, இப்படிச் சிறப்புச் சலுகையைப் பயன்படுத்தி 125 கடைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பிற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே இப்போது மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதிலே முன்னணியில் இருக்கின்ற மாநிலம், தமிழகம். அதிலும் குறிப்பாக, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தப் போர்க்களத்திலே முன்னணிப் படைவீரராக என்றுமே திகழ்ந்துகொண்டிருக்கின்றார். கோட்டையிலே முதல்வர்கள் கொடியேற்றுவதற்கான உரிமையை இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்கள் எல்லாவற்றிற்கும் பெற்றுத் தந்த பெருமை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைத்தான் சாரும். அதன் காரணமாகத்தான் இப்போது சுதந்திர தினத்திலும், குடியரசு நாளிலும் கோட்டையிலே கொடியேற்றுகின்ற உரிமையை மாநில முதல்வர்கள் பெற்றார்கள்.

அத்தகைய பெருமை பெற்ற நம்முடைய முதல்வர் அவர்கள்— ஏற்கெனவே ஒவ்வொரு மாநிலத்திற்கும் கொடி வைத்துக்கொள்வதற்கான உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலே, அந்த மாநிலங்கள் உருவாக்கப்பட்ட தினத்திலே அந்தக் கொடியை ஏற்றிக் கொண்டாடுகிறார்கள். அப்படி நம்முடைய மாநிலத்திற்கும் தனியாகக் கொடி இருக்கிறது. அந்தக் கொடியை நாம் எப்போதுமே ஏற்றுவது இல்லை. எனவே, தமிழகத்திற்கென்று இருக்கும் கொடியைச் சுதந்திர நாளிலும், குடியரசு நாளிலும், தேசியக் கொடியோடு சேர்த்து ஏற்றுவதற்கான உரிமையை நாம் வாதாடிப் பெறவேண்டுமென்று நான் இந்த அவையிலே வலியுறுத்துகின்றேன்.

அதுபோல, கல்விக்கான கூடுதல் வரி, Educational Cess என்று இப்போது அனைத்து மத்திய வரிகளிலும் 2 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. அந்தத் தொகை எப்படிச் செலவிடப்படுகிறது என்பது எவருக்கும் தெரியாத புதிராக இருக்கிறது. மாநிலத்திலே வசூலிக்கப்படுகின்ற அந்த Educational Cess முழுவதும்,

மாநிலத்திற்கே வழங்கி, கல்விக்கான செலவினங்களைச் சந்திப்பதற்கு வழிவகை செய்யப்படவேண்டும்.

அதுபோல, கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று, தொடர்ந்து தமிழகம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. அந்த உரிமையை நாம் நிலைநாட்ட வேண்டும். பொதுப் பட்டியல் என்ற பட்டியலிலே பல்வேறு உரிமைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே இருக்கின்ற இனங்களிலே, சட்டம் இயற்றுவதற்கு மத்திய அரசுக்கும் உரிமை இருக்கிறது; மாநில அரசுக்கும் உரிமை இருக்கிறது என்றாலும்கூட, அது பெரும்பாலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. எனவே, பொதுப் பட்டியலில் இருக்கும் அதிகாரங்களை மறு ஆய்வு செய்து, அவற்றில் உரியவற்றை மாநிலங்களுக்கு வழங்குவதற்காக கமிஷன் ஒன்றை அமைத்திட வேண்டுமென்று நம்முடைய அரசு வலியுறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய வரிகளில் குறைந்தபட்சம் 50 விழுக்காட்டை மாநிலங்களுக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பிலே வலியுறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

ஆதி திராவிட மக்களுக்காக அடுக்கடுக்கான பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது நம்முடைய அரசு. இருந்தபோதிலும், ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படுகின்ற மாணவர்கள் விடுதிகளிலே போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை. அந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுக்கான நிதி போதுமானதாக இல்லை என்கின்ற ஒரு குறை மாணவர்களிடத்திலே இருக்கிறது. இப்போது, பள்ளி மாணவர்களுக்கு மாதம் 450 ரூபாயும், கல்லூரி மாணவர்களுக்கு மாதம் 550 ரூபாயும் வழங்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பிலே நடத்தப்படுகின்ற விடுதிகளுக்கும் இதே தொகைதான் வழங்கப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. எனவே, பள்ளி மாணவர்களுக்கான தொகையை ரூபாய் 1,000 ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கான தொகையை ரூபாய் 1,500 ஆகவும் உயர்த்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது, சத்துணவிலே வாரத்திற்கு 5 முட்டைகள் வழங்கப்பட்டாலும், ஆதி திராவிட நலத் துறையால்

நடத்தப்படுகின்ற விடுதிகளிலே வாரத்திற்கு 3 முட்டைகள்தான் வழங்கப்படுகின்றன. இந்த பாரபட்சத்தை நீக்கி, அங்கேயும் வாரத்திற்கு 5 முட்டைகள் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த விடுதிகளையெல்லாம் சரியான முறையிலே பராமரிக்கவேண்டுமென்று சொன்னால், விடுதிக் காப்பாளர்களாக ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன். (குறுக்கீடு) உரையை சீக்கிரம் முடியுங்கள். இன்றைக்கு கில்லட்டின் நேரம். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

முற்பகல் 10-20

திரு. து. ரவிக்குமார்: அதேபோல தாட்கோ திட்டத்தால் செலவிடப்படுகின்ற அதாவது திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தில் செலவிடப்படுகின்ற நிதி, இன்றைக்குச் சில நிறுவனங்களால் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது என்று பத்திரிகைகளிலே செய்திகள் வருகின்றன. குறிப்பாக, கோவை பகுதியிலே அப்படி நடந்திருக்கிறது. உடனடியாக நம்முடைய அமைச்சர் அவர்கள் தலையிட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றைக்கு ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிற இட ஒதுக்கீட்டினை எப்பொழுதுமே உயர்த்தி வழங்கியவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான். அவர்கள் 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி அவர்களுடைய இட ஒதுக்கீடு மேலும் ஒரு விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற நிலையிலே அந்த நீதியையும் வழங்கி வரலாற்றுச் சிறப்பினை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெறவேண்டும்.

அதேபோல தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைத் திங்களே தமிழனின் ஆண்டு என அறிவித்து, ஈராண்டு காணாத வேளையில் ஈராயிரம் ஆண்டு வரலாறுகளை இந்த மண்ணில் படைத்த என் மகத்துவ தலைவரைக்

காணும்போதெல்லாம் ஒரு இறவாக் கலைஞரின் இறை வேண்டல்கள் என் நினைவில் வருகின்றன. வங்க மண்ணில் தங்கினாலும் அவரது வரிகள் மட்டும் எந்த மண்ணிலும் தங்கும். அத்தகைய பெருமைபெற்ற கவிஞர் தாகூரின் இறை வேண்டல்கள் இதோ. 'ஆபத்திலிருந்து காப்பாற்றும்படி பிரார்த்திக்கமாட்டேன், ஆபத்துக்களை சந்திக்க எனக்கு அஞ்சாமையைக் கொடு; வாழ்க்கை என்னும் போரில் எனக்குத் துணை கேட்கமாட்டேன், வெற்றி அடைய சுய பலத்தைக் கொடு; எதிர்பார்ப்புகள் என்ன ஆகுமோ என்ற பயத்திலிருந்து காப்பாற்றும்படி வேண்டமாட்டேன், நம்பிக்கையுடன் இருந்து வெற்றி அடைய பொறுமையைக் கொடு' என்ற அழகான வரிகள் இவை. என் தங்கத் தலைவருக்காகவே கவிஞர் தாகூர் தந்த வரிகள் இவை. இந்த வரிகளை உள்வாங்கிக் கொண்ட என் உத்தமத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடல்வாழ் அண்ணாவின் ஸ்வகறை நினைப்பே, உயிர்க் காப்பீடு தந்த உத்தமத் தலைவரே, எங்கள் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, "கல்லார்க்கும், கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே, காணார்க்கும், கண்டோர்க்கும் கண் அளிக்கும் கண்ணே, மதியார்க்கும், மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியே" என்ற வள்ளலாரின் வாய்மொழிக்கேற்ப என் தளபதி அவர்களே, அம்புகளாகிறபோதும் அடுத்தவர் கும்பிடத் தோன்றும் அழகே, காலம் ஒதுக்கிய கருணைத் தொகுப்பே, இன்றைய இளைஞர்களின் திசைகாட்டியே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே, எங்களது மாவட்டக் கழகச் செயலாளர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களே, இந்த இடைக்கால அறிக்கையில் பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு கொறடா அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னகத்திலே மேம்பாலம் ஒன்று பெரிய அளவிலே கட்டப்பட்டது என்று சொன்னால், அது 1971-72 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட சென்னை அண்ணா சாலையிலுள்ள அண்ணா மேம்பாலம்தான் என்பதை எல்லா மேம்பாலங்களுமே சொல்லும். சொல்லப்போனால் தென்னக மேம்பாலங்களின் வரலாறுகளே இந்த மேம்பாலத்திலிருந்துதான் தொடங்குகின்றன.

தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிற்கு ஏற்ப, இந்த 5 ஆண்டுக் காலங்களில் 1,257 கோடி ரூபாயில் 1,187 பாலங்கள் கட்டி

முடிக்கப்பட்டுள்ளன. கடந்த நிதி ஆண்டில் சாலை மேம்பாட்டிற்கு மட்டும் கழகத் தலைவர் ஆட்சியிலே செலவிடப்பட்ட தொகை 3,358 கோடி ரூபாய். நான்கு நாட்களுக்கு முன் பெரம்பூர் லோக்கோ ஓர்க்ஸ் கூடுதல் மேம்பாலத்தைத் திறந்து வைத்து அதன்மூலம் சென்னைப் போக்குவரத்தைச் சீராக்கிய தலைவர் என் சிந்தனைச் செல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 24-11-2010-இல் சென்னையில் செம்மொழிப் பூங்கா திறப்பு, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பாவேந்தர் பெயரில் செம்மொழித் தமிழாய்வு நூலகம், சென்னை அரசுப் பொது மருத்துவமனைக்கு அமரர் ராஜீவ் காந்தியின் திருப்பெயர் சூட்டுதல் என்று தலைநகரைப் பற்றிய தன் தலைப்புச் சிந்தனைகளை எங்கள் தலைவர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டிலே, முதல் மாநிலமாக உழவர்க்கு வட்டியில்லாப் பயிர்க் கடன் வழங்கும் திட்டம், 2008-2009-இல் நடைமுறைப்படுத்தப்பட்டு, இதனால் தமிழகம் இன்று முன்னணி மாநிலமாகத் தலைவரின் சாதனையால் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கடலூரிலே மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வேண்டும் என்ற அந்தக் கோரிக்கை தலைவர் கலைஞர் அவர்கள் இந்த இடைக்கால அறிவிப்பிலே அறிவிப்புச் செய்து, கடலூர் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு தலைவர் முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை நிதி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கடலூர் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

இன்று தலைவர் கலைஞர் அவர்கள் எண்ணற்ற சாதனைகளை கடலூர் மாவட்டத்திற்குச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவரது சாதனைகளையெல்லாம் நான் சொல்லவேண்டும் என்று சொன்னால் இந்த நாள் முழுவதும் சொல்லிக்கொண்டே

போகலாம். நேரம்தான் போதாது. கடந்த 5 ஆண்டுகளில் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு எண்ணற்ற சாதனைகளைச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்றது. கடலூருக்கென்று பல்வேறு மேம்பாலங்களைத் தந்தமைக்காக நாங்கள் எல்லாம் பெருமையோடு தலைநிமிர்ந்து நிற்கின்ற இந்த நேரத்திலே, மேலும் கடலூர் மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் தந்து, தலைவர் கலைஞர் அவர்கள் உதவி செய்திருக்கிறார்கள். அதுபோல், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பால், இன்று கடலூருக்கு ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், கடலூருக்கென்று காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகமும், அதுபோல் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஆதரவினால் கடலூருக்கென்று ஒரு தனி வட்டாட்சியர் அலுவலகம் போன்ற பல்வேறு புதிய கட்டடங்கள் கிடைக்கப்பெற்றன. நீண்ட நாட்களாக கடலூருக்கு என்று கேட்டு நிலுவையில் இருந்த கோரிக்கைகளைத் தலைவர் கலைஞர் அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது. அன்று வாடகைக் கட்டடங்களில் இயங்கிவந்த பல கட்டடங்கள், இன்று சொந்தக் கட்டடங்களில் தற்போது பெருமைப்படுகின்ற வகையில் இயங்கி வருகின்றன. அதற்கு முழுக் காரணம், தலைவர் கலைஞர் அரசுதான். இதற்குக் கடலூர் தொகுதி மக்களின் சார்பிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், கடலூர் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மாற்றி புதிய கட்டடமாக மாற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கடலூர் கம்பியம்பட்டி சாலை என்ற அந்தச் சாலை மிகவும் பிரதான சாலை. நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக அங்கே retaining wall-கள் எல்லாம் அமைக்கப்பட்டு, அங்கே சாலைகள் மேம்படுத்தப்பட்டு செப்பனிடப்படத் தயார் நிலையில் இருக்கின்ற நிலையிலே, அந்தச் சாலையினை இன்னும் தார்ச் சாலையாக மாற்றுகின்ற சூழ்நிலை இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றது. அந்தச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், அந்தச் சாலை பொதுப் பணித் துறைக்குச் சொந்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடத்தில் கோரிக்கை வைத்தாலும்கூட, இது பொதுப்

பணித் துறைக்குச் சொந்தம் என்று அறிவிப்புச் செய்து இப்போதுதான் அந்தச் சாலையினை மூன்று துறைகளும் சேர்ந்து, சீர்செய்ய கையில் எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஆகையால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த கம்பியம்பட்டி இணைப்புச் சாலையினை உருவாக்கித் தந்து, கடலூர் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான போக்குவரத்து நெரிசல் மற்றும் இடையூறுகளை நீக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், கடலூர் மாவட்டத்தில் கடலோரம் உள்ள பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுக்கின்ற வகையிலே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மூலமாகக் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.3 கோடி நிதி ஒதுக்கி, தாழங்குடா பகுதியிலிருந்து தேவனாம்பட்டினம் வரை அப்பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காகக் கற்சுவர்கள் அமைத்து அங்கே மீனவர்கள் வாழ்விற்கு உதவிடும் வண்ணமாகப் பல அறிவிப்புகளைச் செய்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) இப்போது தேவனாம்பட்டினத்திலிருந்து அக்கரைகோரி வரை அந்த கடல் அரிப்பைத் தடுப்பதற்காக மீண்டும் விடுபட்ட இணைப்பிலிருந்து அந்தக் கற்களைக் கொட்டி தடுப்புச் சுவர் அமைத்துத் தந்து, அப்பகுதி மீனவ மக்களைக் காப்பாற்றிட உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், கடலூர் மிகவும் பின்தங்கிய மாவட்டம். கடலூருக்கென்று எந்தத் தொழிற்சாலையும் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, கடலூருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு மென்பொருள் பூங்காவை உருவாக்கித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐயப்பன். நேரம் முடிந்துவிட்டது. உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. கோ. ஐயப்பன்: இதுபோன்று தாயுள்ளத்தோடு பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களே, கடலூருக்கு ஒரு புதிய பேருந்து நிலையத்தினையும், கடலூருக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைகின்ற அந்த செயல்பாடுகளையும் விரைவில் செய்துமுடிக்க உதவிடுமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்வதோடு, சமூகப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசியது போதும். அடுத்து, திரு. கு. ஹசன் அலி. நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள்.

முற்பகல் 10-30

***திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் இறைவன்பாலிருந்து உண்டாவதாகுக!

இந்த அவையிலே நான் ஒவ்வொரு தரமும் நிற்கும்போதெல்லாம், என்னுடைய நேரத்திலே பாதி நன்றி கூறுவதற்கே எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஏனென்றால், என்னுடைய தொகுதியான இராமநாதபுரத்திற்கு கலைஞர் அவர்கள் அளித்ததைப் பட்டியலிட வேண்டுமென்றால் நீங்கள் தந்த அந்த 7 நிமிடங்கள் போதாது. இன்றைக்குக்கூட நான் எழுந்து நிற்கும்போது, முதற்கண் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இராமநாதபுரத்தைப் பாலை நிலமாக அறிவித்து, அங்கே தொல்காப்பிய மரபணு பூங்காவிற்கு இப்போது ரூ.9 கோடியே 60 இலட்சம் ஒதுக்கித் தந்திருக்கிற கலைஞருக்கு மறுபடியும் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இப்படி நாங்கள் கேட்டதையும் தந்து, கேட்காததையும் தருகிற காரணத்தால், வருகின்ற தேர்தலிலே கலைஞர் அவர்கள் யாரைக் கை காட்டுகிறார்களோ, அவர்களையே தேர்ந்தெடுப்போம் என்று, 4 தொகுதிகளும் எங்களுடைய கலைஞருக்கே தருவோம் என்று என்னுடைய தொகுதி மக்கள் உறுதியாக இருக்கிறார்கள். "போற்றுபவர்கள் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுபவர்கள் தூற்றட்டும்", கண்ணனை அசைப்பதற்கு முடியாது.

இந்த நன்றிகளை நான் சொல்லும்போது அது மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் சரி, எங்களுடைய மாண்புமிகு அமைச்சர் சுப. தங்கவேலன் அவர்கள் ஒரு அருமையான வாசகத்தின்மூலம் இந்த நன்றியைத் தெரிவித்திருந்தார்கள். அங்கே பேருந்து நிலையத்திலே வைத்திருக்கக்கூடிய ஒரு விளம்பரப் பலகையிலே எங்களுடைய அமைச்சர் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். 'அரசு கொடுப்பதற்கே நன்றி சொல்லி முடியவில்லை; இன்னும் அடுத்தடுத்துக் கேட்பதற்கு அஞ்சுதே என் நெஞ்சம்' என்று

அழகான வார்த்தைகளாலே எங்களுடைய அமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளை நான் இங்கே சொல்கிறேன். இந்த அவையினுடைய கவனத்தை நாம் எல்லோரும், இதிலே கட்சிப் பாகுபாடின்றி அத்தனை பேருமே சேர்ந்து முக்கியமாக இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறோம்.

இலங்கைக்கு அருகில் வெகு அருகில் இருப்பது இராமநாதபுரம் தொகுதி. நம்முடைய மீனவர்கள் சீனர்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாகச் சொல்வதால் இது இந்திய இறையாண்மைக்கு ஒரு சவாலாக விளங்குகின்றது.

உச்சிப்புளியில் கப்பல் படை விமான தளம் ஒன்று அங்கே அமைந்துள்ளது. இராமநாதபுரம் தொகுதி, உச்சிப்புளியிலே ஒரு கடற்படை ஓடு தளம் இருப்பதை, உடனடியாகத் தமிழக அரசு தலையிட்டு அதை இராணுவத் தளமாக மாற்றவேண்டும். அங்கே நம்முடைய விமானப் படைத் தளம் அமைக்கப்படவேண்டும். அது கடலோரப் பாதுகாப்புக்கு மட்டும் அல்லாமல் தென்னகத்துக்கே அரணாக விளங்குவதோடு, நம்முடைய மீனவர்களைப் பாதுகாப்பதற்கு airforce-ஐ நாம் உபயோகித்துக்கொள்ளலாம். நம்முடைய மீனவர்கள் மீது இனிமேல் ஒரு அடி பட்டால்கூட எவ்வளவு மோசமான விளைவுகளை அடித்தவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை நாம் காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, உச்சிப்புளி விஷயத்தை உடனடியாகக் கவனிக்கும்படி இந்த அரசாங்கத்தின் கவனத்தை நான் ஈர்க்கிறேன்.

அதுபோல N.H. 49 மதுரையிலே இருந்து இராமேஸ்வரத்திற்கு போடுவதாகச் சொல்லப்பட்ட 4 வழிப் பாதை, பரமக்குடியிலேயே நின்றுவிடும் என்று இப்போது சொல்கிறார்களே? இராமேஸ்வரம் என்பது இந்து மக்களைப் பொறுத்தவரைக்கும் காசி, பூரி, இவற்றிற்கு அடுத்தபடியாக ஒரு புனித ஸ்தலமாகக் கருதப்படக்கூடிய ஓர் இடம்.

அதுமட்டுமல்லாமல், அது ஒன்றுதான் அங்கே சிவனாலயமாக இருக்கிறது. அந்த சிவனாலயத்திற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். இலட்சக்கணக்கான யாத்ரீகர்கள் வருகிறார்கள். வெளி மாநிலங்களிலிருந்து, வெளி நாடுகளிலிருந்து வருகிறார்கள். உதாரணமாக, இரண்டு மாதங்களுக்கு முன்னாலே சிங்கப்பூர் ஜனாதிபதி அவர்களே இராமேஸ்வரம் வந்தார்கள். நான் அவர்களை அங்கே சென்று வரவேற்றேன். அங்கே அவர்

தங்குவதற்கான ஒரு சிறந்த விடுதியோ, உலகத் தரம் வாய்ந்த உணவு விடுதியோ இல்லை. அதுமட்டுமல்லாமல், அங்குள்ள விடுதிகளில் உள்ள கழிவு நீர் எல்லாம் அங்குள்ள தீர்த்தத்திலே கலந்து மக்களை முகம் சுளிக்க வைக்கிறது என்று நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே பதிவு செய்திருக்கிறேன். ஆகவே, இராமேஸ்வரத்தைப் பொறுத்தவரையில் ஒரு master plan-ஒரு சிறப்புக் கவனம் செலுத்தி, இந்த அரசு அதன் மேம்பாட்டிற்காகப் பலவிதத்திலும் உதவவேண்டும். குறிப்பாக, இராமேஸ்வரத்திலுள்ள மருத்துவமனையின் உட்கட்டமைப்பு மிகவும் மோசமாக இருக்கிறது. அதை அமைச்சருடைய கவனத்திற்கு நான் ஏற்கெனவே எடுத்துச் சென்றிருக்கிறேன். அதையும் சிறப்பாகச் செய்யவேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

சமீபத்தில் எங்களுடைய அன்புத் தலைவர், மக்கள் தளபதி ஐயா வாசன் அவர்கள், தூத்துக்குடி துறைமுகத்திற்கு வ.உ.சி. துறைமுகம் என்று பெயர் வைத்ததை தமிழ் மக்களெல்லாம் இன்று நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், தூத்துக்குடியிலிருந்து கொழும்புவிற்கு அவர்கள் கப்பல் போக்குவரத்தை அடுத்த மாதம் தொடங்க இருக்கிறார்கள் என்ற நற்செய்தியையும் நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். சரித்திரம் திரும்புவதுபோன்று இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கும் இந்தக் கப்பல் போக்குவரத்து தொடங்கவிருக்கிறது. எங்கள் ஐயா திரு. வாசன் அவர்கள், ஐயா கலைஞர் மீது மிகவும் பாசம் கொண்டவர்கள். மிகவும் மரியாதை வைத்திருப்பவர்கள். கலைஞர் அவர்கள், ஐயா வாசன் அவர்களிடம் துரிதமாகச் செய்யுங்கள் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும், உடனடியாக அது நிறைவேற்றப்படும் என்பதைக் கலைஞர் அவர்களுக்குச் சொல்லி, உடனடியாக அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்களே, மண்டபத்திற்கு நீங்கள் ஏற்கெனவே வந்திருக்கிறீர்கள். அங்கே கோழித் தீவனத்திற்கான ஒரு அடிக்கல்லைக்கூட நாட்டினீர்கள். அந்த மண்டபம் எப்படிப்பட்டதென்றால், எழில் சார்ந்த அந்த மண்டபம் Dr. Rin என்ற வெள்ளைக்காரர் காலத்திலே சொல்லப்பட்டது. ஏதாவது ஓர் இடத்தில் கடல்சார் பல்கலைக்கழகம் (Marine University)

அமைக்கப்பட வேண்டுமென்றால், மண்டபம்தான் அதற்குப் பொருத்தமான இடம். ஏனென்றால், அருமையான உயிரினங்கள், மிகக் காணக் கிடைக்காத உயிரினங்களெல்லாம் இருக்கின்ற கடல் அங்கே இருக்கிறது. ஆகவே, அங்கு கடல்சார் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கவேண்டும். அப்படி முடியவில்லையென்றால், அதன் சார்புடைய ஒன்றையாவது அங்கு அமைத்து, மக்களுக்குப் பயன்படும்படி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசும்பொழுது, உருதுவின் முக்கியத்துவம் பற்றியும், சிறுபான்மையினருக்கு அதைப் படிக்க வசதி செய்ய வேண்டியதைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். கலைஞர் அவர்களுக்கு நான் மீண்டும் மீண்டும் நன்றியாகச் சொல்வேன். கேரளாவில் உள்ளதுபோல் முஸ்லீம்களுக்கு 3.5% உள் ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், சமீபத்தில் 5% வழங்குவதை நான் பரிசீலிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முடிப்பதற்கு முன்னால் சில எண்ணங்களை நான் பகிர்ந்துகொள்கிறேன். இங்கே அமர்ந்திருந்த எங்களுடைய C.L.P. Leader திரு. சுதர்சனம் அவர்களை நான் இன்று நினைத்துக்கொள்கிறேன். என்னுடைய நெருங்கிய நண்பர் திரு. ஜெயபால் அவர்களை நினைத்துக்கொள்கிறேன். திரு. ஊர்வசி செல்வராஜ் அவர்களை நினைத்துக்கொள்கிறேன். திரு. போளூர் வரதன் அவர்களை நினைத்துக்கொள்கிறேன். இவர்களுடைய எண்ணங்களையெல்லாம், இந்த ஐந்து ஆண்டுகளாக இவர்களோடு பழகிய எண்ணங்களையெல்லாம் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நீங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நான் ஒவ்வொரு முறை பேசும்பொழுதும் உங்களுக்கெல்லாம் சாந்தியும், சமாதானமும் உண்டாக வேண்டுமென்றுதான் பேசியிருக்கிறேன்.

கலைஞர் அவர்களோடு ஒன்றாக அமரக்கூடிய பாக்கியத்தைப் பெற்றவனாக இருக்கிறேன். பேராசிரியர் அவர்களோடு, சுறுசுறுப்பிற்குப் பெயர்போன துணை முதல்வர் அவர்களோடு அமரக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைப்பதற்குக் காரணமாக இருந்த எங்களுடைய அன்புத் தலைவர் திரு. வாசன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முடிப்பதற்கு முன்னால் ஒன்றே ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

"வித்யாம் சவித்யாம் சயஸ்தத்
வேதோ பயக்ம் ஸக
அவித்யாம் ருத்யும்
வித்யாம் ருத மச்நுதே."

'ஞானத்தை யார் அறிகின்றானோ, தன்னுடைய நற்செயல்களை யார் அறிகின்றானோ, அவன் மரணம் அடைவதில்லை. மரணத்தைக் கடக்கின்றான். தன்னுடைய நற்செயல்களால் யார், யாருக்கு நற்செயல்களைச் செய்தானோ, அவன் என்றும் வாழ்கிறான்' என்று உபநிஷத்துக்கள் சொல்வதுபோல, கலைஞர் அவர்கள் மரணத்தைக் கடந்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் இருக்கும்வரைக்கும் அவர் வாழவேண்டும். உங்கள் எல்லோருக்கும் சாந்தியும், சமாதானமும் நிகழ வேண்டும். நம் எல்லோருக்கும் ஆண்டவனுடைய அருள் கிடைக்கவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

முடிப்பதற்கு முன்னால், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் தன்னுடைய மரணத்திற்கு முன்னால் கலைஞர் அவர்களுடைய கையைப் பிடித்து, நான் இன்னும் சிறிது நாளில் இறந்துவிடுவேன். தம்பி, இந்தச் சிறுபான்மையினருக்கு நீங்கள்தான் உதவியாக இருக்கவேண்டுமென்று சொன்னார். அதை அவர்களுக்கு நினைவுபடுத்தி விடைபெறுகிறேன். வாழ்த்துக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *10-40*

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், காளியம்மன்பட்டி, அருள்மிகு காளியம்மன் கோயிலுக்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்

அவர்கள், தங்களுடைய கவனத்தையும், அவையினுடைய கவனத்தையும் ஈர்க்கின்ற வகையிலே இங்கே ஒரு விவரத்தைச் சொல்லியிருந்தார்கள். அதுபற்றிய பதிலை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். குடியாத்தம் பிச்சனூர் அருள்மிகு காளியம்மன் திருக்கோயிலில் ஏறத்தாழ 1.4 ஏக்கர் நிலத்தை அபகரித்துவிட்டதாகவும், அங்கே மாறுதல்கள் செய்யப்பட்டு இப்போது தனியார் கல்லூரியினர் வேலி அமைத்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பிரச்சினைக்குரிய அந்த 1.4 ஏக்கர் நிலம் தற்போதும் திருக்கோயில் வசம்தான் இருக்கிறது. இது ஆண்டுதோறும் ஏலத்திற்கு விடப்பட்டு அதிலே சாகுபடியாளர்கள் தொடர்ந்து கரும்பு பயிரிட்டு வருகிறார்கள். நிலைமை இவ்வாறிருக்க, 10 ஆண்டுகளுக்கு முன்னர் 3 பெயர்களில் அப்போது அறங்காவலராக இருந்த பிரகாசம் என்பவர் பத்திரப் பதிவுகளைச் செய்திருப்பதாக அறிய வந்திருக்கிறது. 25 நாட்களுக்கு முன்னர் திருமதி சாந்தா, க/பெ. இராமகிருஷ்ணன், அதைபோல் ரேகா, க/பெ. இராமகிருஷ்ணன் என்பவரும் சத்யாவதி, க/பெ. சக்ரவர்த்தி ஆகிய மூவரும் இந்த நிலத்திலே கல் ஊன்றி வேலி அமைக்க முற்பட்டனர். இதையறிந்த உதவி ஆணையர் அசோக்குமார் உள்ளிட்ட அறநிலையத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அந்த இடத்திற்குச் சென்று அங்கே நடப்பட்ட கல் மற்றும் வேலியை அப்புறப்படுத்தி, இந்த இடம் திருக்கோயிலுக்குச் சொந்தமானது என்று விளம்பரப் பலகை அமைத்திருக்கிறார்கள். ஆனால், இப்போதும் அங்கே கரும்பு பயிரிடப்பட்டு இருக்கிறது என்பதும், அந்த நிலம் திருக்கோயிலின் வசம் இருக்கிறது என்றும், இதுசம்பந்தமாக, சம்பந்தப்பட்ட மூவர் மீதும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரிடத்திலே வழக்குப் பதிவு செய்யப்பட்டு இந்தத் தவறிழைத்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அது நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இராமேஸ்வரத்திற்கு ஒரு

முழுமைத் திட்டம், master plan தேவையென்று கோரிக்கை வைததார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியப் பெருந்தகை அவர்களால் அளிக்கப்பட்ட 2011-2012 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பது 13-வது சட்டமன்றத்தின் 16-வது கூட்டம். இது நிறைவுக் கூட்டம். இன்று நிறைவான நாள் என்பதைச் சுட்டிக்காட்டுகிற அதேவேளையில், இம்மாமன்றத்திற்கு 16-வது கூட்டம் என்பது நம்மைப் போன்றவர்கள் வரலாம், போகலாம் என்றாலுங்கூட, 16 என்பது என்றும் 16 என்று நினைவுகூர்வதைப்போல, இந்த மாமன்றம் என்றும் நிலைத்திருக்கும். யாரும் வரலாம், போகலாம் என்பதைத்தான் உணர்த்துகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடு சட்டமன்றத்திற்கெனத் தனிச் சிறப்புகள், தனி வரலாறுகள் உண்டு. இம்மாமன்றத்தின் போற்றுதலுக்குரிய, பெருமைக்குரிய தலைவர்கள் பணியாற்றிய, அவர்களிலே குறிப்பிடத்தக்க பெரியவர்கள் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், டாக்டர் சுப்பராயன், மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, பெருமைக்குரிய ப. ஜீவானந்தம், பெரியவர் பக்தவச்சலம், குடியரசுத் தலைவராக இருந்த மதிப்புக்குரிய வெங்கட்ராமன், பசுமைப் புரட்சியை உண்டாக்கிய திரு. சி. சுப்ரமணியம், உண்மையின் சிகரம் கக்கன், உழைப்பின் உயர்வு திரு. ஏ. கோவிந்தசாமி, அதைப்போல மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். போன்றவர்களும் இருந்த இதே மாமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, 5 முறை முதலமைச்சராக, 50 ஆண்டுக் காலம் சட்டமன்றப் பேரவையினுடைய அனுபவமிக்க தலைவராக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர், மூத்த தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற இந்த வேளையில், பல்வேறு சோதனைகளையெல்லாம் கடந்து இன்று இளம் வயதில்

துணை முதலமைச்சர் என்ற பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு தளபதி அவர்களையும் எண்ணிப் பார்த்து, இந்த அரசுக்கு உறுதுணையாக இருக்கிற அவை முன்னவர் போற்றுதலுக்குரிய பெருமகனார் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், இந்த அவையை 5 ஆண்டுக் காலம் செவ்வனே நிறைவேற்றிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் முன்னாள் முதலமைச்சராக, இன்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற அம்மையார் அவர்களுக்கும், எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்ற சட்டமன்றக் கட்சியின் தலைவர்களுக்கும், அதைப்போலவே திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சி, இந்திய பொதுவுடைமைக் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் மற்றும் நியமன உறுப்பினர் என்று 235 உறுப்பினர்கள் பணியாற்றிய இந்த மாபெரும் அவைக்குதான் இன்று நிறைவு செய்கின்ற கூட்டம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த அவையின் கண்ணியத்தையும், பெருமையையும் எண்ணிப்பார்க்கிறோம்.

முற்பகல் 10-45

அதேபோல, அவை சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைத்த நம்முடைய சட்டமன்றச் செயலாளர், அவருக்கு உறுதுணையாக இருந்த சட்டமன்ற அலுவலர்கள் இந்த ஆட்சிக்கும் நம்மைப் போன்றவர்களுக்கும், எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களுக்கும் உறுதுணையாக இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட அத்துணை அரசுத் துறைகளின் அதிகாரிகளின் செயல்பாடுகளையும் எண்ணிப்பார்க்கின்ற அதேவேளையில், இந்த மாமன்றத்தில் எங்களுக்கெல்லாம் நெருக்கமாக இருந்த, அன்றும், என்றும் எங்களுக்கு உறுதுணையாக இருந்து பேசிப் பழகி வந்த சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், பெருமதிப்பிற்குரிய சுதர்சனம் அவர்களும், அவரைப்போல நம்மோடு இடம்பெற்றிருந்த சில உறுப்பினர்களும் இல்லையே என்கிற வேதனையையும் இந்த நேரத்திலே எண்ணிப்பார்க்கிறோம். ஆகவே, மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு இந்த அவையில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து ஆண்டுக் காலம் நிறைவு செய்த இந்த வேளையில், சட்டமன்ற நிகழ்வுகளில் எதிரும் புதிருமான கருத்து மோதல்கள், அனல் பறக்கும் வாதங்கள், கட்சியின் கொள்கைகள், நிலைப்பாடுகள் குறித்து தடித்த வார்த்தைகளால் மோதினாலும் இன்றுவரை பேரன்வைக் கூட்டங்கள் சுமுகமாக நடந்தேறி நிறைவு பெறுவது தமிழர்களின் சிறப்புகள்; இது தமிழ்நாட்டின் பெருமை; இது தமிழர்களின் பண்பு என்பதை எண்ணிப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மாமன்றத்தில் பிரியா விடை பெற்றாலும் மீண்டும் அனைவரும் வருவோம், சந்திப்போம், மக்கள் பணியாற்றுவோம் என்பதை இந்த மாமன்றத்தில் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப்போல, இந்த மாமன்றத்திற்கு எங்களையெல்லாம் அனுப்பி வைத்தவர், தந்தை பெரியாரின் சமூக நீதிக் கொள்கையை உயிர் மூச்சுக் கொள்கையாகக் கொண்டவர் மக்களின் வாழ்வுரிமைக்கான உயரிய கொள்கைகளை, செயற்கரிய செயல் திட்டங்களை வடிவமைத்து செயலாற்றி உருவாக்கியதுதான் இந்த பாட்டாளி மக்கள் கட்சி. இந்த அரசியல் பேரியக்கத்திலும் சமூக நீதி வேண்டுமென்று பிற்படுத்தப்பட்ட ஒருவருக்கு கட்சியின் தலைமைப் பொறுப்பு, பட்டியல் இனத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்டவர் கட்சியின் பொதுச் செயலாளர், இஸ்லாமியர், கிறித்தவர் போன்ற ஒரு சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்தவர்தான் கட்சியின் பொருளாளர் என்ற கட்சியின் விதியையும் உருவாக்கி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை அமைப்புகளில் பெண்களுக்கும் உரிமை வேண்டுமென்கிற ஒரு அமைப்பு விதியை உருவாக்கி, எல்லாப் பணிகளுக்கும் பயிற்சி இருக்கிறது; அதைப்போல, அரசியல் பணிகளிலேயும் பயிற்சி வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி என்ற அரசியல் பயிலரங்கத்தை உருவாக்கி அரசியல் பயிற்சி அளித்து அதுமட்டுமல்ல; எந்தப் பதவிக்கும் செல்லாத இந்த இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிற மாமனிதர், சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்கள்தான் இங்கே எங்களைப் போன்றவர்களையெல்லாம் அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிப் பெருமைப்படுகிறேன்.

அதைப்போல, இந்தியத் திருநாட்டின் அமைச்சரவையில் ஒரு இளைஞர், அதுமட்டுமல்ல, பல்வேறு சோதனைகளையெல்லாம் கடந்துவந்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைப்போல,

ஒரு இளைஞர்; தமிழ்நாட்டிலிருந்து டெல்லிக்குச் சென்று, இந்தியாவினுடைய 80 அமைச்சர்களுள் உயரிய விருதுகளையெல்லாம் பெற்ற, சாதனை படைத்த உலக நாட்டின் உயர்ந்த தலைவர்களான பில் கிளிண்டன், ஜார்ஜ் புஷ், பில்கேட்ஸ் போன்ற அந்த உயர்ந்த மனிதர்கள் பெற்ற விருதைப் பெற்று, இந்திய நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்த 108 என்ற ஆம்புலன்ஸ் வண்டியை இந்திய நாட்டிற்கு வழங்கிய பெருமைக்குரிய எங்கள் இயக்கத்தாலே சின்ன அய்யா என்று போற்றப்படுகிற மாண்புமிகு மருத்துவர் இரா. அன்புமணி அவர்களின் ஆலோசனைப்படி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் இடம் பெற்றிருக்கிறோம்.

முற்பகல் 10-50

சாமானியனான என்னைப் போன்றவர்களை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி, உங்களோடு பழகுகின்ற வாய்ப்பினை வழங்கி, அதிலும் குறிப்பாக இளம் வயதிலேயிருந்து உண்மையாக, எளிமையாக இருக்கவேண்டும்; உறுதியாக இருக்கவேண்டும். அடக்கத்தோடு இருக்கவேண்டும்; என்றும், லஞ்ச லாவண்யம் இல்லாமல் பணியாற்றவேண்டும் என்று, அடக்கத்தோடு பணியாற்றி வந்த எனக்கு இந்த மாமன்றத்தில் ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு பெருமகனார் முதலமைச்சர் அவர்கள் உள்ளிட்ட இந்த அவையிலே இருக்கின்ற உங்கள் அத்துணை பேருக்கும் மீண்டும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, நன்றி, நன்றியென நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

இன்று, இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றுகிற வாய்ப்பைப் பெறுகிற இந்த நல்ல நேரத்தில், பல்வேறு திட்டங்களையெல்லாம் 2006-இல் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பிலே வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு, நுழைவுத் தேர்வு இரத்து, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரசி, விவசாயிகளின் கடன் தள்ளுபடி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி போன்ற பல்வேறு திட்டங்களையெல்லாம், இன்னும் நிறைய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி இன்று இறுதிக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு எண்ணிப்பார்க்கிற அதேவேளையில், இந்த அரசுக்கு ஆதரவான கருத்துகள், எங்கள் இயக்கத்திற்கு எது தேவை என்பதைச் சுட்டிக்காட்டுகிற பல்வேறு கருத்துகள்

இருந்தாலும்கூட, அதையெல்லாம் எடுத்து வைத்த நேரத்தில், இந்த அரசு பாட்டாளி மக்கள் கட்சி முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றியதை எண்ணிப் பார்க்கிறோம்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், நுழைவுத் தேர்வு இரத்து, சென்னை துணை நகரத் திட்டம் கைவிடப்பட்டது, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி துவக்கம், அரசுக் கல்லூரிகள் துவக்கம், தனியார் கல்வி நிறுவனங்களில் கட்டணம் குறைப்பு, கல்விக் கட்டணம் இரத்து, பணி மூப்பு அடிப்படையில் பணி நியமனம், பி.எட். உள்ளிட்ட அனைத்து வகை ஆசிரியர்கள் நியமனம், தமிழ்வழிக் கல்வி, வேலை இழந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீண்டும் பணியமர்த்தம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரால் விளைநிலங்களைக் கையகப்படுத்துவதைக் கூடாது என்ற திட்டம், இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு, அருந்ததியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு, சமச்சீர் கல்வி, கடலுக்கு வீணாகச் செல்லும் நீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்துவது, லாட்டரிச் சீட்டு ஒழிப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகள்.

இன்று சட்டமன்ற மேலவை வர வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கை, பாட்டாளி மக்கள் கட்சியினாலே இந்த மாமன்றத்தில் தீர்மானத்திற்கு வந்த நேரத்தில் அதற்குப் பா.ம.க. மனமுவந்து ஏற்று தீர்மானம் நிறைவேற்றுவதற்கு வாக்களித்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தனிநபர் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மருத்துவர் அய்யா அவர்களின் வழிகாட்டுதல்படி, இந்த சாமானியன் கொண்டுவந்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியது. தமிழ்வழிக் கல்வி, உயர் நீதிமன்றத்தில் தமிழ், காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற அனைத்துக் கட்சி கூட்டம், பிரதமரைச் சந்திக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்த நேரத்தில் ஏற்றுக்கொண்டதுபோன்ற, பல்வேறு கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் ஏற்றுக்கொண்டதை இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கிறோம்.

பா.ம.க. சார்பில் இந்த மாமன்றத்திலேயும், வெளியிலேயும் குரல் கொடுத்து இன்னும் முழு அளவில் நிறைவேற்றப்படாமலும், ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டதுமான தந்தை பெரியாரின்

வகுப்புவாரி பிரதிநிதித்துவமான எல்லா சமுதாய மக்களுக்கும் உரிய இட ஒதுக்கீடு, வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு, கிறித்தவ வன்னியர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்தல், தலித் கிறித்தவர் எஸ்.சி., பட்டியலில் சேர்த்தல், தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு, 69 விழுக்காட்டுக்குப் பதிலாக 100 விழுக்காடு இட ஒதுக்கீடு சட்டத் திருத்தம், மாநிலங்களின் நிலைமைக்கேற்ப அந்தந்த மாநிலங்களிலே இட ஒதுக்கீட்டுக் கொள்கையை வகுத்துக் கொள்ளுதல், உயர் நீதிமன்றங்களில் தமிழ் உள்ளிட்ட எங்கும் தமிழ், எதிலும் தமிழ், கூடுதல் கல்விக் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்து நிறுத்துதல், தமிழர் கலாச்சாரம், பண்பாடு காத்தல், மது ஒழிப்பு, கல்விப் புரட்சி, சாதிவாரிக் கணக்கெடுப்பு, வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை, இலங்கைத் தமிழர் வாழ்வுரிமைக்குப் போராடி தினமும் அழிக்கப்பட்ட அவலநிலை, காவிரி, பாலாறு, முல்லைப் பெரியாறு பிரச்சினை, தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிப்பு, கச்சத் தீவு மீட்பு, நதிகள் இணைப்பு, பின்தங்கிய மாவட்டங்கள் சமச்சீர் வளர்ச்சிப் பெற வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள், இவையெல்லாம் ஓரளவு நிறைவேற்றப்பட்டும், முழு அளவிலே நிறைவேற்றப்படாமல் இருந்தாலும்கூட, பாட்டாளி மக்கள் கட்சி அதற்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும், வாதாடும் என்பதை இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இடையிலே, என்னுடைய தொகுதிப் பிரச்சினை. நிறைவு பெறுகிற இந்த நல்ல நாளில் வாக்களித்து மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த மேட்டூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், தேர்தல் நேரத்தில் எனக்காக உழைத்திட்ட நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவரான மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுக்கெல்லாம் வழிகாட்டி அனுப்பிய மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்கள் கட்சிக்காரர்களுக்கும், வாக்களித்த தொகுதி மக்களுக்கும் மீண்டும் நன்றியுணர்வை காணிக்கையாக்கிக்கொள்கிறேன். என் தொகுதியினுடைய மேம்பாட்டிற்கு, தொடர்ந்து இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்து வந்து மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் எவ்விதத் தொழில் வசதியும் இல்லாத, முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பி வாழ்கிற அந்தப் பகுதி மக்களின் வேளாண்மை மேம்பாட்டுக்குத் தோனிமடுவு பாசனத் திட்டம், நிறைவேற்றாமல்

கிடப்பிலே இருக்கிற ஒரு திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்கிறேன்.

முற்பகல் 10-55

பாலமலையிலே 33 கிராமங்கள், மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதி, சாலை வசதி இல்லாதது, மேட்டூர் நகரப் பேருந்து நிலையம் அருகிலே இருக்கிற மின் வாரிய இடத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை, மேட்டூர் நகர பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டு, இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பது, மேட்டூர் நகருக்கு நவீன சுத்திகரிப்பு நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்து, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களாலே ரூபாய் 12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்னும் பணி துவங்கப்படாத நிலை, குளத்தூர் ஒன்றியத்தில் காவிரிக் குடிநீர்த் திட்டம் எல்லாக் கிராமங்களுக்கும் வழங்குதல், அதைப்போல, எடப்பாடி தொகுதி, தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் தொகுதி, மேட்டூர் தொகுதி உட்பட, சேலம் மாவட்டம் முழுவதும் எல்லாக் கிராமங்களுக்கும் காவிரிக் குடிநீர்த் திட்டம் வழங்குவது, மேட்டூருக்குப் பொறியியல் கல்லூரி அல்லது பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி வழங்கவேண்டுதல், அதற்கும் மேலாக இப்பொழுது மேட்டூர் அணை 16 கண் பாலம் பழுதடைந்து, போக்குவரத்தும் மாற்றப்பட்டு மக்கள் எல்லோரும் போராடிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், புதியதாக ஒரு பாலம் கட்டிக் கொடுக்கவேண்டிய கோரிக்கை, அதைப்போலவே கோல்நாயக்கன்பட்டி ஊராட்சிப் பகுதியில் நீர் மின்சாரத் திட்டத்திற்கு நிலம் எல்லாம் கையகப்படுத்தப்பட்டு, நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு நேர்காணலும் நடத்தப்பட்டு, இன்னும் 14 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படாத நிலை, மேட்டூர் அணை பூங்காவை மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் நிதி ஒதுக்கீடு, செக்கானூர் கதவணை மின் நிலையத்தில் போக்குவரத்துக்குத் தடையாக இருப்பதைக் கதவு திறந்துவிடச் செய்தல், அதைப்போலவே, மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வாழ்விழந்த நிலையில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பயன்கிடைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, மேட்டூருக்குத் தொழிற்பேட்டை அறிவிக்கப்பட்டு, இன்னும் துவக்கப்படாதது, சத்தியாநகர் ஆரம்ப சுகாதார நிலையம்,

சந்தைதானம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றைத் தரம் உயர்த்த வேண்டுதல், மேட்டூர் அணையில் மீன் பிடிக்கும் உள்நாட்டு மீனவப் பெருமக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், மேட்டூர் நகரில் மனைப் பட்டா வழங்குதல் இவற்றை எல்லாம் நிறைவேற்ற வேண்டுவதோடு, என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர்களுக்கு அதைப்போல தமிழ்நாடு முழுவதும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்காதவர்களுக்கும், இலவச எரிவாயு அடுப்பு வழங்காதவர்களுக்கும் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த நேரத்திலே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

தொடர்ந்து இந்த மாமன்றத்திலே நான் வலியுறுத்தி வந்தது தந்தை பெரியாரினுடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கை, வகுப்புவாரி பிரதிநிதித்துவம். நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னாலும்கூட, இன்று சமூக நீதிக்கு வித்திட்ட தமிழ் மண்ணில் எல்லாச் சமுதாய மக்களுக்கும் உரிய இட ஒதுக்கீடு கிடைக்கின்ற வகையிலே இட ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்தவேண்டும். அதைப்போல வன்னியர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு கிடைக்கவேண்டும். இப்படி எல்லாச் சமூக மக்களுக்கும் இட ஒதுக்கீடு கிடைப்பதற்கு அடித்தளமாக இருக்கிற சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்பது உள்ளிட்ட இந்தக் கோரிக்கைகளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். இவற்றையெல்லாம் முன்வைக்கிற வேளையில், சென்னை, உயர் நீதிமன்றத்திலே இருக்கிற ஒரு பிரச்சினை. அதுமட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் அரசுத் துறைகளில் இருக்கிற எல்லாச் சமுதாய மக்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கொள்கையை முன்வைக்கிற வேளையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் இருக்கிற மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 60 பேர். அதில் தற்போது உள்ளவர்கள் 51 பேர். தமிழ்நாட்டைச் சேர்ந்த வெளி மாநில உயர் நீதிமன்றத்தில் பணியாற்றக் கூடியவர்கள் 4 பேர். ஆகமொத்தம் 55 பேர். இதில் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர், 7 பேர், 6 பேர், 5 பேர், 4 பேர், 3 பேர், 3 பேர், 3 பேர், 4 பேர் என்று பல்வேறு சமுதாய மக்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆனால், பெரிய சமுதாயமான வன்னியர்களுக்கு ஒரே ஒரு நீதிபதி. இன்னும் பல்வேறு சமுதாயங்களுக்கு நீதிபதிகள் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து

வலியுறுத்தினார்கள். அப்படி வலியுறுத்தி வந்த வேளையிலுங்கூட, தற்போது 7 பேர் பெயர் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த 7 பேரில் ஒருவர்கூட வன்னியர் இல்லை என்பது வேதனையான செய்தி. நான் இப்பொழுது அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இந்த அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் தமிழக அரசின் சார்பிலே பரிந்துரைக்கப்பட்டதா, பரிந்துரைக்கப்படாமலே சென்றுள்ளதா என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிற அதேவேளையில், இதை எண்ணிப் பார்த்தால் இன்னும் 5 ஆண்டுகளுக்கு உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனமே இல்லாமல் போய்விடும். 5 ஆண்டுகளுக்கு மிகப் பிற்படுத்தப்பட்ட, பெரும்பான்மை மக்களாக இருக்கிற அந்த வன்னியர் சமுதாயத்திற்கு ஒரு பிரதிநிதித்துவம்கூட கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போகும் நிலையில், இருக்கிற ஒருவரும் ஓய்வு பெற்றுவிடுவார். ஆக, ஒருவர்கூட இல்லாத நிலை. ஆன காரணத்தினாலேதான், மாநில அரசின் சார்பிலே நீங்கள் அந்த பரிந்துரைப் பட்டியலை மீண்டும் பெற்று, இதைச் சரிபார்த்து, மிகப் பிற்படுத்தப்பட்ட வன்னியர்களைச் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் *11-00*

தமிழ்நாட்டினுடைய, இந்தியத் திருநாட்டினுடைய ஆதாரத் தொழிலாக இருப்பது வேளாண்மைத் தொழில். அந்த வேளாண்மைத் தொழில் நாளுக்கு நாள் நலிந்து வருகிறது. இப்பொழுது வேளாண்மைத் தொழில் நலிந்து, நகர்ப்புறத்திலே இருப்பவர்கள் கிராமத்தை நோக்கிச் செல்லுகின்ற நிலை மேலோங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, வேளாண்மை இலாபகரமாக நடந்தால்தான், மற்ற எல்லாத் தொழில்களின் வளர்ச்சிக்கும் அது ஏதுவாக அமையும் என்ற காரணத்தினாலே, இந்த வேளாண் துறையில் புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டுவர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இதை நிறைவேற்றுவதற்கு, வேளாண் துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கை வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறோம்.

இன்னும் ஒன்று; விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை இல்லை என்ற ஒரு

ஏக்கம் உள்ளது. அதேநேரத்தில், வாங்கிப் பயன்படுத்தக்கூடிய நுகர்வோருக்குக் கூடுதான விலையில் பொருள் கிடைக்கிறது. இதை எண்ணிப் பார்க்கிற வேளையில், உற்பத்தி செய்பவனுக்கு விலை குறைவு, பயன்படுத்துபவர் அதிக விலை கொடுத்து வாங்குவது, இதற்கு இடையிலே இருப்பவர், இடைத்தரகருக்குக் கொள்ளை இலாபம் என இதைப் போக்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இதே மாமன்றத்தில் பல்வேறு உறுப்பினர்களால் பல கருத்துகள் சொல்லப்பட்டன. என்ன கருத்து என்று சொன்னால், விலைவாசி உயர்ந்திருக்கிறதென்ற ஒரு கருத்து. இன்னொரு பக்கம் வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறதென்று மாறுபட்ட கருத்து. இப்பொழுது சொல்லுகிறேன், விலைவாசி உயர்ந்தது உண்மை. ஆனால், அரசு எடுத்த முயற்சியால் விலைவாசி தற்பொழுது சற்றுக் குறைந்திருக்கிறது. அதை ஏற்றுக்கொள்கிறோம், மறுக்கவில்லை. இருந்தாலுங்கூட, இன்னும் விலைவாசியைக் குறைப்பதற்கு மத்திய அரசும், மாநில அரசும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன். இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு, பதுக்கல், ஊகபேர வர்த்தகம் என்று சொல்லுகிற Online trading. இதை முழுமையாகக் கட்டுப்படுத்தவேண்டும். இதற்கு மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்பட்டால்தான் அந்தப் பதுக்கல்காரர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கினால்தான், இது நிறைவேறும் என்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; விவசாயத்திற்கு அடுத்த பெரிய தொழிலாக இருப்பது நெசவுத் தொழில். இந்த நெசவினுடைய நிலை என்ன? நெசவை எடுத்துக்கொண்டால், திருப்பூர், கோவை, ஈரோடு, சேலம், கரூர், நாமக்கல், மதுரை, விருதுநகர் என்று பல்வேறு மாவட்டங்கள் நலிவடைந்து, அதனுடைய தொழில் முதலீட்டாளர்களும் நலிவடைந்துள்ளனர். தொழிலாளர்களும் வேலையிழந்து உள்ளனர். பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் இன்று சோதனைக்கு ஆளாகியிருக்கிற காரணத்தினாலேதான், இந்த நெசவுத் தொழிலை மேம்படுத்தவேண்டும். அதுமட்டுமல்ல; ஏறியிருக்கிற பருத்தியின் விலையைக் குறைப்பதற்கும், பருத்தி ஏற்றுமதியைத் தடை செய்வதற்கும் தமிழக அரசு முயற்சி எடுக்கவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினீர்கள். நடுவண் அரசை வலியுறுத்தினீர்கள். இருந்தாலுங்கூட, இன்னும் கோரிக்கை

நிறைவேறாத காரணத்தினாலே, அதைத் தொடர்ந்து நிறைவேற்றி, இரண்டாவது பெரிய தொழிலாக இருக்கிற நெசவுக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

மூன்றாவது பெரிய தொழில், மீன் பிடித் தொழில். கடலோர மாவட்டங்கள், கடல்வாழ் மீனவர்கள், உள் நாட்டு மீனவர்கள், இவர்களெல்லோரும் சோதனையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய வாட்டத்தைப் போக்கவேண்டும். மீன் பிடித் தொழிலுக்குப் புத்துயிர் கொடுக்கவேண்டும். அதேநேரத்தில், இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் கடத்தப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும், மீன்களை எடுத்துச் செல்லுவதும், வலையை அறுத்து வீணாக்குவதும் போன்ற தொடர் சம்பவங்கள் தொடர் கதையாக நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலுங்கூட, நிரந்தரத் தீர்வு இல்லை. இந்த நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுக்க வேண்டும். நிரந்தரத் தீர்வின் ஒரு வழிதான் கச்சத் தீவு மீட்பு என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் *11-05*

வேளாண்மைக்கு ஆதாரமாக இருப்பது பாசனம். இந்தப் பாசனத்திற்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பல்வேறு கோரிக்கைகளை நாங்கள் முன்வைத்து வருகிறோம். இப்பொழுது அரசும் அவற்றை ஏற்றுக்கொண்டு சில திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. இருந்தாலுங்கூட, நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, 1857 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தின் தலைமைப் பொறியாளராக இருந்த சர். ஆர்தர் கார்ட்டன் என்ற பெருந்தகை, நதிகள் இணைக்கும் திட்டத்தைப் பரிந்துரை செய்தார். அதற்குப் பின், இந்திய வைசிராயின் அமைச்சரவையில் அங்கம் வகித்த சர். சி.பி. இராமசாமி அய்யர், கங்கை-காவிரி இணைப்பிற்கு முயற்சி செய்தார். இருப்பினும் இந்தத் திட்டம் இன்று வரையில் நிறைவேறவில்லை என்பது நமக்கு வேதனை அளிக்கிறது.

உதாரணத்திற்குச் சொன்னால், பூமியின் மேற்பரப்பில் ஆறுகளாக ஓடிவரும் தண்ணீரின் அளவு இந்திய அளவில் 65,415 டி.எம்.சி. அடி, அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட கணக்கின்படி,

விவசாயம், குடிநீர், தொழிற்சாலை ஆகியவற்றின் பயன்பாட்டிற்கு நம்முடைய நாடு எடுத்துக்கொண்ட தண்ணீரின் அளவு 21,175 டி.எம்.சி. அடி. ஆக, பயன்படுத்தியதுபோக, மீதித் தண்ணீர் எல்லாமே கடலில் வீணாகக் கலக்கிறது. இப்படிக் கடலில் வீணாகக் கலக்கும் தண்ணீரின் அளவு 44,240 டி.எம்.சி. அடி. ஆக, நாம் பயன்படுத்தும் நீரின் அளவைவிட இரண்டு மடங்கு வீணாகக் கடலுக்குச் செல்கிறது. இதைப் பயன்படுத்துவதற்கான திட்டம் வேண்டும். ஆகவேதான், நதிநீர்ப் பயன்பாட்டில் உரிய திருத்தங்கள் கொண்டுவருவது சாலப் பொருத்தம் என்பதை எல்லோரும் சொல்லி வந்தாலும்கூட, அது நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும், இதில் ஒரு கிரியா ஊக்கியாக இருந்து, நடுவண் அரசை வலியுறுத்தவேண்டும்.

உதாரணமாக, நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் இணைக்க தேசிய நீர்வழிச்சாலைத் திட்டம், மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இதை நிறைவேற்றுவதற்கு ரூபாய் 5 இலட்சத்து 60 ஆயிரம் கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதையெல்லாம் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு நிதி, மாநில அரசு நிதி என்று பல்வேறு நிதிகளைப் பெறுவதோடுமட்டுமல்லாது, உலக வங்கியினுடைய கடனைப் பெறுவது, நபார்டு வங்கியினுடைய கடனைப் பெறுவது மட்டுமல்லாமல், ஒரு திட்டமாக, அந்தந்தப் பகுதியிலேயிருக்கிற பொதுமக்களை ஒரு மாத காலத்திற்கு இந்தக் கால்வாய் இணைப்புப் பணியில் பயன்படுத்துவது என்று சொன்னால், பொது மக்கள் தாங்களாகவே முன்வரக்கூடிய நிலை ஏற்படும். ஆன காரணத்தினாலே, இந்த நதிகள் இணைப்புத் திட்டத்திற்குத் தமிழக அரசு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, நாட்டிலே இருக்கிற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள், ஊராட்சி எழுத்தர்கள், குடிநீர் விநியோகிப்பாளர்கள்—tank operators—போன்ற பணியாளர்கள், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், நியாய விலைக் கடைப் பணியாளர்கள் இவர்களெல்லாம் கோரிக்கைகள் வைத்துள்ளார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்; கல்வித் துறையிலே அவர்களின் பணிச் சுமைக்கேற்ற ஊதிய உயர்வு வேண்டும்; தங்கள் அலுவலகத்தில் தங்களுக்குக் கீழே பணியாற்றக்கூடிய கண்காணிப்பாளருக்கு மேலே ஊதியம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றவேண்டும். அதைப்போல, மின்சார வாரியம், கல்வித் துறை, வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, சுற்றுலாத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, அரசுப் போக்குவரத்துக் கழகம் என்று இந்தத், துறைகளிலே பணியாற்றக்கூடிய தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

அதைப்போல, இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றக்கூடிய தினக்கூலிப பணியாளர்கள், பல்வேறு நிலைகளிலே நீண்ட காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டும். சம்பள உயர்வு வேண்டும்; நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மிக முக்கியத்துவம் வாய்ந்தது காவல் துறை. இந்தக் காவல் துறையில் பணிச் சுமை அதிகம். இவர்களுக்கு 8 மணி நேரம் பணி வரம்பு வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. அந்த 8 மணி நேரப் பணி வரம்பு, பணிச் சுமையைக் கருதி ஊதிய உயர்வு, 8 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி உயர்வு வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கையை அரசு நிறைவேற்றவேண்டும்.

அதைப்போல, கல்வித் துறையிலே பி.எட். ஆசிரியர்கள் நியமனத்திற்குச் சான்றிதழ்களெல்லாம் சரிபார்க்கப்பட்டு 9 மாத காலமாகிறது. அவர்களின் எண்ணிக்கை 5,800 பேர். அருந்ததியர்களுக்கான இட ஒதுக்கீட்டு இடங்களை நிரப்புவதற்கான பணி இன்னும் முடிவடையவில்லையென்று சொன்னாலுங்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்த மாத இறுதிக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆகவே, அதையும் நிறைவேற்றவேண்டும்.

'அனைவருக்கும் கல்வி'த் திட்டத்தின்கீழே ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர்கள் என்ற அடிப்படையிலே, அறிவிக்கப்பட்ட 12,000 ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

பால் விலையை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை. பால் விலையை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை ஒரு பக்கமிருக்கிற அதேவேளையில், நுகர்வோருக்கு அடக்க விலையில் கிடைக்கவேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. இதில் அரசு எண்ணிப் பார்க்க வேண்டியது, நாம் சிந்திக்க வேண்டியது, உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிக்குக் கிடைக்கிற தொகை குறைவு. அதை எடுத்துச் செல்வது, பதப்படுத்துவது, விநியோகிப்பது இதுதான் வேலை. இதற்குச் செலவு இரண்டு மடங்கு ஆகிறது. ஆகவே, இந்தச் செலவைக் குறைத்தால், அடக்க விலையிலே கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும். பாலின் விலையை உயர்த்துவதற்கும் வாய்ப்பாக இருக்கும். அதேபோல, பால் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றக்கூடிய பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்து, ஊதிய உயர்வும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி, சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. ஜி.கே. மணி: இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும், வீட்டு வசதிக் கடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை. அரியலூர் மாவட்டம் பிரிக்கப்பட்டாலும்கூட, மாவட்ட நீதிமன்றம் இதுவரை வழங்கப்படவில்லை என்று நீண்டகாலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராட்டம், கைது, நேற்றும் போராட்டம், இன்றும் போராட்டம் என்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அரியலூர் மாவட்டத்திற்கு நீதிமன்றம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கை.

அதேபோல, அந்த மாவட்டப் பகுதியிலே இருக்கிற ஜெயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கத் தொழில் துவக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டினுடைய மிகப் பெரிய சக்தி இளைஞர்கள். இந்த இளைஞர்கள் படிக்கிறார்கள், வேலையில்லை. இன்னும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஒருங்கிணைப்பதற்கு இன்னும் உயர் கல்வி பெறுவதற்கான வழிவகை வேலையில்லாத்

திண்டாட்டத்தைப் போக்குவதற்கு வழிவகை, அதைபோல, அவர்களுக்குச் சேவை நோக்கம், நாட்டுப்பற்றை உருவாக்குவதற்கு ஒன்றியந்தோறும் பயிற்சி அளிக்கவேண்டும். ஏனென்றால், இளைஞர் சக்திதான் பெரிய சக்தி. எந்தவொரு நாடு இளைஞர் சக்தியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்கிறதோ அந்த நாடுதான் வளர்ந்த நாடு, வளர்கின்ற நாடாகக் கருதமுடியும் என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். ஆன காரணத்தினாலே, இந்த இளைஞர்களை ஊக்கப்படுத்துவதற்கு, இவர்களை நெறிப்படுத்துவதற்குப் பயிற்சியளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பல்கலைக்கழக மானியக் குழுவினுடைய இணைச் செயலாளர் மதிப்பிற்குரிய டோக்ரா அவர்கள்கூட கோவையிலே 10-1-2011 அன்று, உயர் கல்வி பெறக்கூடிய இளைஞர்களின் எண்ணிக்கை இன்று 11 விழுக்காடு என்று சொல்லியிருக்கிறார். ஆக 10, 12 ஆம் வகுப்புகளுக்கு மட்டும் போதாது; அவர்கள் படித்தால் போதாது; தனி மனிதனுடைய வளர்ச்சிக்கும், நாட்டினுடைய வளர்ச்சிக்கும் உயர் கல்வி தேவை; அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். அது நூறு நாள் வேலை. இன்றைக்கு தமிழ்நாடு சிறப்பாக பாராட்டுக்குரியதாக உள்ளது. ஆனால், இந்தத் திட்டத்தின்மூலம் புதிய வாய்க்கால்களை உருவாக்குவது, வாய்க்கால்களை ஆழப்படுத்துவது, தடுப்பணைகளைக் கட்டுவது போன்ற நிரந்தர சொத்துக்களை உருவாக்குவதற்கு, வேளாண்மைக்குப் பயன்படுத்துவதற்குப் பயன்படுத்தினால், இந்த நூறு நாள் வேலையை இருநூறு நாட்கள் வேலை கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும், அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவத் துறையில் நல்ல அறிவிப்பு செய்தீர்கள். அரசுத் தரப்பிலே 24 மணி நேரமும் பிரசவம் பார்க்கப்படும் என்ற அறிவிப்பு. இதற்கு மக்கள் மத்தியிலே மிகப் பெரிய வரவேற்பு. ஆனால், இதற்கு முன்னால் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே 36 விழுக்காடு பிரசவம் இருந்தது. அது மாறி இன்றைக்கு 64 விழுக்காடாக உயர்ந்திருப்பது ஏழையெளிய மக்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பு. ஆனால், அவர்கள் கேட்பது எல்லாமே 24 மணி நேரமும் இங்கே தங்கியிருக்கிறோம், மருத்துவர்களும், செவிலியர்களும் தங்குவதற்கு இங்கே குடியிருப்பு வேண்டுமென்று

கோரிக்கை வைக்கிறார்கள். அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மருத்துவர், செவிலியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி உயர்வு வேண்டும். 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' ஒரு நல்ல திட்டம். இந்தத் திட்டத்தின்மூலம் தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படவேண்டிய தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை வழங்கவேண்டும். இது மாவட்ட மருத்துவமனைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கிறேன்.

அதேமாதிரி, வீட்டுமனைப் பட்டா, இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுவதற்கு கையகப்படுத்திய நிலங்களெல்லாம் நிறைய பல மாவட்டங்களில் கிடப்பிலேயிருக்கின்றன. அதில் சுமுக தீர்வை உண்டாக்கி விரைவில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடு, ஆதரவோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடு சேலம் மாவட்டத்திலே மிகப் பெரிய முயற்சி எடுத்து ஓமலூர் சரபங்கா ஆறு, சேரன் மணிமுத்தாறு, கொல்லிமலை அய்யாறு ஆகியவற்றுக்குத் திட்டம் போட்டிருக்கிறீர்கள். வரவேற்கிறோம். அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

அதைப்போல, மேட்டூர் அணையினுடைய உபரி நீரை மாவட்டம் முழுவதும் பயன்படுத்துவதற்குத் திட்டம் நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கை.

இறுதியாக, ஓமலூர் சுங்கச் சாவடி, விதிமுறை மீறி அமைக்கப்பட்டது. அதை மாற்றவேண்டும். அதேநேரத்திலே திட்டமிட்ட கெஞ்சல்நாயக்கன்பட்டிக்கு அது மாற்றப்படவேண்டுமென்று நான் கோரிக்கை வைக்கிறேன். ஓமலூர் தொகுதியில் அருள்மிகு சென்றாயப்பெருமாள் கோயில் நிலப் பிரச்சினை, ஓமலூர் வேலாச்சாமி செட்டியார் மேல்நிலைப் பள்ளியினுடைய நிலப் பிரச்சினை. இதையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிறைய செய்து கொண்டிருக்கிறார்கள். சுழல் நிதி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், வரவேற்கிறோம்.

ஆனாலுங்கூட, அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிரின் வீட்டுப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு ஆடு, மாடு, கறவை மாடு, கோழி வளர்த்தல், காடை, முயல் வளர்த்தல் போன்ற தொழில்கள் செய்வதற்கு இன்னும் ஊக்கப்படுத்தவேண்டும். இதைப்போல எல்லா ஊர்களிலும் இளைஞர் சுய உதவிக் குழுக்களை உருவாக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவாக, இந்த 5 ஆண்டுக் கால நிறைவான இந்தக் கூட்டத்தில் நான் இறுதியாக வேண்டி விரும்பி தெரிவித்துக்கொள்வது, பாட்டாளி மக்கள் கட்சி என்ற அரசியல் பேரியக்கம் வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில் பல்வேறு சோதனைகளையும் கடந்து, கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே மிகப் பெரிய சோதனையைக் கடந்து இறுதியிலே பெண்ணாகரம் இடைத் தேர்தல். இரண்டு மிகப் பெரிய கூட்டணி சக்திகளுக்கு இடையே ஒரு தனித்த கட்சியாக, சிறிய கட்சியாக, பாட்டாளி மக்கள் கட்சி என்ற அரசியல் இயக்கம் இடைத் தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பெற்று, ஒரு வலுவான இயக்கமாக மாறியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த இடைத் தேர்தலுக்குப் பிறகு, தொகுதிவாரியாக பல்வேறு பயிற்சி முகாம்களை அமைத்து, மருத்துவர் அய்யா அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்தப் பாட்டாளி மக்கள் கட்சி மிகப் பெரிய சக்தியாக வளர்ந்திருக்கிறது. வளர்ந்து கொண்டிருக்கின்ற இந்தப் பேரியக்கம், வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி சேருகிற அணிதான் வெற்றிக் கூட்டணியாக அமையும், அந்த அணிதான் ஆட்சி அமைக்கும் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

நிறைவாக,

'ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்'

என்ற வள்ளுவன் கூற்றை நினைவுகூர்ந்து, இந்த வாய்ப்பளித்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களையெல்லாம் வழிநடத்திய மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எல்லா வகையிலும் இந்த சாமானியனுக்கு, சாதாரணமானவனுக்கு ஒத்துழைப்பு நல்கிய இந்த மாமன்றத்திலே இருக்கின்ற

அனைவருக்கும், என்னுடைய கட்சியிலுள்ள சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி, நன்றி என நன்றி தெரிவித்து, பாராட்டுக் கூறி அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை இங்கே நான் பதிய வைக்க விரும்புகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தியின் அடியொற்றி, அரசியலில் பணிபுரிந்துவரும் என்னை காங்கிரஸ் பேரியக்கத்தின் வேட்பாளராக நான்காவது முறையாக ஸ்ரீபெரும்புதூரில் நிறுத்தி, என் வெற்றியை உறுதி செய்த அன்னை இந்திராவின் மருமகள், இந்தியத் திருநாட்டின் திருமகள், பெண் குலத்திற்குப் பெருமை சேர்க்கும் எங்கள் தியாகத் தலைவர் ராஜீவ் காந்தியின் அன்பிற்குரிய மனைவி, அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்கி, தமிழகத்தில் காங்கிரசுக்கும், இளைஞர்களுக்கும் ஒரு மிகப் பெரிய எழுச்சியை உருவாக்கி, எளிமை, கருணை, அறிவு, துணிவு போன்ற அனைத்தும் நிரம்பப் பெற்ற எங்கள் இந்தியாவின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம், இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களையும் வணங்கி, தள்ளாத வயதிலும், தள்ளாடாத திட்டங்களைத் தீட்டி, மத்திய, மாநில அரசுகளுக்கிடையே சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி, இந்தியாவிலுள்ள அனைத்து மாநில முதல்வர்களையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்து, சாதனைகளை உருவாக்கி, சரித்திரம் படைத்துவரும் தமிழக முதல்வர் அவர்களே, உங்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர் எள் என்றால் எண்ணெயாக அவருக்குத் துணை நின்று திட்டத்தினை விரைவில் முடித்திட உதவும் நிதி அமைச்சர், பேராசிரியர் பெருந்தகை அவர்களே, உங்களை வணங்குகின்றேன். மூலவர் சென்னையில் இருந்தாலும், உற்சவராக தமிழகம் முழுவதும் பயணம் செய்து, அரசுப் பணி, இயக்கப் பணி, இரண்டையும் இரு கண்களாகப் பாவித்து தொழில், உள்ளாட்சி, ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் ஆகியவற்றுக்குப் பொறுப்பேற்று, துறையால், தான் பெருமையடைவதைவிட தன்னால் துறை பெருமைப்படச் செய்த

பெருமகன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

13-ஆவது சட்டமன்ற நிகழ்வுகள் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றபோது, 'பசுமை நிறைந்த நினைவுகளே! பாடித் திரிந்த பறவைகளே! பழகிக் களித்த தோழர்களே! பறந்து செல்கின்றோம்' என்ற கவியரசனின் வாசகங்கள் நினைவுக்கு வருகின்றன. எத்தனை வெளிநடப்புகள்! எத்தனை வெளியேற்றங்கள்! கவன ஈர்ப்பு என்ன! ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன! 110 statement என்ன! இவை அனைத்தும் இந்த மாமன்றத்தில் முடிவுக்கு வருகின்றன. மீண்டும் நான்கு மாதங்கள் கழித்து இவை தொடரும்.

ஆனால், நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். காரணம், புதிய சட்டமன்றம், செம்மொழி மாநாடு, செம்மொழிப் பூங்கா, தொல்காப்பியர் பூங்கா, அடையாறு நூல் நிலையம் இவை அனைத்தையும் மிகச் சிறப்பாக உருவாக்கிய முதல்வர் அவர்களைப் பாராட்டும்பொழுது, நாமும் இந்தக் காலக்கட்டத்தில் அவருடன் இருந்தோம் என்ற பெருமைக்குரியவர்கள் என மகிழும் நிலை நம் அனைவருக்கும் உண்டு.

இங்கே குறிப்பாக சில விவரங்களை முதல்வர் அவர்கள் முன்னாலே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக ஈமச் சடங்குகள் செய்வதற்கென்று ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஒரு ஈமச் சடங்கிற்கு 2,500/- ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது இதுவரையிலும் மாநகராட்சிக்குட்பட்ட எந்தப் பகுதிகளிலும் கொடுக்கப்படவில்லை என்பதை நான் அறிகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இப்பொழுதுதான் அதற்குரிய நடவடிக்கைகளிலே அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று சொல்லுகின்றபொழுது, அரசாங்கம் மிகப் பெரிய திட்டங்களைத் தீட்டி, நிதியையும் கொடுத்து, அந்தத் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று நினைக்கின்றபோது, அவற்றின் செயலாக்கம் என்பது அதிகாரிகளாலே தடுக்கப்படுகின்ற காரணத்தினாலே இன்றைக்கு அந்தத் தொகை திரும்பி வருகிறது என்று சொன்னால், அந்த வேதனைக்குரிய சூழ்நிலையை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அதேபோல, வணிக வளாகம், தாட்கோ மூலமாகக் கட்டப்படுகின்றது. அந்த வணிக வளாகம், 10 x 16 ரூ.2,500 என்று S.C. மக்களுக்குக் கொடுக்கின்றார்கள். ஆனால், அதேநிலையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.325 என்ற அளவிற்கு அந்தத் தொகையை அளிக்கின்றபோது அது ஆதி திராவிட மக்களுக்கும் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

'ஒரு விளக்குத் திட்டம்' குறித்துச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அந்தத் திட்டம், எல்லாப் பகுதிகளிலும் நிறைவேறியிருக்கின்றது என்றுதான் நாம் நினைக்கின்றோம். ஆனால், அது tribe, மலைவாழ் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. தேனி மலைவாழ் பகுதி மக்களுக்கு இன்னும் அந்த 'ஒரு விளக்குத் திட்டம்' நிறைவேற்றப்படவில்லை என்பதை நாங்கள் நேரடியாகவே சென்று அங்கே கண்டறிந்திருக்கின்றோம்.

அதேபோல, குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நம்முடைய திட்டங்களுக்குரிய தொகை, திட்ட அலுவலகம் மூலமாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகைகள் எல்லாம் செலவு செய்யப்படுகின்றன. முதலாவதாக, ஒரு வரன்முறையினை ஏற்படுத்தி, அந்த அடிப்படையிலே பகுதித் தொகை அரசாங்கத்தினுடைய திட்டங்களுக்கு; மீதி பகுதித் தொகை சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்பத் தொகை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈமக்கிரியைத் தொகையைப் பற்றி இங்கு குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஈமக் கிரியைத் தொகையைப் பொறுத்தவரையில் கடந்த நான்கு ஆண்டுகளாக இதற்காக ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டு, அது முழுமையாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 2,26,648 நபர்களுக்கு ஈமக் கிரியைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 2010-2011 ஆம் ஆண்டில் தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.5 கோடி ரூபாயாக அதனை உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ரூ.500/-ஆக இருந்த அந்த உதவித் தொகையை இன்றைக்கு

ரூ.2,500/-ஆக வழங்கிக்கொண்டிருக்கின்றோம். இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, 11,710 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கின்ற நேரத்தில் எல்லாம் இந்த ஈமக் கிரியைத் தொகையானது முழுவதுமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1996-2001 வரைக்கும் 18,707 நபர்களுக்கு இந்த உத்வித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. 2001-2006 வரை வெறும் 705 நபர்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசில் இந்தத் தொகை முழுமையாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பொருளை நான் தாண்டி வந்துவிட்டேன். அமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்ததற்காகச் சொல்கின்றேன், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ், 8-12-2010 அன்று மனு செய்தபோது, அதில் அவர்கள் கொடுத்திருக்கின்ற தகவல். ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு செய்ய நிதியுதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா என்பதற்கு, செயல்படுத்தப்படுகிறது என்றும், மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் மற்றும் பயனாளிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூன்று துறைத் தலைவர்கள் மற்றும் 10 மாநகராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றும், 2010-2011 ஆம் நிதியாண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு ரூ.5 கோடி என்றும் பதில் கிடைத்திருக்கிறது. பூர்த்தி செய்யப்பட்ட இந்த விண்ணப்பப் படிவத்தினைக்கூட இன்றைக்கு அவர்கள் வைத்திராத காரணத்தால் இது நிதி ஆலோசகர், சென்னை மாநகராட்சி, ரிப்பன் பில்டிங், சென்னை-3 என்ற இடத்திலே இப்போதுதான் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். நான் அதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

முற்பகல் 11-25

மாவட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்ற தொகைக்கு நீங்கள் பாதித் தொகையை அரசாங்கத்தினுடைய திட்டங்களுக்கும், மீதித் தொகையினைச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய விருப்பப் பணிகளுக்காகவும் ஒதுக்கீடு

செய்கின்றீர்கள். ஆனால், நாங்கள் பணிகளை ஒதுக்கீடு செய்கின்றபோது, திடீரென்று உங்களிடமிருந்து ஆர்டர்கள் வருகின்றன. அப்படி வருகின்றபோது, சில நேரங்களிலே நாங்கள் கொடுத்துவிட்டு, மறுபடியும் அதைத் திரும்பப் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, எவை எவை சட்டமன்ற உறுப்பினர்களுடைய விருப்பப் பணிகளுக்குக் கொடுக்கலாம், எவற்றை அரசாங்கத்தினுடைய பணிகளுக்குக் கொடுக்கலாம் என்று முன்னதாகவே, நீங்கள் ஒரு முடிவினை எடுத்திருந்தால், அது எங்களுக்குச் சிறப்பாக இருக்கும் என்பதற்காகச் சொல்கின்றேன். உதாரணத்திற்குச் சொல்கின்றேன். என்னுடைய தொகுதியிலே படப்பை யூனியனிலே, இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டத்தின் மூலமாகவும் வீடு கிடைக்கவில்லை. அதேநேரத்திலே கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் மூலமாகவும் வீடு கிடைக்கவில்லை. 21 இலட்சம் பேரைத் தேர்வு செய்திருக்கின்றார்கள். ஆனால், நான் கொடுத்திருக்கின்ற 39 பேருக்கு அங்கே வீடு கிடைக்கவில்லை, இரண்டு திட்டத்திலேயும் கிடைக்கவில்லை. இதற்காக இங்கேயிருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. அஷோக் வர்தன் ஷெட்டி அவர்கள் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார். அதற்குப் பிறகு திரு. ககன்தீப் சிங் பேடி அவர்கள் பரிந்துரை செய்து அனுப்புகிறார். அதற்குப் பிறகு அங்கே இருக்கின்ற **Project Officer** I.A.S. ஆபிசரும் பரிந்துரை செய்து அனுப்புகிறார்கள். அதற்குப் பிறகு **B.D.O.** அலுவலகத்திற்கு வந்து அவை அனைத்தும் சரியான தகுதி பெற்றவை, இவர்களுக்கு வீடு கொடுக்கப்படக்கூடும் என்கின்ற அந்தத் தகுதி இருக்கின்றது. ஆனாலும்கூட, அந்த 39 வீடுகள் சேர்க்கப்படவில்லை என்றால், இவை அடுத்த ஆண்டுதான் எடுத்துக்கொள்ளப்படும் என்கின்ற நிலை இருக்கின்றபோது, அதைத்தான் நான் கேட்கின்றேன். குறிப்பாக, 3 **I.A.S.** அதிகாரிகள் பரிந்துரை செய்து அவை தகுதி உள்ளனவாக இருந்தும்கூட, சட்டமன்ற உறுப்பினருடைய பரிந்துரை கொடுத்ததற்குப் பிறகும் கிடைக்கவில்லை என்று சொன்னால், குறிப்பாக அவர்கள் அத்தனை பேரும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவேதான் சொல்கின்றேன், தயவுசெய்து இதுபோன்ற சூழ்நிலைகளை. அரசாங்கம் செய்யவில்லை, அமைச்சர்கள் செய்யவில்லை. ஆனால், கீழ்மட்ட அதிகாரிகள் இதுபோன்ற தவறுகளைச் செய்கின்றபோது அதிலே நாம் கொஞ்சம் விழிப்புணர்வோடு இருக்கவேண்டும் என்றுதான் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, High Mast light. முன்பு நீங்கள் High Mast light கொடுக்கலாம் என்று சொன்னீர்கள். நாங்கள் ஒரு High Mast light-க்கு 5 இலட்சம் ரூபாய் கொடுக்கின்றோம். திடீரென்று அந்த High Mast light திட்டத்தை cancel செய்கின்றீர்கள். கேன்சல் செய்த பிறகு அந்தப் பணம் எப்படிப் போயிற்று? ஏனென்றால், அந்த light வரவில்லை; 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடும் போய்விட்டது. ஆனால், அதற்குப் பிறகு அதில் எந்தவிதமான முடிவும் தெரியாத சூழ்நிலை இருக்கின்றது.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே குன்றத்தூரிலே சேக்கிழாருக்கு ஒரு மணி மண்டபம், தியான மண்டபம், நூல் நிலையம் அனைத்தும் அமைத்துத் தந்ததுபோல, ஸ்ரீபெரும்புதூர் உடையவர் கோயிலுக்கு ஆயிரங்கால் மண்டபம் கட்டவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே முதல்வர் அவர்களிடத்திலே மனு கொடுத்திருக்கின்றார்கள். தயவுசெய்து அதற்கும் தாங்கள் நிதியுதவி கொடுத்து எங்களுடைய எண்ணப்படி தெய்வ பக்தி இருக்கின்றவர்கள் பாராட்டக்கூடிய அதே சூழ்நிலையில் உங்களுடைய கொள்கைப்படி ஒரு சமூக புரட்சியாளருக்கு மணி மண்டபம் அமைப்பதற்கு இது உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மத்திய அரசு, தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தேசிய இளைஞர் விருது தந்து கௌரவப்படுத்துகின்றது. இவர்கள் சுய தொழில் தொடங்க 2008-இல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளிம்பு மானியத் தொகையாக ரூ.5 இலட்சம் நிதியுதவியினை அரசு ஆணை நிலை எண் 31, நாள்4-6-2008-இல் அறிவித்தார்கள். மத்திய, மாநில அரசுகள் இந்த தேசிய விருது பெற்ற இளைஞர்களை ஊக்குவிக்கும் அளவுக்கு வங்கிகள் செயல்படுவது இல்லை. அதன் காரணமாக, அவர்கள் படும் வேதனையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் கோரிக்கையாக தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது, "விளிம்பு மானியத் தொகையை மானியமாக அளித்தால் அவர்கள் தொழில் தொடங்கி, அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் வாழ முடியும்" என்ற கோரிக்கையைச் சென்ற ஆண்டு அவையில் வைத்தேன். இச்சட்டமன்ற காலம் முடிவடைவதற்குமுன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையுடன் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, சுதந்திரப் போராட்ட கால தியாகிகளுடைய வாரிசுகளின் வேலைவாய்ப்புகளுக்கு முன்னுரிமை தரவேண்டும். சுதந்திரப் போராட்டத் தியாகிகள் என்று சொன்னால், அவர்களுக்கே இப்போது 90 வயது இருக்கும். பலபேர் உயிரோடு இல்லை. அவர்களுடைய பிள்ளைகள் என்று சொன்னால், அவர்களுக்கே 50, 60 வயதுக்கு மேல் ஆகிவிடுகிறது. அவர்களுக்கு முன்னுரிமை தந்தால் அதனுடைய பலன் நிச்சயமாக அவர்களைப் போய்ச் சேராது. அவர்களுடைய பேரன் பேத்திகள் இருக்கின்றார்கள். அவர்களில் தகுதி உள்ளவர்களுக்கு, குடும்பத்தில் ஒருவருக்கு அந்த முன்னுரிமையைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தாட்கோ மானியம் என்று பல ஆண்டுகளாக இருபத்து ஐயாயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டு வருகின்றீர்கள். அதை மாற்றி ஒரு இலட்சம் ரூபாயாகக் கொடுப்பதற்கு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாற்றுத் திறனாளிகள். இந்த மாற்றுத் திறனாளிகள் திருமணத்தை நடத்திக்கொள்கிறார்கள். அவர்கள் திருமணத்தைப் பதிவு செய்கிறார்கள். அப்படிப் பதிவு செய்கின்றபோது, அவர்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டணத்தை தயவுசெய்து இரத்துச் செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும் நிறைய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சென்ற அரசாங்கத்தில் 40 கிலோ மீட்டருக்கு மேலே மாநகரப் பேருந்துகள் விட முடியாது என்று பிடிவாதத்திலே இருந்ததை மாற்றி, 50 கிலோ மீட்டர் தூரம் இருந்தால்கூட இப்போது சொகுசுப் பேருந்து, தாழ்தளப் பேருந்து, மிதவைப் பேருந்து, A.C. பேருந்து என்று அத்தனையும் கொடுக்கின்றபோது, என் தொகுதியிலே இருக்கின்ற மக்கள் சுங்குவார்சத்திரத்தில் A.C. பேருந்தில் ஏறி உட்கார்ந்தால் அங்கேயிருந்து இறங்க வேண்டிய இடத்தில்கூட இறங்காமல் Parrys Corner-இல் வந்து இறங்குகிறார்கள். ஏனென்று கேட்டால், அவர்களுக்கெல்லாம் வீட்டிலே A.C. கிடையாது. இன்றைக்கு பேருந்தில் A.C.-ஐ அனுபவிக்க வேண்டிய நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீங்கள் உயர்த்திக் கொடுத்த காரணத்தினால், நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-30

அதேபோல, என்னுடைய தொகுதிக்கு நீதிமன்றம் கொடுத்ததற்கும், மருத்துவமனைக்கு ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ததற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு விஷயத்திலே இரு கட்சிகளின் ஆட்சியிலேயும் இரு கட்சிகளும் ஒன்றாக இருக்கிறீர்கள். அது என்னவென்று சொன்னால், ஆதனூர் பாலம். ஆதனூர் பாலத்தை கடந்த 5 ஆண்டுக் காலமாகக் கேட்டு வந்தேன். அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அதைக் கொடுக்கவில்லை. அன்றைக்கு அது நெடுஞ்சாலைத் துறையிடம் இருந்தது. இன்றைக்கும் இந்த 5 ஆண்டுகளாக அந்தப் பாலத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இன்றைக்கு அது உள்ளாட்சித் துறைக்கு வந்திருக்கிறது. அந்த மாற்றம் மட்டும் நடந்திருக்கிறது. ஆனால், ஆதனூர் பாலம் வரவில்லை. காரணம், ஆதனூர் என்று சொல்லுகின்ற பகுதி இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது. வார்டு 1-இலே ரேஷன் கடை இருக்கிறது. வார்டு 2-இலே பஞ்சாயத்து அலுவலகம் இருக்கிறது. 12 கிலோ மீட்டர் தூரத்திற்கு அவர்கள் சுற்றித்தான் போகவேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, ஆதனூர் பாலத்திற்கு ஒரு விடிவு காலத்தை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய அருமைச் சகோதரர், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், தமிழக அரசு நவோதயா பள்ளியை எடுத்து நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இதற்கு மொழிப் பிரச்சினையே இல்லை. நாம் விரும்புகிற தமிழ் மொழி மூலமாகவே அதனை நடத்திக்கொள்ளலாம். பாண்டிச்சேரி அரசு, இதே பள்ளியைத் தமிழ்வழிக் கல்வியாக நடத்திக்கொண்டிருக்கிறது. இங்கேயிருந்து நாம் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு புதுவை மாநிலத்திற்குச் சென்று அந்தப் பள்ளியைப் பார்வையிட்ட பிறகு, அது நமக்குச் சரியாக இருக்குமென்று சொன்னால், தமிழகத்திலே நவோதயா பள்ளியைத் தொடங்கவேண்டும். காரணம், இதன்மூலமாக நம்முடைய மாநிலத்திற்குப் பல ஆயிரம் கோடிக்கணக்கான ரூபாய் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறதென்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் 4.5 இலட்சம் போலி ரேஷன் கார்டுகள் தற்போது பரவியுள்ளதாக எனக்குத் தகவல்

வந்திருக்கிறது. இந்த வருடத்தைப்போல, ஒவ்வொரு வருடமும் உணவு மானியத்திற்காக ரூ.4,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு, போலி ரேஷன் கார்டுகளை அறவே ஒழிப்பதற்கான வழிவகைகளைத் தீட்டினாலேயே உணவு மானியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைக் குறைப்பதற்கு வாய்ப்புகள் அதிகமுள்ளதாக நான் கருதுகிறேன்.

அதேபோல, தொழில் துறை. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் பூங்காவிற்காகவும், ஐவுளிப் பூங்காவிற்காகவும் நிலங்களைக் கையகப்படுத்தும்போது, முதலில் அரசுப் புறம்போக்கு நிலங்களைக் கையகப்படுத்தவேண்டும். அரசுப் புறம்போக்கு நிலங்களை எடுத்துக்கொண்ட பின்னர், விவசாய நிலங்களுக்குத் தகுந்த ஈட்டினைக் கொடுத்து நிலங்களைக் கையகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத் தகுந்த அரசாணையின்மூலம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 'சிப்காட்' நிறுவனம், நிலங்களை ஆக்கிரமித்த பிறகும், நிலச் சொந்தக்காரர்களுக்குத் தகுந்த ஈட்டுத் தொகையை விரைவில் வழங்குவதில்லை. இதனையும் ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இருங்காட்டுக்கோட்டையிலே இருக்கின்ற ஹூண்டாய் கம்பெனி மிகப் பெரிய கம்பெனியாகும். இருங்காட்டுக்கோட்டையிலே இருக்கின்ற நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்தி 12 வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. ஆனால், அந்தப் பகுதி மக்களுக்கு இன்றுவரை உரிய தொகை போய்ச் சேரவில்லை. எனவே, அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் வேகமாக எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

அதேபோல, தொழிற்சாலைகளுக்கெல்லாம் நிறைய நிதியுதவி மற்றும் வரிச் சலுகைகளை அரசாங்கம் கொடுத்திருக்கின்றது. அவ்வளவு சலுகைகளைப் பெறுகின்ற அவர்கள் பஞ்சாயத்துகளுக்குக் கட்ட வேண்டிய வரிகளைச் சரியாகக் கட்டுகிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். குறிப்பாக 'கிராம இராஜ்யம்' அமைய வேண்டுமென்று சொன்னால், அந்தத் தொழிற்சாலைகளிலே professional tax-உம், property tax-உம் ஒழுங்காகக் கட்டினாலே

போதும். ஒரு பஞ்சாயத்திற்கு ரூ.40 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சம் வரை வருவாய் கிடைக்கும். பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக நாங்கள் நிஷான் கம்பெனிக்குப் போனோம். அங்கே போனதற்குப் பிறகுதான் தெரிந்தது, அவர்கள் plan-க்கு apply செய்து கட்டடம் கட்டி முடித்துவிட்டு, தொழிற்சாலையும் தொடங்கிவிட்டார்கள். ஆனால் வரி கட்டவில்லை. நாங்கள் போய் பார்த்த பிறகு, ஏன் இன்னும் வரி கட்டவில்லை என்று கேட்டதற்குப் பிறகுதான் அவர்கள் ரூ.58 இலட்சம் கட்டுகிறார்கள். அந்த 58 இலட்சம் ரூபாய் அந்தக் கம்பெனியிடம் இருந்தது என்றால், அவர்களுக்கு வட்டி வரும். அந்த 58 இலட்சம் ரூபாய் பஞ்சாயத்துக்கு வந்தது என்றால், பஞ்சாயத்திலே நல்ல சாலை போடுவதற்கோ, தெரு விளக்கு கொடுப்பதற்கோ, குடிநீர் கொடுப்பதற்கோ அல்லது நல்ல காரியங்கள் செய்வதற்கோ உதவியாக இருக்கும். ஆக, அந்த கம்பெனிகளிலேயிருந்து வருகின்ற professional tax-உம், property tax-உம் பஞ்சாயத்துக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதை நாம் பார்த்தாகவேண்டும்.

முற்பகல் 11-35

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல, சர்க்கரை ஆலை. இந்தியாவிலேயே சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாடுதான் முதல் இடத்தில் உள்ளது. நாங்கள் எங்கள் குழுவின் சார்பாக அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்குப் போனோம். அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையிலே என்ன விவகாரம் என்று சொன்னால், சென்ற ஆட்சி இருந்தபோது அந்த ஆலை மூடப்பட்டுவிட்டது. அதன் காரணமாக தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குப் போனார்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டும் என்று நீதிமன்றத்திலே சொல்லிவிட்டார்கள். அதனுடைய பலன் என்ன ஆகிவிட்டது என்றால், அவர்கள் வேலையிலே இருந்தார்கள், தொழிற்சாலையை மூட விடவில்லை. அதன் காரணமாக கலைஞருடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, 90 கோடி ரூபாய் அந்த ஆலைக்குக் கொடுக்கப்பட்டது. அந்த 90 கோடி ரூபாயிலே இருந்துதான் தொழிலாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு அரைச் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல், அந்தத் தொழிற்சாலையைப் புதுப்பித்து, இன்றைக்கு அது வளர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால், அவர்களாலே நிமிர முடியவில்லை. என்ன காரணம் என்றால், 90 கோடி ரூபாய்

வாங்கினார்கள். அதைத் திரும்பக் கொடுக்க முடியாத சூழ்நிலையிலே இன்றைக்கு வட்டியோடு சேர்த்து 171 கோடி ரூபாய் ஆகி இருக்கிறது. 171 கோடி ரூபாய் அவர்கள் தலையிலே இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் இந்தக் கடனைக் கட்டுவதா அல்லது தொழிற்சாலையை நடத்துவதா என்கின்ற சிரமத்திலே இருக்கின்றார்கள். மேலும், அவர்கள் ஒரு துணை மின் நிலையத்தைக்கூட உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த துணை மின் நிலையம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டால், கிட்டத்தட்ட 15 மெகா வாட் மின்சாரம் அங்கே உற்பத்தி ஆகும். 3 மெகா வாட் மின்சாரத்தை சர்க்கரை ஆலைக்கு எடுத்துக்கொண்டால்கூட, 12 மெகா வாட் மின்சாரத்தை அவர்கள் விற்க முடியும். இலாபத்தை ஈட்ட முடியும். அந்தத் தொழிற்சாலையிலே இருக்கின்ற தொழிலாளர்கள் வாழவும், தொழிற்சாலை நலிவிலே இருந்து மீளவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு அந்த 171 கோடி ரூபாயை இரத்துச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தது, சென்னை மெட்ரோ இரயில். தலைவர் அவர்கள் அம்பேத்கர் விருதினைத் தந்து என்னை கௌரவப்படுத்தினார்கள். அப்போது பேசுகின்றபோதுகூட அவர் சொன்னார், எந்தத் திட்டங்கள் வந்தாலும் அது ஸ்ரீபெரும்புதூருக்கு வேண்டும் என்று கேட்பார் என்று சொன்னார்கள். அது உண்மைதான். மெட்ரோ இரயில்கூட பூந்தமல்லி வரையிலும் வர இருக்கின்றது என்றபோது நான் சொன்னேன், ஸ்ரீபெரும்புதூருக்கும் அதை அப்படியே இழுத்துவிடுங்கள் என்று சொன்னேன். காரணம், அங்கே நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதனால் இரயில் பயன்பாடு அதிகமாக இருக்கும் என்பதற்காகத்தான். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 14,600 கோடி ரூபாய். ஆனால், இதுவரை 1,452 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் இத்திட்டத்திற்காக 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 12,000 கோடி ரூபாயை 2015-க்குள் செலவிட வேண்டும். இந்தச் செலவிற்கேற்ப தகுந்த வேலைகள் 2015-க்குள் முடிக்கப்பட வாய்ப்புகள் உள்ளனவா என்பது தெரியவில்லை.

தமிழ்நாடு மின்சார வாரியம், மின் தட்டுப்பாடு நீக்கப்படவும், தொடர்ந்து மின்சாரம் பெறவும் தேவையான கூடுதல் மின்சாரத்தை வெளிச் சந்தையில் பெற்று தொழிற்சாலைகளுக்கு

வழங்கும் திட்டத்தில், ஒவ்வொரு யூனிட்டுக்கும் 6 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை செலவிட வேண்டும். இதை அவர்களே மின் உற்பத்தி செய்தால் ஒரு யூனிட்டுக்கு 4 ரூபாய் முதல் 5 ரூபாய் வரைதான் செலவிடவேண்டும். எனவே, வெளிச் சந்தையில் வாங்குவதால் ஒவ்வொரு யூனிட்டுக்கும் ஒரு ரூபாய் முதல் 2 ரூபாய் வரை அதிக செலவினம் ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்குத் தமிழக அரசு நடத்திக்கொண்டிருக்கும் பல்வேறு மின் உற்பத்தித் திட்டங்களை முடிவு செய்தும், பல புதிய மின் உற்பத்தித் திட்டங்களை வகுத்தும், தங்களின் சொந்த மின் உற்பத்தியைப் பெருக்கினால், மின்சாரத்திற்காக ஒதுக்கப்படும் மானியத்தை வெகுவாகக் குறைத்துக்கொள்ளலாம்.

நம்முடைய அருமைச் சகோதரர் திரு. கோவை தங்கம் அவர்கள் 3 பேர் வால்பாறையிலே யானை மிதித்து இறந்துவிட்டார்கள் என்று பேசினார். 1-1/2 இலட்சம் ரூபாய் நிவாரணமாகக் கொடுத்திருக்கிறீர்கள். அதையும் அவர்கள் வாங்கவில்லை, பிணத்தையும் அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை, அங்கே, போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றது. ஆக, மாண்புமிகு கலைஞர் அவர்கள் கருணையைத் தன்னுடைய பெயரிலேயே வைத்திருக்கின்றவர், உயிரிழந்த அந்த மூன்று நபர்களுடைய குடும்பத்தாருக்கும் தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் கொடுத்து, அவர்களை வாழ வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-40

கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையான அவினாசி—அத்திக்கடவு பாசனத் திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். தமிழகம் முழுவதும் ஏழை எளிய கைத்தறிக் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு 25% அடிப்படைக் கூலி உயர்வு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகம் முழுவதும் பால் உற்பத்தியாளர்கள், பால் விலையை உயர்த்திடப் போராடி வருகிறார்கள். எனவே கருணைகூர்ந்து, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் அவர்களை ஒரு முறை அழைத்துப் பேசி, பால் கொள்முதல் விலையை சற்றே உயர்த்தித் தந்து உதவிடக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 13-ஆவது சட்டமன்றம் இறுதியாக முடிவுறக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்ற

இந்தக் காலக்கட்டத்திலே, அத்தனை பேர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அனைத்துக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் உரித்தாக்கிக் கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குத் தேர்தலின்போது வந்து பணியாற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்களுக்கும், குறிப்பாக என்னுடைய தொகுதி மக்களுக்கும் என்னுடைய சிரம்தாழ்ந்த நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம். நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 45 நிமிடங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மணி நேரம் என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று கில்லட்டின் நேரம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிந்தனையில், செயலில், மக்கள் நலன் மட்டுமே எண்ணிப் பாடுபடும் மக்கள் தலைவர், நேர்மையானவர்களும், உலக அரசியலின் பார்வையாளர்களும் போற்றுகின்ற மகத்தான தலைவர், களங்கம் கற்பிக்க முடியாத கற்பூரப் பெட்டகம், அறிவின் ஆற்றல், ஆக்கத்தின் வெளிப்பாடு, தூய்மையான நிருவாகத்தைத் தந்த வாய்மையான தலைவர், மக்கள் சக்தியின் துணையோடு நாளை வெற்றிக் கொடி நாட்டி, நாட்டை ஆளப்போகும் இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

இந்த அவையில் அங்கம் வகிக்கின்ற அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சட்டப் பேரவையினுடைய செயலாளர் கடந்த ஐந்து ஆண்டுக்காலமாக அவரை நாங்கள் உற்று நோக்குகின்றபொழுது எப்போதாவது எங்கள் பக்கம் தன்னுடைய பார்வையைத் திருப்புகிறாரா என்று ஏங்கி ஐந்து ஆண்டுகளும் முடிந்துவிட்ட நிலையில், நம்முடைய சட்டப் பேரவைச்

செயலாளர் அவர்களுக்கும், சட்டப் பேரவைச் செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அலுவலர்கள் அனைவருக்கும், மனச்சாட்சியுடன் பத்திரிகைத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அத்தனை பத்திரிகை நண்பர்களுக்கும், தொலைக்காட்சி நிருபர்களுக்கும், அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

ஐந்து ஆண்டுக் காலம் இந்த ஆட்சி நடைப்பெற்று வந்த பாதைகளை, சொல்லிய திட்டங்களை, செய்யாதவற்றை ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற நிலையில் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஐந்து ஆண்டுக் கால ஆட்சியில் மின் வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை.

உலகமே விஞ்ஞான யுகத்தில் விரைந்தோடிக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாடோ உங்கள் ஆட்சியில் கற்காலத்தில்தான் இன்னும் இருக்கின்றது. மின் வெட்டுக்குக் காரணம், கடந்த ஐந்தாண்டு என்று, இல்லாத ஒரு காரணத்தைக் கற்பித்துத் தப்பித்து வந்தீர்கள். அதற்குப் பின்னும் ஐந்தாண்டுகள் வந்து போய்விட்டனவே, ஏன் மின்சாரப் பற்றாக்குறையை உங்களால் தீர்க்க முடியவில்லை என்று மக்கள் கேட்பது உங்கள் காதுகளுக்கு ஏன் கேட்கவில்லை? சட்டம் கட்ட முடியவில்லையென்றாலும், சினிமா செட் போட்டு திறந்து வைத்தீர்கள். ஐந்தாண்டுகளில் மின் வெட்டைச் சரி செய்யத் தெரிந்திருக்க வேண்டாமா? தமிழகத்தில் உபரியாக மின்சாரம் இருந்தது ஒரு காலம், அது கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு முன்பு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்காலம். மின்சாரமின்றி இருளில் தட்டுத் தடுமாறுவது ஒரு காலம், அது இன்றைய காலம்; அது உங்கள் ஆட்சியில். இந்த இலட்சணத்தில் இரண்டு இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்புத் தருவோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இதோடு இந்த வருடம் 40,000 இணைப்புகளையும் சேர்த்துக் கொடுப்போம் என்று சொல்கின்றீர்கள். உற்பத்தி உயர்ந்திருக்கிறதா? இல்லை, மத்தியத் தொகுப்பிலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கு முயற்சி

எடுத்தீர்களா? இல்லை, பெருமளவு கடனை வாங்கினீர்களே, அதேபோல அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரக் கடன் வாங்கப் போகிறீர்களா? அதுவும் இல்லை. பின் எப்படி இது சாத்தியமாகும்? மின்சாரத் தேவை ஒருபுறம் இருந்தாலும் இதற்குத் தேவைப்படும் நிதியாதாரம் எங்கேயிருந்து கிடைக்கும்? நிதிநிலை அறிக்கையில் சொல்லவில்லை.

மின்சாரப் பற்றாக்குறையினால் விவசாய உற்பத்தி பெருமளவுக்குக் குறைந்திருக்கிறது. நுகர்வோர்களுக்குத் தேவைப்படும் காய்கறிகள் கிடைக்கவில்லை. இதனால் விலைவாசி உயர்ந்துகொண்டே போகின்றது. விலைவாசி உயர்ந்து கொண்டே போகின்றது என்பதை நாம் இங்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறபோது, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய வேடசந்தூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் ஒரு முததான கருத்தை இங்கே சொன்னார். விலைவாசி உயர்ந்தால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள் என்ற ஒரு கருத்தை இங்கே பதிய வைத்தார். நான் குழம்பிப் போனேன். விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், இந்த ஆட்சியில் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு உற்பத்தி செய்கிற தலத்தில், இடத்தில் விலை கிடைப்பது இல்லை. ஆனால், அது பல்வேறு கட்டங்களைக் கடந்து, பொது மக்களுக்கு, நுகர்வோர்களுக்கு வருகின்றபோது பல நூறு மடங்கு உயர்ந்து, இன்றைக்கு விலைவாசி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மா. தண்டபாணி (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் என் உரையை முடித்துவிடுகிறேன் (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்த பிறகு அவரைப் பேசவிடுங்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தண்டபாணி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னாலே நாங்கள் கேட்போம். நீங்கள் அத்தனைபேரும் எழுந்து நிற்க வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் சொன்னீர்கள், உடனே அவரை நான் உட்காரச் சொல்லிவிட்டேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் பேசி முடித்த பிறகு, அவர் பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உங்கள் உரையைத் தொடருங்கள். இதற்குப் போய் இவ்வளவுப்பேர் எழுந்து நிற்கிறீர்களே!

திரு. ஓ. பன்னீர்செல்வம்: பொது மக்கள் அதை நுகரும்போது, அதைப் பயன்படுத்துகின்ற நிலையில் அந்தக் காய்கறிகள் வருகின்றபோது இன்றைக்கு என்ன விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்? அந்த விலைவாசி உயர்வுதான், கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்தத் தவறியிருக்கிறது என்பதை நாங்கள் இங்கே சுட்டிக்காட்டினோம். அவர் கடந்த ஐந்தாண்டுக் காலம் இந்த அரசுக்கு . . . (குறுக்கீடு) நான் உரையை முடித்து விடுகிறேன், நீங்கள் பிறகு பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உரையை முடியுங்கள், நான் அவருக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தண்டபாணி ஒரு நிமிடம்தான் பேசுவார். அதிகம் பேசமாட்டார்.

முற்பகல் 11-50

திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அன்றையதினம் சொன்ன கருத்து முழுக்க முழுக்க உண்மைதான். அன்றைக்கு வெங்காயம் 60 ரூபாய் என்று இருந்ததை இன்றைக்குப் பத்திரிகையில் படித்ததில் 2 ரூபாய்க்கு விற்றிருக்கிறது. இன்றைக்குப் பத்திரிகையில் பார்த்தால் வெங்காயத்தினுடைய விலை 2 ரூபாய்க்கு வந்திருக்கிறது. ஆகவே, விவசாயிகள் பெரும் பாதிப்படைகிறார்கள். அந்த அடிப்படையிலே சொன்னேனே தவிர, நீங்களும் ஒரு விவசாயி. நானும் ஒரு விவசாயி. விவசாயம் செய்கிறபோது கூலி 150 ரூபாய் களையெடுக்கிற ஒரு பெண்ணுக்குக் கொடுக்கிறோம். விவசாயத் தொழில் பார்க்கிறபோது 250 ரூபாய் கூலி கொடுக்கிறோம். ஆகவே, அப்படி இருக்கிற நேரத்தில் விவசாயினுடைய உற்பத்திப் பொருளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர, விலையேற்றம் என்பது நான் மற்றைய பொருளைச் சொல்லவில்லை என்பதை நான் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நடிகர் அரவிந்தசாமி நடித்த படம் மின்சாரக் கனவு. ஆனால் உங்கள் திமுக. ஆட்சியில் நீங்கள் எடுக்கும் படம் மின்சாரமே கனவு என்று இளைய தலைமுறை எஸ்.எம்.எஸ். அனுப்பி ஏளனம் செய்யும் அளவிற்கு தமிழகத்தினுடைய மின்சார நிலை கேவலப்பட்டுக் கிடக்கிறது. திட்டமிட்ட நிலையில் பாழ்பட்டுக் கிடக்கும் மின்சார நிலையைச் சீர்படுத்தி, தமிழகத்தைக் காப்பாற்ற திடமான திட்டம் ஏதாவது இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கின்றதா என்றால் இல்லை, பூஜ்யம். இந்த அரசு பொறுப்பேற்றதில் இருந்து தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய ஜீவாதார உரிமைகள்--காவிரி நீரைப் பெறுவதிலும், முல்லைப் பெரியாறு நீரைப் பெறுவதிலும், பாலாறு நீர் தேக்கமின்றி இங்கு வந்து சேர்வதிலும் இந்த அரசு நம்முடைய ஜீவாதார உரிமைகளைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத்தான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். நேற்று முன்தினம் கர்நாடக மாநிலத்தில் நம்முடைய மேட்டூர் அணையினுடைய உட்பகுதியில் மாதேஸ்வரன் மலைப் பகுதிக்கு நீர் எடுக்கின்ற ஒரு சூழ்நிலை பற்றி இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அப்போது நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலாக இங்கே சில கருத்துகளைப் பதிய வைத்திருக்கின்றார்கள். அவற்றை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

"கர்நாடக மாநிலத்தில் காவிரிப் படுகையில் நகர மற்றும் ஊரக மக்களின் மொத்த குடிநீர் தேவை, 17.22 டி.எம்.சி. அடி எனக் காவிரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையில் மதிப்பீடு செய்துள்ளது. அதன்படி குடிநீர்த் தேவைக்கான நீரில் 50 விழுக்காடு நிலத்தடி நீரினாலும் மீதமுள்ள 50 விழுக்காடு மேற்பரப்பு நீரினாலும் பயன்படுத்திக்கொள்ளக்கூடும் என்ற யூகத்தின் அடிப்படையில் வழங்கக்கூடிய நீர் அளவு, 8.75 டி.எம்.சி. அடி ஆக இருக்கும். மக்கள் தொகை மற்றும் கால்நடை போன்றவற்றிற்கான பயனீட்டு அளவு மொத்த நீர் அளவில் 20 விழுக்காடு. அதாவது 1.75 டி.எம்.சி. அடி எனக் காவிரி நடுவர்

மன்ற இறுதி ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதேஸ்வரன் மலைப் பகுதி, கர்நாடகக் காவிரிப் படுகையில் அமைந்துள்ளது; அப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவையும் மேலே குறிப்பிட்டுள்ள தேவையில் அடங்கும்" என்று சொல்லியிருக்கின்றார். காவிரியினுடைய இறுதி ஆணை நடைமுறைக்கு வந்து விட்டதா என்பதைத்தான் நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி நடுவர் மன்றம் நிறுவப்பட்டு, அதனுடைய இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி. அடி நீர் தரப்பட வேண்டுமென்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. காவிரி நடுவர் மன்றம் பல்வேறு சிறப்புக் கூறுகளையெல்லாம் ஆராய்ந்து யார் யாருக்கு எவ்வளவு தேவை என்று கணக்கிட்டு, 2007-இல் காவிரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு வந்தது. இறுதித் தீர்ப்பில் தமிழகத்திற்கு 192 டி.எம்.சி. அடி அதில் 7 டி.எம்.சி. அடி நாம் பாண்டிச்சேரிக்குக் கொடுத்தது போக, 185 டி.எம்.சி.தான் நமக்குக் கிடைக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் அப்போது சொன்னார்கள். வெகு நாட்களுக்குப் பின்னால் வருடங்கள் உருண்டோடியதற்குப் பின்னால், காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. இது இறுதித் தீர்ப்பாக இருக்கின்ற காரணத்தால், பெற்ற தீர்ப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த அரசு மத்தியில் ஆளுகின்ற கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கின்ற காரணத்தால், இந்தத் தீர்ப்பை முதலில் மத்திய அரசினுடைய Gazette-இல் வெளியிடச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு மேலாக காவிரிக் கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தி, நம்முடைய நீர் நமக்கு வருகின்றதா என்பதனைத் தொடர்ந்து கண்காணிக்கின்ற வேலையிலேயும் ஈடுபட வேண்டும்; அதை முதலில் நீங்கள் ஆற்றுங்கள் என்று சொன்னார்கள். அதற்கு மேலாக கிடைக்கப்பெற்ற நீர், நம்முடைய காவிரிப் பாசனப் பகுதிகளில் இருக்கின்ற மாவட்டங்களுக்குப் போதாது; நாம் கேட்டது 365 டி.எம்.சி. அடி; அவர்கள் வழங்கியது 192 டி.எம்.சி.தான்; போதாதென்றால், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடருங்கள் என்று அப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். ஆனால், இன்றுவரை அந்த நடைமுறை வரவில்லை. ஆனால், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்து, மாதேஸ்வரன் மலைக்கு

கர்நாடக அரசு எடுக்கின்ற நீர், அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமை, அது இறுதித் தீர்ப்பினால் வந்தது என்ற கருத்தை இங்கே பதிய வைத்திருக்கின்றார். இன்னும் இறுதித் தீர்ப்பு நடைமுறைக்கு வரவில்லை. (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். நீங்கள் முதலில் கேட்டுவிடுங்கள்.

முற்பகல் 11-55

ஆக, இந்த மேட்டூர் அணைக்கு வந்து சேருகின்ற நீர், அதற்கு மேலே இருக்கின்ற பிலிகுண்டுலு என்ற இடத்தில் நீர் அளவு அளக்கப் பெற்று, எவ்வளவு நீர் நம்முடைய தமிழகத்திற்கு வந்து சேருகின்றதென்ற கணக்கின்படி நம்முடைய உரிமையாக இன்று மேட்டூர் அணைக்கு உட்பக்கம் வந்து சேருகிறது. உட்பக்கம் நம்முடைய அளவாக, நம்முடைய உரிமையாக கர்நாடக அரசு அளந்து கொடுத்த நீர்தான் காவிரி அணையினுடைய உட்பக்கத்தில் வந்து சேருகிறது. அந்த நீரை எடுப்பதற்கு இறுதித் தீர்ப்பின் மூலமாக அவர்களுக்கு உரிமை இருக்கின்றது என்று இங்கே ஒரு கருத்தை உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பதிய வைத்திருக்கின்றார். இது எப்படி நியாயமாகும்? பக்கத்து மாநிலங்களுக்குக் குடிநீர்த் தேவைக்கு நீர் வழங்க வேண்டுமென்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால்; அது முறைப்படி எவ்வளவு நீர் அவர்கள் பயன்படுத்துகின்றார்களோ, அந்த நீரை . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று குறிப்பிட்டது, மேட்டூர் நீர்ப் பிடிப்புப் பகுதியிலே, ஓரத்திலே இருக்கிற பகுதியில்தான், கர்நாடக எல்லையிலிருந்துதான் அவர்கள் எடுக்கிறார்கள், நம்முடைய எல்லையில் இல்லை என்பதை முதலாவதாகத் தெரிந்துகொள்ளவேண்டும். நடுவர் மன்றத் தீர்ப்பு என்பது இறுதித் தீர்ப்பும் அல்ல. நீங்கள் அடிக்கடி இறுதித் தீர்ப்பு, இறுதித் தீர்ப்பு என்று சொல்லியிருக்கிறீர்கள். 205 டி.எம்.சி. அடி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று, அதைப்பற்றிய வழக்குகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; இந்த 205 டி.எம்.சி.அடி நீர் அளவுகூட, இன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது அதிகமாகவே இருக்கிறது. அது

நீங்கள் சொன்னதைப்போல வறட்சிக் காலங்களில் நமக்குக் கிடைக்காமல், மழைக் காலங்களிலே அதிகமாகக் கிடைத்துக்கொண்டிருப்பது, காலங்காலமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறதுதான். ஆண்டுக்கான average-ஐப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட அது வந்துகொண்டிருக்கிறது. ஒரு வருடத்திற்குப் பார்க்கும்பொழுது அவ்வளவுதான். நேற்றும்கூட, நான் அதிகாரிகளோடு அவற்றைப்பற்றியெல்லாம் எந்தெந்த வருடங்களில், எவ்வளவு வந்திருக்கிறது என்று கலந்தாலோசிக்கிறபொழுது, அதைத்தான் அவர்கள் ஒரு புள்ளிவிவரமாகக் கொடுத்திருக்கிறார்கள். நான் நேற்று உங்களிடம் சொன்னது, நாம் இப்பொழுது குடிநீருக்காக ஒகேனக்கல்லிலிருந்து வேலூர் மாவட்டம் வரை தண்ணீர் எடுக்கிறோம். அதுபோல, அவர்களே அனுமதிக்கிற அந்தக் குடிநீர்தான், அந்தக் குடிநீரினுடைய அளவுக்கு உட்பட்டுதான் அவர்கள் குடிநீர் எடுக்க முடியும். அதைப்பற்றிக்கூட, நாங்கள் அவர்களிடம் கேள்வியைக் கேட்டிருக்கிறாம், எந்த அடிப்படையிலே, எந்த உரிமையைக் கேட்டிருக்கிறீர்கள் என்று சொன்னோமே தவிர, தமிழகத்தினுடைய உரிமையை விட்டுக்கொடுக்கிற பிரச்சினை இதில் இல்லை. விட்டுக்கொடுக்கமாட்டோம் என்றும் சொல்லியிருக்கிறோம். ஆகவே, இதுபோன்ற பிரச்சினைகளில் நாம் மாநிலங்களோடு குடிநீர்ப் பிரச்சினை என்று வருகிறபொழுது சமாதானமாகவே செல்வதுதான் சரியாக இருக்குமே தவிர, சண்டை போட்டுக்கொண்டு அரசியலுக்காக நாம் செய்வது என்பது சரியாக இருக்காது. அதேநேரத்திலே உரிமையை விட்டுக்கொடுப்பது என்பதும் தமிழக அரசுக்கும், அதுவும் கலைஞர் அவர்கள் காவிரி ஆற்றோடு பிறந்தவர், அந்த ஒப்பந்தத்தோடு பிறந்தவர், நிச்சயமாக அவர் காலத்திலே அந்த உரிமையை விட்டுக்கொடுப்பது என்ற கேள்விக்கே இடமில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் தண்ணீர் கொடுப்பது பற்றியோ, அதை ஆட்சேபிக்கின்ற வகையிலோ இங்கே பேசவில்லை. அதாவது, நமக்கு நீர் வந்ததற்குப் பின்னால், அவர்கள் எடுக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. 22 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குழாய் அமைத்திருக்கிறார்கள்; Pumping Stations அமைத்துக்

கொண்டிருக்கிறார்கள்; இவற்றுக்கெல்லாம் நம்முடைய அனுமதியை அவர்கள் பெற்றிருக்கின்றார்களா? நமக்குக் கிடைக்கப்பெற்ற நீரிலிருந்து எடுக்கப்படுகின்ற நீரை அவர்கள் கொண்டு செல்வதற்கு அனுமதி ஏதாவது வழங்கி இருக்கின்றார்களா? அரசின் மூலமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றார்களா என்றால், அவர்களுடைய பதில் அதில் இல்லை. அரசினுடைய பொதுப் பணித் துறை அதிகாரிகள் பார்த்தார்கள்; வந்து சொன்னார்கள் என்ற விவரத்தினைதான் அவர்கள் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஒருவேளை நேற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதிகாரிகள் அவர்கள் சொன்னதை அப்படியே இங்கே தந்து விட்டார் என்றே நான் நினைக்கின்றேன். நான் சொன்ன வாசகங்கள் அதில் வருகின்றன. நீங்கள் திரும்பவும் அந்த அறிக்கையை வாங்கி படித்துப் பார்த்தால் தெரியும். ஏதோ அவர்களுக்கு காவிரிப் படுகையில் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பில் வழங்கப்பெற்ற பங்கிலிருந்துதான் எடுத்துக்கொள்கிறோம் என்ற பொருள் வருகிறது. அதைத்தான் நான் சொல்கின்றேன். நாம் பிலிகுண்டுலுவிலிருந்து நமக்கு வழங்கப்பட்ட நீரிலிருந்துதான் எடுக்கின்றோம். அதற்கு அவர்கள் ஆட்சேபனை தெரிவித்திருக்கின்றார்களா? சட்டபூர்வமான ஆட்சேபனை இருக்குமென்றால், அதை நாம் தீர்க்க வேண்டிய இடத்தில் இருக்கின்றோம், ஆதலால், நமக்கு வழங்கப்பட்ட நீரிலிருந்து அவர்கள் எடுக்கின்றார்களே, அதற்கு முறையாக அனுமதி பெற்றிருக்கின்றார்களா, வழங்கப்பட்ட நீரை அதிகப்படியாக அவர்கள் திரும்பவும் நமக்குத் தருகின்றார்களா என்ற விவரம் உங்களிடம் இருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்று படித்ததுகூட, கர்நாடகாவின் காவிரிப் படுகையில் நகர மற்றும் ஊரக மக்களின் மொத்த குடிநீர்த் தேவை 17.22 டி.எம்.சி. அடி எனக் காவிரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையில் மதிப்பீடு செய்துள்ளது. அவர்கள் சொன்ன ஆணையே அதுதான். 17.22 டி.எம்.சி. அடி அதற்குள் 50 சதவீதத்தை நிலத்தடி நீரிலிருந்தும், 50 சதவீதத்தை

காவிரியிலிருந்தும் எடுத்துக்கொள்ளலாம் என்பது அதனுடைய தீர்ப்பு. அந்த அடிப்படையிலேதான் அவர்கள், அதற்கு உட்பட்டுதான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு உட்பட்டு எடுத்துக்கொண்டிருப்பது என்பது அந்தத் தீர்ப்பிற்கு உட்பட்டது என்றுதான் நான் விளக்கம் அளித்தேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல. அந்தத் தீர்ப்பைத்தான் சொன்னேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வது உண்மை. அந்தத் தீர்ப்பில் வருகிறது. ஆனால், எங்கே? அது பிலிகுண்டுலுவுக்கு மேலே வருகிறது. கர்நாடக மாநிலத்தில் இருக்கின்ற காவிரிப் படுகை. அப்படித்தான் நீங்கள் பொருள் கொள்ளவேண்டும். அப்படித்தான் பொருள்கொள்ளவேண்டுமே தவிர, நம்முடைய பக்கம் அளந்து வந்ததற்குப் பின்னாலே எடுப்பது என்பது . . .

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிக்குள்ளாக இருக்கிறது. ஆனால், அந்தப் பகுதி, கர்நாடக எல்லைக்குள் இருக்கின்ற பகுதி. அவர்கள் தண்ணீர் எடுக்கின்ற பகுதி, கர்நாடக எல்லைக்குள் இருக்கின்ற பகுதி. அது எந்த மாவட்டம், எந்த ஊர் என்பதெல்லாம்கூட அதிலே தெளிவாக விசாரிக்கப்பட்டிருக்கிறது. அங்குதான் எடுக்கிறார்களே தவிர, நம்முடைய பகுதியிலேயிருந்து அவர்கள் எடுக்கவில்லை. ஆனால், அவர்கள் எடுப்பதால் நம்முடைய மேட்டூர் நீர்ப் பகுதிக்குப் பாதிப்பு ஏற்படுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் அரசுக்கு எழுதி தெளிவாகக் கேட்டிருக்கிறோம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் ஒரே வரியில் சொல்லிவிடுகிறேன். அது நமக்கு அளந்து கொடுக்கப்பட்ட நீர். அதிலிருந்து எடுக்கிறார்கள். திரும்ப எடுப்பதற்குரிய நீரை மறுபடியும் நாம் பெறுவது என்பது சட்டப்பூர்வமான நடவடிக்கையாக இருக்கவேண்டுமென்ற கருத்தில்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். தவிர, அவர்களுக்கு நீர் கொடுக்கக்கூடாது என்று நான் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த உரையை ஆரம்பிக்கும்போது நீங்கள் இந்த அவையில் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும்

என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குக் காலையில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன், நம்முடைய சட்டப் பேரவைத் தலைவரை. ஒரே மகிழ்ச்சியில் இருக்கின்றார். (சிரிப்பு) இன்றிலிருந்து விடுதலை கிடைக்கப்போகிறது என்று மகிழ்ச்சியில் இருக்கின்றார்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை இப்படிச் செல்கிறது என்று சொன்னால், முல்லைப் பெரியாறு பிரச்சினையும், 2006 பிப்ரவரியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருந்தபோது உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் 136 அடியிலிருந்து 142 அடியாக நீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பெற்ற பிறகும் இன்று வரை அந்தத் தீர்ப்பை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குரிய சாத்தியக்கூறுகளை, முயற்சிகளை இந்த அரசு எடுக்கவில்லை என்று கடந்த ஐந்தாண்டுக் காலமாகத் தொடர்ந்து இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். அந்த நிலைதான் இன்றும் நீடித்துக்கொண்டிருக்கிறது. இதனால் 6 மாவட்ட மக்களுடைய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் பெறுகின்ற நிலை மாறுபட்டிருக்கின்றது.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுகின்ற விதத்தில் முழுமையாக அந்தப் பெரியாறு நீர் எதிர்காலத்தில் கிடைக்குமா என்ற கேள்விக் குறி எழுப்புகின்ற தொனியில், அந்த உரிமை பறிபோய்விடுமோ என்ற ஏக்கம், எங்களுடைய தென் பகுதி மாவட்ட மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. காரணம், அங்கே கேரள அரசு புதிய அணையைக் கட்டுவதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்து, திட்ட மதிப்பீடுகளைத் தயார் செய்து, அதற்கு வேண்டிய அனைத்துப் பொருள்களையும் அங்கே கொண்டுபோய் சேமித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக மணல் வேண்டும். அந்த மணல் எங்கிருந்து போகிறது என்றால், அது பெரிய கொடுமை. தமிழ்நாட்டிலிருந்துதான் போய்க்கொண்டிருக்கிறது. ஒரு பிடி கை மண் அளவு மணல் கேரளாவில் எடுக்கமுடியாது. அங்கு தடையாணை இருக்கிறது. எங்கே மணல் எடுத்தாலும், அந்த ஆற்றின் அருகில் குடியிருக்கின்ற மக்கள் எதிர்ப்பார்கள், மறியல் செய்வார்கள். எடுத்தவர்களை அங்கேயே தண்டிக்கின்ற ஒரு சூழ்நிலை கேரள மாநிலத்திலே உருவாகியிருக்கிறது.

ஆனால், இப்போது தமிழ்நாட்டிலே மணல் கொள்ளை போய்க்கொண்டிருக்கிற சூழ்நிலை மட்டுமல்லாமல், நம்முடைய நீர் ஆதாரத்தையும், நாம் ஆயிரம் வருடத்திற்கு ஒப்பந்தமாக அணை கட்டிய அந்தப் பெரியாறு நீர்தேக்கத்தினுடைய முழு அளவையும் நாம் இழக்கவேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதையும் இந்த அவையினுடைய கவனத்திற்கு ஐந்தாண்டுகளாகக் கொண்டு வந்திருக்கிறேன்.

ஏனென்று சொன்னால், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினையாக இருந்தால் அந்தத் தீர்ப்பினை அமல்படுத்துகின்ற கடமையும், பொறுப்பும் அந்த மாநில அரசுக்கு உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இரு மாநிலப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருந்தால், தீர்ப்பினை அமல்படுத்துகின்ற கடமையும், பொறுப்பும் மத்திய அரசுக்கு உள்ளது. நீங்கள் மத்திய அரசில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கிறீர்கள். இருந்தும், அந்தத் தீர்ப்பினைப் பெற்றுத் தரமுடியாத அரசாகத்தான் உங்களுடைய அரசு தொடர்ந்து இருக்கின்றது என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒரு அரசியல் உள்நோக்கத்தோடு குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். உச்ச நீதிமன்றத்திலே நீங்கள் போட்ட வழக்கு, அதுவும் நம்பர் கூட வாங்காமல் சென்றுவிட்ட வழக்கு, அந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தி, பராசரன் அவர்கள் காலத்திலே அந்த வழக்குத் தொடர்ந்து நடைபெற்றுதான் இப்பொழுது சுப்ரீம் கோர்ட்டிலே முல்லைப் பெரியாறுக்காக ஒரு குழுவை நியமித்திருக்கிறார்கள். ஆனந்த் என்ற ஒரு நீதிபதி தலைமையிலே அந்தக் குழுவை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் 3 முறை அங்கே முல்லைப் பெரியாறுக்குச் சென்று அதைப் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். நான்காவது முறையாக அவர்கள் செல்வதற்கு—இது கேரள அரசிற்கும், நமக்குமுள்ள ஒரு உணர்ச்சிகரமான பிரச்சினை. அது ஒன்றும் உங்களுக்குத் தெரியாதது அல்ல. அந்த அடிப்படையிலேதான், உச்ச நீதிமன்றம் சொன்ன தீர்ப்பை மீறித்தான் ஆளுநர் உரையிலேகூட அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று முன்பே சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

ஆளுநர் உரையிலே சொல்லியிருப்பதைக்கூட மறுத்து, நம்முடைய தலைமைச் செயலர் மூலமாக அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதி உச்ச நீதிமன்றத்திலேயே இதற்கான வழக்குகளைத் தொடுப்பதற்கான முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசின் சார்பிலும் அதிலே பிரதிநிதிகள், நீதிபதி அவர்கள் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பணியிலே தமிழக அரசு எந்தவிதத்திலும் விட்டுக் கொடுக்காமல் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, உச்ச நீதிமன்றம் என்று போய்விட்ட பிறகு நமது மத்திய அரசு அங்கே என்ன செய்ய முடியும்? உச்ச நீதிமன்றத்தின்மூலம்தான் இப்பொழுது அதன் வழிகாட்டுதலை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை பல விஷயங்களில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படி உச்ச நீதிமன்றம் முல்லைப் பெரியாறுக்கு ஒரு தீர்ப்பை வழங்கி அதிலே ஒரு குழுவையும் நியமித்திருக்கிறபொழுது, அந்தக் குழுவினுடைய செயல்பாடுகளுக்குத்தான் தமிழக அரசு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் அல்ல. நிச்சயமாக கலைஞர் இருக்கிற வரை, அங்கே கேரள அரசாங்கம் புதிய அணை கட்டுவதற்கு எந்த விதத்திலும் அனுமதிக்கமாட்டோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே நாங்கள் வழக்குத் தொடுத்து, நம்பர் வாங்காமல் போகவில்லை. உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள் 2006 பிப்ரவரியிலே ஒரு நல்ல தீர்ப்பு வாங்கித் தந்திருக்கிறார்கள். 136 அடியாக குறைக்கப்பட்ட அளவிலிருந்து 142 அடியாக நீரைத் தேக்கிக்கொள்ளலாம், பேபி அணையையும், சிற்றணையையும் பழுது நீக்கம் செய்த பிறகு, முழுக் கொள்ளளவான 152 அடி வரை தேக்கிக்கொள்ளலாம் என்று தீர்ப்பு வாங்கித் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை அதுவல்ல. கேரள அரசாங்கத்திலே சட்டம் போட்டார்கள் அல்லவா? உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து ஒரு சட்டம் போட்டார்கள் அல்லவா? அப்போது உங்கள் ஆட்சிதான் இருந்தது. உங்கள் ஆட்சி இருக்கும்போதுதான், கேரள அரசாங்கத்தின்மீது உச்ச நீதிமன்றத்திலே போய் அதற்குரிய வழக்கைப் போட்டுவிட்டு,

நம்பர்கூட வாங்காமல் வந்தது உங்கள் ஆட்சிதான். அதற்குப் பிறகு, பொதுப் பணித் துறை அமைச்சராக துரைமுருகன் அவர்கள் வந்தபோதுதான் அதற்கு நம்பரே வாங்கப்பட்டு, அந்த வழக்கு இன்று தொடர்ந்து நடைபெற்று, அதன்மூலமாகத்தான் ஒரு குழுவே நியமிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கினுடைய தீர்ப்பு வந்தது பிப்ரவரி மாதம்தான். மார்ச் மாதம்தான் கேரளச் சட்டமன்றத்திலே ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தார்கள். 2003-இலேயே நீர்ப் பாதுகாப்புச் சட்டம் ஒன்று இருந்தது. அந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தச் சட்டத்தின்படி அணைகளில் எல்லாம் அந்தத் திருத்தச் சட்டத்தில் நீரின் அளவு என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அந்த அளவு இருக்கவேண்டும் என்று திருத்தச் சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னாலேயே வந்துவிட்டது. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை எதிர்த்து, திருத்தச் சட்டம் கொண்டு வர ஒரு மாநில அரசுக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. இல்லை; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்பிரகாரம் அந்த உரிமை ஒரு மாநில அரசுக்கு இல்லை. அதற்குப் பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. இடைக்காலத் தீர்ப்பிலே காவிரி நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. அடி கொடுக்கும்போது, கர்நாடக அரசின் சட்டமன்றமும், மேலவையும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றின. அது செல்லாது என்று சொல்லி, அந்த வழக்கை எடுத்துக்கொண்டு அம்மா அவர்கள் அப்போதே உச்ச நீதிமன்றத்திற்குப் போனார்கள். அதிலே உச்ச நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்கியது? நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பு செல்லும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. முன்னுதாரணம் இருக்கிறது. உடனே மாண்புமிகு அம்மா உச்ச நீதிமன்றத்திற்குப் போய் வழக்குத் தொடர்ந்து எங்கள் ஆட்சியிலேயே நம்பர் ஆகிவிட்டது. அதை ஏன் தொடர்ந்து நடத்தி . . .

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாகப் பேசிக் கொண்டிருக்கிறார். இப்போதுதான் சொன்னார், உச்ச நீதிமன்றம் சொன்னாலும்கூட நீங்கள் மத்திய

2011 பிப்ரவரி 10] [டாக்டர் க. பொன்முடி]

அரசிலே அங்கம் வகிக்கிறீர்களே உங்களால் செய்ய முடியாதா என்று சொன்னார்கள். இப்பொழுது அவரே சொல்கிறார், உச்ச நீதிமன்றம் சொன்னதற்குப் பிறகு கேரள அரசாங்கத்திற்குத் திருத்தம் கொண்டு வருவதற்கு உரிமையில்லை என்று சொல்கிறார். ஆக, உரிமையில்லை என்பதையும் ஒத்துக்கொள்கிறீர்கள், பிறகு மத்திய அரசு செய்ய வேண்டும் என்று சொன்னால் எப்படிச் செய்ய முடியும்? அதையும் தயவுசெய்து நினைத்துப் பாருங்கள். ஆகவே, அந்தத் திருத்தச் சட்டம் செல்லாது என்பதற்காகத்தான் இன்றும் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தத் திருத்தச் சட்டம் செல்லாது என்பதற்காகத்தான் இந்தக் குழுவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுதான் அந்த அணையை இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கிறது. அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு நியமித்ததற்கும், சட்டத்திற்கும் சம்பந்தமே கிடையாது. திருத்தச் சட்டம் செல்லாது என்பதற்கு ஏற்கெனவே முன்னுதாரணம் இருக்கிறது. காவிரி நடுவர் மன்றத்திலே இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது கர்நாடகாவினுடைய சட்டமன்றமும், மேலவையும் அங்கே ஒரு தீர்மானம் நிறைவேற்றின. திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு நாம் போயிருக்கிறோம். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதைத்தான் மறுபடியும் வலியுறுத்தி, நீங்கள் ஏன் அந்தத் தீர்ப்பைத் திரும்ப வாங்கவில்லை; உறுதிப்படுத்தவில்லை; அம்மா வாங்கித் தந்த அந்தத் தீர்ப்பை நீங்கள் ஏன் உறுதி செய்யவில்லை என்று கேட்கிறேன். குழு அமைத்தது அணை பலமாக இருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்ப்பதற்குத்தான். அணை பலமாக இருக்கிறதா, இல்லையா என்பதை மூன்று தடவை பார்த்துவிட்டார்கள், மத்திய நீர்வளக் குழுமம் மூன்று முறை பார்த்துவிட்டது. கடைசி முறையாக வழக்கு உச்ச நீதிமன்றம் போனதற்குப் பின்னாலே, தொழில்நுட்ப வல்லுநர் குழுவை அந்த முல்லைப் பெரியாறு அணைக்கு அனுப்பி, பல்வேறு ஆய்வுகளை அங்கே நடத்தியுள்ளது. பூகம்பமே ஏற்பட்டாலும், இந்த அணை தாங்குமா என்று பெண்களை எல்லாம் உள்ளே அனுப்பிப் பார்த்தார்கள். பூகம்பமே ஏற்பட்டாலும்கூட, அந்த அணை உடையாது, பலமாகத்தான் இருக்கிறது என்று மத்திய நீர் வளக் குழுவும், தொழில்நுட்ப

வல்லுநர் குழுவும் சான்றிதழ் கொடுத்துவிட்டன. அப்புறம்தான் அவர்கள் மறுபடியும் வம்புக்கு இழுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் நீதிமன்றத் தீர்ப்பு செல்லும் என்று சொல்லவே இல்லை. அந்த வழக்கினுடைய துணையாகத்தான் இந்தக் குழுவே நியமிக்கப்பட்டிருக்கின்றது. நானே சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று இந்த வழக்கு சம்பந்தமாக நேரில் ஆஜராகிவிட்டு வந்தேன். அந்த வழக்கிலே நான் கலந்துகொண்டபோதுகூட அவர்கள் சொன்னது, கேரள அரசு போட்ட சட்டம் செல்லுபடியாகாது என்று. இன்னும் உச்ச நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வரவில்லை. நீங்கள் வந்ததாகச் சொல்கிறீர்கள். தவறான செய்தி. இன்னும் வரவேயில்லை. அதற்காகத்தான் வழக்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: காவிரிப் பிரச்சினையில் இதுபோல் தீர்ப்பு வந்தது. அதைத்தான் நான் உதாரணமாகச் சொன்னேன். நான் என்ன சொல்கிறேன் என்பதை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டு பேசினால் பிரச்சினைக்கு இடம் இல்லை. இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினையில் நமது உரிமையை மீட்டுத் தர இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வளவுதான். இதற்கு நான் பல காரணங்கள் சொல்லவேண்டியிருக்கின்றது. நீங்களும் அதை மறுக்க வேண்டியிருக்கிறது.

அடுத்து, 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம். அது தொடர்ந்து 5 வருடங்களாக இருக்கின்றது. நீங்கள் கொடுத்ததாகத் தெரியவில்லை. (சிரிப்பு) அக்கா சிரிக்கிறார்கள். ஏனென்று தெரியவில்லை. 2 ஏக்கர் நிலம்; அதை மறந்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். அதைக் கொஞ்சம் நினைவில் வைத்துக்கொண்டு நிலமற்ற ஏழை விவசாயிகள் அத்தனை பேர்களுக்கும் இரண்டு, இரண்டு ஏக்கராக இருக்கின்ற நிலத்தினைப் பிரித்து, இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் அந்த 2 ஏக்கர் நிலம் இல்லாதவர்களுக்குப் பார்த்து கொடுக்க வேண்டும் என்று மிக மிகத் தாழ்மையுடன்

ஏழை மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். பிறகு பட்டா கொடுத்துவிட்டோம் என்று நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஒவ்வொரு முறையும் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். முதலில் 3 இலட்சம், 4 இலட்சம், 5 இலட்சம் என்று இப்போது 8 இலட்சத்தில் போய் நிற்கிறது. அதாவது, ஒரே குடும்பத்தில் பல பேருக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலம் உள்ளவர்களுக்கு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நில ஒப்படைப்பு என்று நம்முடைய அரசு ஆணை இருக்கின்றது. நிலம் இருப்பவர்களுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். பல்வேறு உதாரணம், ஆதாரம் இருக்கிறது. அதற்கான ஆதாரம் இதோ இதில் இருக்கிறது. நீங்கள் வாங்கி அமைதியாக இருக்கும்போது படித்துப் பாருங்கள்.

(உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி அவர்கள் ஒரு தாளினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் அளித்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறுதலாகக் கொடுத்திருந்தால் அதற்கான ஆதாரம் இருந்தால் கொடுங்கள். அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நிலமற்றவர்களுக்கு வீட்டுமனை இல்லாதவர்களுக்கு வீட்டுமனை கொடுக்கும்படியும், நிலமில்லாத விவசாயிகளுக்கு நில ஒப்படைப்பு செய்யவேண்டும் என்றும் இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா என்பது இரண்டு பிரிவாக ஏற்கெனவே அவர்கள் குடியிருந்து வருகின்ற இடங்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கின்ற திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்துதான் இன்றைக்கு பல இலட்சம் பேருக்கு வீட்டுமனைகளை இந்த அரசு வழங்கியிருக்கின்றது. உங்கள் ஆட்சியில் அனுபவித்தவர்களுக்கே பட்டா கொடுக்கவில்லை நீங்கள். அதுமட்டுமல்லாமல், நாங்கள், வீடே இல்லாதவர்களுக்கு, இடம் இல்லாதவர்களுக்கு கொடுத்து இருக்கிறோம். புதியதாகக் கண்டுபிடித்து வீடு இல்லாதவர்களுக்கும் கொடுக்கிறோம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது இந்த வீட்டுமனைப் பட்டா கொடுப்பதில் சில முறைகேடுகள் நடந்திருக்கின்றன. தனக்கு வேண்டியவர்களுக்கு, ஏற்கெனவே நிலம் இருப்பவர்களுக்கெல்லாம் பட்டா கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். முறைகேடு என்பதை நீங்கள் புள்ளிவிவரங்களுடன் கொடுக்கவேண்டும். நீங்கள் பொத்தாம் பொதுவாகக் கொடுக்கக்கூடாது. (குறுக்கீடு) இல்லை, இதுவரை 8¼ இலட்சம் பேர்களுக்குமேல் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. அதில் எங்கேயாவது தவறு இருப்பதைச் சுட்டிக்காட்டினால், தலைவர் கலைஞர் அவர்களின் அரசு பாரபட்சம் பார்க்காமல் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நான் கேட்பது நில ஒப்படை சம்பந்தப்பட்டது. நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு நிலம் ஒப்படை செய்வது. திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், பரலிபுதூர் வருவாய் கிராமம் புல எண் 327-இல் 150 ஏக்கர் நிலம் பிரித்துக் கொடுத்துள்ளீர்கள். அங்கே நிலம் இருப்பவர்களுக்கே, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 2, 3 பேர்களுக்கும், திண்டுக்கல், மதுரை மாவட்டத்தினைச் சேர்ந்தவர்களுக்கும் நிலம் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டத்தில் அதிகமான நிலம் கொடுத்திருக்கிறோம். பரலிபுதூர் என்று நீங்கள் சொல்கிறீர்கள். அங்கே ஒரு முன்னாள் அமைச்சர் இருக்கிறார். அவரிடமிருந்து இதுவரைக்கும் எனக்கோ, மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ ஏதேனும் புகார் வந்துள்ளதா? எந்தவிதப் புகாரும் கொடுக்கவில்லை. இதுவரை புகார் கொடுக்கவில்லையே? நான்தான் அந்த நிலங்களை நேரில் சென்று கொடுத்தேன். நிலமற்ற ஏழைகளுக்கு அதிகாரிகள் புலனாய்வு செய்து கண்டிப்பாக நிலமற்ற ஏழைகளுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கின்றது. அப்படி நீங்கள் ஆதாரம் கொடுத்தால் விசாரித்துதான் அதைச் செய்யமுடியும். நீங்கள் கொடுக்கின்ற விவரத்தை வைத்துக்கொண்டு உடனே எதுவும் செய்யமுடியாது. முதலில் நீங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இதுவரைக்கும் தெரிவிக்கப்படவில்லை. நான் கொடுத்து

கிட்டத்தட்ட 2 வருடங்கள் ஆகிவிட்டன. நிலத்தை எல்லோரும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நிலம் கொடுத்து 2 வருடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) இல்லை, இல்லை. எங்கேயும் கொடுக்கவில்லை. (குறுக்கீடு)

பிற்பகல் 12-15

திரு. இரா. விசுவநாதன்: நீதிமன்றத்தில் தடையாணை வாங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: இதுவரைக்கும் எங்கள் கவனத்திற்கு வரவில்லை. இதுவரைக்கும் என்னுடைய கவனத்திற்கு நீதிமன்றத்திற்குச் சென்று யாரும் தடையாணை வாங்கியதாகத் தகவலே கிடையாது. நான்தான் பட்டா கொடுத்தேன். எல்லோரும் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற அந்த மனுவிலேயே வந்து . .

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: நிலம் இல்லாமல் எப்படிக் கொடுக்க முடியும்? நீங்கள் வாருங்கள் நான் காண்பிக்கிறேன் என்று ஏற்கெனவே இதே அவையில் சொல்லியிருக்கிறேன். முன்னாள் முதலமைச்சர் தொகுதி ஆண்டிப்பட்டி தொகுதியிலும் சரி, முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம் தொகுதியிலும் சரி, முன்னாள் அமைச்சர் தொகுதியிலும் சரி, வாருங்கள்; நிலம் இல்லை என்று நிரூபித்தால் நான் அரசியலை விட்டே போகிறேன். நிலத்தை நான் காண்பித்துவிட்டால், நீங்கள் போகத் தயாராக இருக்கிறீர்களா என்று நான் கேட்கிறேன். நிலத்தை நான் காண்பிக்கிறேன். நீங்கள் வாருங்கள், எந்த இடத்திலே வேண்டுமானாலும் காண்பிக்கிறேன், தமிழ்நாட்டிலே கொடுக்கப்பட்ட நிலங்கள். நேற்றுகூட நம்முடைய பாலபாரதி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல எல்லா இடங்களுக்கும் வாருங்கள். நிலம் இருக்கிறதா என்று நான் காண்பிக்கிறேன். நிலம் இல்லை. நிலம் இல்லாமல் கொடுக்கப்பட்டிருந்தால் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன். அமைச்சர் என்ற முறையில் எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். நீங்கள் ஏதாவது பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா? நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். நானும் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: எந்த முறைகேடும் கிடையாது. ஒரு துளி முறைகேடு நடந்திருந்தாலும், நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஒரு துளி முறைகேடும் கிடையாது. நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விசுவநாதன், நீங்களாகவே எழுந்து பேசினால் என்ன அர்த்தம்? திரு. ஓ. பன்னீர்செல்வம், பேசுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்கு ஒரு கருத்து. வீணாக சவால்விட்டு வம்பில் மாட்டிக்கொள்ளாதீர்கள்; evidence அதிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: இந்த அவையில் இருந்து ஓடிப் போன உங்கள் அமைச்சர்தான் சவால் விட்டு, புறமுதுகு காட்டி ஓடிப்போனவர். நாங்கள் சவாலைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் திண்டுக்கல் மாவட்டம்தான். என்னமோ திண்டுக்கல் மாவட்டத்திலேயே நிறைய வந்துகொண்டிருக்கிறது. நத்தம் வட்டம், பரலிபுதூர் வருவாய் கிராமத்தில் கடம்பவனம் கலைப் பண்பாட்டு மையம் என்ற பெயரில் சொகுசு விடுதி-luxury hotel-ஒன்று இருக்கிறது. அந்த ஒட்டல் 7.40 ஏக்கர் நிலத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. Cottage எல்லாம் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். அதன் பக்கத்தில் 12.41 ஏக்கர் புறம்போக்கு நிலம் ஒன்று இருக்கிறது. புறம்போக்கு நிலத்தில் நிறைய பேர் குடும்பமாக, காலங்காலமாக உழுது கொண்டிருக்கிறார்கள். கடம்பவனத்தின் ஒட்டல் உரிமையாளர், அவர்களை வெளியேற்றிவிட்டு "B" Memo போட்டுவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு அனுப்புகிறார். அந்த 12 ஏக்கர் நிலத்திற்குப் பட்டா கொடுங்கள்; நிலம் ஒப்படைப்பு கொடுங்கள்; அதற்குரிய தொகையை நாங்கள் செலுத்திவிடுகிறோம்; நில மாற்றம்

2011 பிப்ரவரி 10] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

செய்து கொடுங்கள் என்று மனு கொடுக்கிறார். பழைய மாவட்ட ஆட்சித் தலைவரும், ஆணையரும் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். ** என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுபோல் திண்டுக்கல் மாவட்டம் (குறுக்கீடு) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முன்னாள் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தவர். ஒரு நிலத்தை ஒருவர் அசைன்மென்ட் கேட்டு அது பரிந்துரைக்கப்பட்டு அரசுக்கு வந்தால் அரசு வழங்கியிருக்கிறதா? இது குற்றச்சாட்டா? நான் கேட்கிறேன் (குறுக்கீடு) இருங்கள். பரிந்துரை வந்ததே தெரியாதே? அமைச்சருக்கே பரிந்துரை வந்திருக்கிறது என்று தெரியாது. நான் கேட்கிறேன். "B" Memo வைத்து, நிலத்திற்கு விலை கொடுப்பதற்கும், பட்டா கொடுப்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. நீங்கள் முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்பதைத்தான் சொல்கிறேன். இது குற்றச்சாட்டே இல்லை என்கிறேன். அரசாங்கம் கொடுத்திருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். நான் கேட்கிறேன் உங்களை ** (குறுக்கீடு) நானும் அதைத்தான் சொல்கிறேன். அதை விலைக்குக் கேட்டால் அரசாங்கம் கொடுத்திருக்கிறதா? அரசாங்கம் நிச்சயம் கொடுக்காது. (குறுக்கீடு) மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தது எங்களுக்குத் தெரியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் பேசுகிறீர்கள், மற்றவர்களைக் கொஞ்சம் அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். நீங்கள் பேசுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி பிரச்சினை ஓடிக்கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட பகுதியிலே ஏற்கெனவே நிலத்தை அனுபவித்துக்கொண்டிருந்தவர்கள். . .

பிற்பகல் 12-20

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வதுபோல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எந்தப் பிரச்சினை வேண்டுமானால் வரட்டும். இந்த அரசு தெளிவாக இருக்கிறது. (குறுக்கீடு) இருங்கள். ** ஒரு செண்ட் நிலம் எடுப்போமா? நாங்கள் தவறு செய்யமாட்டோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், அனுமதி இல்லாமல் நீங்கள் பேசக் கூடாது. உட்காருங்கள். Please. (குறுக்கீடு) அனுமதி இல்லாமல் பேசாதீர்கள். திரு. பன்னீர்செல்வம், நீங்கள் மட்டும் பேசுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஒரு அரசினுடைய ** என்ற விவரங்களை இங்கே தெரிவித்துக்கொண்டிருக்கிறேன். அவர் குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: ** யார் கொடுத்திருக்கிறார்கள்? நீங்கள் பொறுப்பாகப் பேசவேண்டும். இவ்வளவு பொறுப்பாகப் பேசுகிறீர்களே? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வதுபோல், ** இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிறதா? ஆதாரத்தைக் கொடுங்கள். சும்மா ஏதாவது பொத்தாம் பொதுவாக சொல்லக்கூடாது. அரசாங்கம் தமிழ்நாட்டில் எங்கே கொடுத்திருக்கிறது என்று சொல்லுங்கள். எந்த நிலமும் அரசாங்கம் கொடுக்கவில்லை. நீங்கள் கொடுக்காததற்கு ஏதோ நடக்கப்போகிறது என்பதுபோல பேசக்கூடாது. **

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ** அரசுக்கு முன்மொழிவு வந்திருக்கிறது என்ற விவரங்களைத்தான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ** கொடுத்தீர்கள் என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். முழுவதும் சொல்வதற்குள் ஏன் இடைமறிக்கிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை இல்லை. ** முன்மொழிவு வந்திருக்கிறது என்பதைத்தான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்றுதான் சொல்லவருகிறேன். முடிக்க விடமாட்டேன் என்கிறீர்களே? (குறுக்கீடு) தடுத்து நிறுத்தினால் ரொம்பவும் சந்தோஷம். அதைத்தான் சொல்ல வருகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நான் பேசுகின்ற வாதத்திலிருந்து மாறிவிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவையில்லாமல் ** இங்கே பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து முதலில் நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ** பற்றி அவர் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அவர்தான் சொல்லிவிட்டாரே, முயற்சி நடக்கிறது, அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று சொல்லிவிட்டாரே, பிறகென்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) அது pending enquiryதானே? (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன் பேசுகிறார். நீங்கள் எல்லோரும் பேசினால் எப்படி? ஓர் ஆளுக்குத்தான் பதில் சொல்ல முடியும். எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது. ** அது உண்மை. (குறுக்கீடு) இவர் சொல்வதிலே உண்மையில்லை. அரசாங்கம் அப்படி எந்த நிலமும் கொடுக்கவில்லை. ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். (குறுக்கீடு) இருங்கள் Sir. நாங்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் ஏன் எங்களைப் பேசவிடமாட்டேன் என்கிறீர்கள்? அவர் பரிந்துரை செய்ததையே ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லிக்கொண்டிருந்தார். ஆணையே பிறப்பிக்கவில்லை. இல்லாத ஒன்றை, ஆணையே பிறப்பிக்கப்படாத ஒன்றை அவர் குற்றச்சாட்டாகச் சொன்னார். ஆனால், மாண்புமிகு அமைச்சர் பேசுகின்றபொழுது, இதே மன்றத்தில் ** ஆகவே, நீக்க வேண்டுமென்று சொன்னால் அவர் பேசியதையும் சேர்த்து நீக்கவேண்டும். அவர் சொன்ன

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குற்றச்சாட்டுகளையும் சேர்த்து, இரண்டையும் நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.பி.எஸ். அவர்கள் சொன்னதும், அமைச்சர்கள் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் முயற்சித்தீர்கள், முயற்சி நடக்கிறது என்று சொல்வது எல்லாம்—நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், final order Government-இலே போட்டாகி விட்டதாகச் செய்தி கிடையாது. முயற்சி நடக்கிறது என்று சொல்கிறீர்கள். இதெல்லாம் presumption-இல் உள்ளது. தெரிகிறதா? நீங்களாகக் கற்பனையில் சொல்வதையெல்லாம் ஒத்துக்கொள்ள முடியாது. நீங்கள் சொன்னதும், அமைச்சர்கள் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு தவறான தீர்ப்பை வழங்குகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறான முன்னுதாரணம் இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் presumption-இல் பேசாதீர்கள். நீங்கள் ஒரு கோரிக்கை மனு கொடுக்கிறீர்கள். அமைச்சர் அதை ஏற்றுக்கொண்டால்தான் order போட்டதாக அர்த்தமே தவிர, அது இல்லையென்றால் அவர் order pass பண்ணியதாகச் சொல்ல முடியாது. அதை ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம்; ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம். அதெல்லாம் ஒரு presumption. அந்த presumption-இல் உள்ளது எல்லாம் இதில் வராது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஆக, என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் கடம்பவனம் என்று luxury hotel அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற நிலத்தை ** இங்கே, அரசுக்கு முன்மொழிவுகள் வந்திருக்கின்றன. ** ஆகவே, அதைக் கொடுக்க வேண்டாமென்றுதான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். (குறுக்கீடு) ஏன் தேவையில்லாமல் கோபப்படுகிறீர்கள்? (குறுக்கீடு) ஏன் தேவையில்லாமல் கோபப்படுகிறீர்கள்? எதற்குத் தேவையில்லாமல் இந்த matter-ஐப் பேசுகிறார் அவர்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *யாரும் கோபப்படவில்லை. உங்களிடம் ஏன் கோபப்படப்போகிறேன்? (குறுக்கீடு)* No, No. *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் இப்போது சொன்ன அந்த விளக்கத்தை தாங்கள் ஏற்றுக்கொண்டு, அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதே தவிர, குற்றச்சாட்டு அல்ல என்ற முறையில் தொடர்ந்து பேசி, 12½ மணிக்குள் அவருக்குத் தரப்பட்ட நேரத்தில் உரையை முடித்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் பேசுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழையெளிய, நடுத்தர மக்களின் குரல் வளையை நெரித்துக் கொண்டிருக்கும் விலைவாசி பிரச்சினையைச் சீர்படுத்த ஏதாவது திட்டம் தரப்பட்டிருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தாலும் பூஜ்ஜியம்தான். முந்தைய காலங்களில் எல்லாம் வெங்காயம், தக்காளி, பூண்டு என ஏதாவது ஒன்றின், ஒரு பொருளின் விலை ஏறும். வேறு ஒரு பொருளின் விலை குறைந்து, அதைச் சமப்படுத்தும். ஆனால், இன்றைய நிலை என்ன? காய்கறிகள், பழங்கள், மளிகைச் சாமான்கள், மாமிச வகைகள், ஓட்டல் பண்டங்கள் என எல்லாப் பொருட்களின் விலைகளுமே உச்சாணிக் கொம்பிலே போய் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு வெங்காயத்தை 4 ஆக வெட்டி, காலைச் சட்டினிக்கு 1/4 பாகம், மதிய சாம்பாருக்கு 1/4 பாகம், மீதம் உள்ள 1/2 பாகம் நாளைய சமையலுக்கு என்று வெங்காயத்தை உரிக்காமலேயே கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள் தாய்மார்கள், குடும்பத் தலைவிகள். இந்த அளவிலே நீங்கள் ரேஷன் கடைகளிலே வைத்துக் கொண்டிருக்கும் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு என்று விளம்பரத் தட்டிகளைப் பார்த்து மக்கள் என்ன பேசுகிறார்கள் என்று உங்கள் உளவுத் துறையிடம் விசாரிக்கச் சொல்லி விளக்கம் பெறுங்கள். தாய்மார்கள் அடுப்பிலே சட்டியை வைத்து ஒவ்வொரு காயாக வதக்கும்போது விலைவாசியைக் கட்டுப்படுத்த கையால் ஆகாத அரசை வதக்குவதாக நினைத்துக்கொண்டு வதக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியை மாற்ற நேரம் எப்போது வருமோ என்று எண்ணி எண்ணி வதக்குகிறார்கள். காய்கறி முதல் கட்டுமானப் பொருட்கள்*

வரை எல்லாப் பொருட்களும் ஏகத்திற்கு விலை ஏறி, எல்லாத் தரப்பு மக்களும் படும் இந்தக் கொடுமையை நீக்க நீங்கள் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் என்ன என்பதைப் பற்றி ஏதாவது ஒரு குறிப்பேனும் இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்து, ஒன்றும் இல்லை என்ற நிலைதான் இங்கே ஏற்பட்டிருக்கிறது. விலை உயர்வுக்கான காரணங்களைப் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கின்றீர்கள். யாருக்கு வேண்டும் அந்தக் காரணம்? விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த இந்த அரசால் இயலுமா? இயலாதா? அதற்கு மேற்கொள்ளப்போகும் திட்டம் என்ன என்று கூறப்பட்டிருக்கிறதா? அதுவும் இல்லை.

மேலும், கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் pack பண்ணி சில பொருட்களையெல்லாம் அங்கே கொடுக்கிறீர்கள். இந்தப் பொருட்கள் 4 ஆம் தரம், 5 ஆம் தரமாக அங்கே வழங்கப்படுகின்றன. அந்தப் பொருட்களின் நிலையைப் பற்றிச் சொல்கிறேன் கேளுங்கள். அந்தப் பொருட்கள் வாங்கப்பட்டு அவற்றை pack செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்து மறுபடியும் இங்கே நியாய விலைக் கடைகளுக்கு வருவதற்கே 4 மாதங்கள் ஆகின்றன. ஆனால், அந்த pack-களில் 6 மாதங்களுக்குள் உபயோகிக்க வேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. Pack செய்து வருவதற்கே 4 மாதங்கள் ஆகின்றதால், நியாய விலைக் கடைகளுக்கு வருகின்றபோது கிட்டத்தட்ட 3 ஆம், 4 ஆம், 5 ஆம் தரப் பொருளாக இருப்பதனால், நியாய விலைக் கடைக்கு வருகிற வழியிலேயே கிட்டத்தட்ட 75, 80 சதவிகிதப் பொருட்கள் உபயோகிக்க முடியாத நிலையில்தான் இன்றைக்கு இருக்கின்றன என்ற குற்றச்சாட்டு, நியாய விலைக் கடைகளில் வாங்குகின்ற மக்கள் அதை வாங்காமலேயே அத்தனையும், மற்ற பொருட்கள் எல்லாம் அங்கே தேங்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்கேயும் சொல்லப்படவில்லை என்று

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார். அவர் பட்ஜெட் புத்தகத்தைப் படித்துப் பார்க்கவேண்டும். 18, 19 மற்றும் 20 ஆம் பக்கங்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டு, எந்தெந்த வகைகளில் இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் அந்தக் குறிப்பிட்ட பக்கங்களைப் பார்க்கவேண்டும்.

வெங்காயத்தைப் பொறுத்தவரை, நான்காக வெட்டுவது, எட்டாக வெட்டுவது அவருடைய பழக்கமாக இருக்கலாம். இன்றைக்கு மார்க்கெட்டில் வெங்காய விலை 5 ரூபாய், 3 ரூபாய், 10 ரூபாய் என்று விற்கப்படுகிறது. பத்திரிகையிலேயே 2 ரூபாய்க்கும் வெங்காயம் இப்போது கிடைக்கிறது என்று வந்திருக்கிறது. திரும்பத் திரும்பச் சொல்லியாகிவிட்டது, இந்த விலைவாசியை வைத்துக்கொண்டு வரும் தேர்தலில் மக்களைச் சந்திக்கலாம் என்று நினைக்கிறீர்கள். அது ஒரு காலமும் நடக்காது. விலைவாசியை இந்த அரசாங்கம் கட்டுப்படுத்தும்.

அதேநேரத்தில், பொது விநியோகக் கடையில் 10 பொருட்களை விற்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். Tender condition என்னவென்றால், குறிப்பிட்ட தேதியிலே டெண்டரில் கோரிய அந்தப் பொருட்களை அனுப்பவேண்டும். டெண்டர் விட்டுப் போகும்போது ஒரு மாத காலமாகும். 6 மாதத்திற்குரிய பொருட்கள் இல்லையென்று சொன்னால், அவை பரிசீலிக்கப்பட்டு அவற்றையெல்லாம் seize செய்துவிடுகிறோம். அதனால் தவறான பொருட்களோ, கெட்டுப்போன பொருட்களோ நுகர்வோருக்குச் சென்று சேராது. இதுதான் tender condition. ஏதோ பொத்தாம் பொதுவாகப் பேசாதீர்கள். ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். நாங்கள் உடனே நடவடிக்கை எடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த மாதிரியான பொருட்களையெல்லாம் நாங்கள் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனாலும் எந்த விலைவாசியும் குறையவில்லை. அதனால்தான் திரும்பவும் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இவ்வளவு ஆதாரங்களைச் சொல்கிறேன். விலை குறையவில்லை என்று மீண்டும் சொன்னால் என்ன அர்த்தம்?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பத்திரிகை நண்பர்கள், நம்முடைய நிதித் துறைச் செயலாளர் திரு. சண்முகம் அவர்களைச் சந்தித்து, மாநிலத்தினுடைய சொந்த வரி வருவாய் கடந்த நிதிநிலை அறிக்கையில் எதிர்பார்த்ததைவிட திருத்திய மதிப்பீட்டில் எப்படி உயர்ந்தது என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு நிதித் துறைச் செயலாளர் அருமையான ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறைச் செயலாளரைப் பற்றி ஏன் பேசவேண்டும்? அவைக்கு வந்து எப்படி அவர் பதில் சொல்ல முடியும்?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறைச் செயலாளரைப் பற்றித் தவறாக எதையும் நான் சொல்லவில்லை. அவர் பேட்டி கொடுத்திருப்பதைப் பற்றித்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அவர் நன்றாகத்தான் சொல்லியிருக்கிறார் என்று சொல்லப் போகிறேன். அவர் அருமையாகச் சொல்லியிருக்கிறார் என்றுதான் சொல்ல வருகிறேன். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், பெட்ரோலியப் பண்டங்களின் விலை உயர்வால், அதாவது அவற்றின்மீது மாநில அரசு விதிக்கும் விற்பனை வரியால்— நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள்—மாநில அளவில் விதிக்கப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட வரி இனத்தில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. பெட்ரோலியத்தினுடைய விலை உயர்வு காரணமாக—அது மத்திய அரசு மூலமாக அறிவிக்கப்பட்டதன் காரணமாக—நமக்குக் கிடைக்கிற விகிதாச்சாரத்தின்படி நிதி அளவு அதிகரிக்கின்றதே தவிர, மாநில அரசு புது வரி எதுவும் விதிக்கவில்லை.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்ல வருகிறேன். அவரும் அதைத்தான் சொல்லியிருக்கிறார். பெட்ரோலியப் பண்டங்களின் விலை உயர்வால் அவற்றின்மீது மாநில அரசு விதிக்கும் விற்பனை வரியால், மாநில அளவில் விதிக்கப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட வரி இனத்தில் நிலைத் தன்மை ஏற்பட்டதால், வரி வசூலிப்பில் காட்டப்பட்ட அக்கறையால் வருவாய் அதிகரித்திருக்கிறது என்றுதான் கூறியிருக்கிறார். இதில் என்ன தவறு இருக்கிறது? அதைத்தான் நானும் சொல்கிறேன். இதற்கு ஏன் அவசரப்படுகிறீர்கள்? ஏற்கெனவே விலைவாசி உயர்வால் விழிப் பிதுங்கி அல்லல்படும் பொதுமக்கள்மீது வரி விதித்து, தனது வருவாயை அரசு அதிகரித்துக்கொண்டிருக்கிறது. அதனால் 'பற்றாக்குறையை' உபரியாக்கிப் பகிர்ந்திருக்கிறது. பெட்ரோல், டீசல் விலை அதிகரிப்புக்கும், அதன் தொடர் விளைவாக ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வுக்கும், மாநில அரசும் காரணம் என்பதையல்லவா இது உறுதிப்படுத்துகிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதப்பட்டுள்ளதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் படித்துக் காட்டுகிறார். அதற்கான விளக்கத்தை நான் சொல்லமுடியும். நாம் வசூலிக்கிற வரியினுடைய விகிதாச்சார அளவு அதிகமே தவிர, நாம் போட்ட வரியினைப் புதியதாக எந்த வகையிலும் அந்த வரியை உயர்த்தவில்லை. அதற்காக நம்முடைய வரியை இழக்க வேண்டுமென்கிற கட்டாயமில்லை.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைத்தான் நானும் திரும்பச் சொல்ல வருகிறேன். இதைத்தான் மாண்புமிகு அம்மா அவர்களும் சொன்னார்கள். பெட்ரோல், டீசல் விலை உயரும்போதெல்லாம், உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல் விலையில் விற்பனை வரி விதிக்கும்போதும், அதனால் பெட்ரோல், டீசல் பயன்படுத்தும் சரக்கு வாகனங்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் சூழ்நிலை ஏற்படும். அப்போது அனைத்துப் பொருட்களின் விலையும் உயரும். அதனால் தொடர்ந்து அந்தச் சுமை, விலைவாசி உயர்வால்

மக்களைப் பாதிக்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நானும் இங்கே சொல்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12-35

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோலின்மீது தமிழக அரசு போட்டிருந்த வரியை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வந்த பிறகுதான் குறைத்துக் கொடுத்தார். விகிதாச்சாரத்தையே குறைத்திருக்கிறார்கள். ஒரு தடவை குறைத்திருக்கிறார். உங்கள் ஆட்சியில் குறைக்கவேயில்லை. குறைத்துக் கொடுத்தவர் கலைஞர்தான். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இதைவிட குறைத்திருக்கிற மாநிலங்களில் விலைவாசி குறைந்திருக்கிறதா? அதனால் வரி போடுவது என்பது வேறு, பெட்ரோல் விலை ஏற்றுவது என்பது வேறு. ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், பெட்ரோல் விலை 100 ரூபாய் இருக்கும்போது 5 சதவீதம் என்று சொன்னால் 5 ரூபாய் வருமானம் வரும். 200 என்றபோது அதே 5 சதவீதம்தான் கலைஞர் வைத்திருக்கிறார். அதைவிட இன்னும் கேட்டீர்கள் என்றால், இப்போது ஒரு ரூபாய் என்று குறைத்திருக்கிறார். ஆக, இந்தியாவிலேயே மாநில அரசு விதித்த பெட்ரோல் மீதான வரியைக் குறைத்திருக்கிற அரசு கலைஞருடைய அரசுதான்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒப்புக்கொள்கிறேன். பெட்ரோல், டீசல் மீதான விற்பனை வரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறைத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஒரு தடவை குறைத்திருக்கிறார். எத்தனை தடவை பெட்ரோல், டீசல் விலை உயர்ந்திருக்கிறது? 9 முறை உயர்ந்திருக்கிறது. 9 முறை உயரும்போதெல்லாம் விற்பனை வரி அப்படியேதான் இருந்திருக்கிறது. அதைக் குறைக்கவில்லை. ஒருமுறை உயர்த்தும்போது அது* compensate *ஆகிவிட்டது. பாக்கி 9 முறை உயரும்போது, 8 முறை உயர்த்தப்பட்ட பெட்ரோல் விலையின் மீதுதான் விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.*

2011 பிப்ரவரி 10] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அதாவது, நான் கடைசியில் சொல்ல வருவது என்னவென்றால், நிதிநிலை அறிக்கையை 'வரியில்லாத பட்ஜெட், வரியில்லாத பட்ஜெட்' என்று இனிமேல் சொல்லக்கூடாது. எப்போதெல்லாம் பெட்ரோல் விலை கூடுகிறதோ, அப்போதெல்லாம் மறைமுகமாக வரி திணிக்கப்படுகின்றபோது, எப்படி இது வரியில்லாத பட்ஜெட்டாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

2006-இல் கடன் 57 ஆயிரத்து 457 கோடி ரூபாயாக இருந்தது. 2011 மார்ச் மாதத்தில் இது ஒரு கோடியே 1 இலட்சத்து 541 கோடி ரூபாயாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று சொல்லியிருக்கிறீர்கள். வாங்கப்படும் கடன் பொதுப் பயன்பாட்டுக்கான மூதலீடாகவும், கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதாகவும், நிலையான மூலதனச் செலவுகளுக்காகவும், அதாவது, அணை கட்டுவது, குடிநீர்த் திட்டங்களை உருவாக்குவது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குவது போன்ற ஆக்கப்பூர்வமான செலவுகளுக்காகவும் இருந்தால்தான் அது ஒரு நல்ல அரசாக இருக்க முடியும்.

மக்களிடமிருந்து பெறப்படுகின்ற வரி வருவாயும், கடன் மூலமாகத் திரட்டப்படுகின்ற நிதியும் ** ஆடம்பரச் செலவுகளுக்குப் பயன்படுத்துகின்ற நிலைதான் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. அதாவது, தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாகத் தந்துவிட்டு, கேபிள் டி.வி. கட்டணம் மூலம் சில தனியார்கள் சம்பாதிக்க இந்த அரசு வழிவகுத்துத் தந்திருக்கிறது. அதாவது, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு இதுவரை 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து இருக்கின்றீர்கள். இது என்ன சமூகப் பாதுகாப்புத் திட்டமா? இது ** ஆடம்பரச் செலவு இல்லையா? மக்களிடமிருந்து பெறுகின்ற வரி வருவாயை மூலதனச் செலவுகளுக்குச் செலவு செய்யாமல் ஆடம்பரச் செலவுகளுக்குச் செலவு செய்துவிட்டு கடன்களை வாங்கி மூலதனச் செலவுகளுக்குச் செலவு செய்கின்றீர்கள். இதனால் வீணாக அதிக வட்டிச் சுமையும், கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற நிதி பெருமளவு குறைகின்ற நிலைமையும் ஏற்படுகின்றது. இது ஒரு ஆரோக்கியமான நிதிநிலை அறிக்கையா என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2010-2011-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிதிப் பற்றாக்குறை ரூபாய் 16,22.13 கோடியாக இருக்கின்றது என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நிதிப் பற்றாக்குறை உயர்ந்து ரூ.17,607.71 கோடியாக உயர்ந்திருக்கிறது. இது ஆரோக்கியமான நிதிநிலை அறிக்கைதானா? இந்த இலட்சணத்தில் ரூ.438.78 கோடி உபரி வருமானம் வரும் என்று சொல்கிறார்கள். உங்களுக்கு உபரி நிதி வரவேண்டுமென்பதற்காகப் பெட்ரோல், டீசல் விலை உயர்வதற்கு நீங்கள் பச்சைக் கொடி காட்டுகின்றீர்கள் என்று நான் இந்த அவையில் இந்த அரசைக் குற்றம் சாட்டுகின்றேன்.

கடந்த முறை தி.மு.க. ஆட்சியை விட்டுச்செல்லும்போது நிதிநிலைமையைச் சீர்கெடுத்து, அரசை திவாலாக்குகின்ற நிலையில் ஆட்சியைவிட்டுச் சென்றீர்கள். இந்த முறையோ தமிழகத்தைச் சார்ந்த ஒவ்வொரு குடிமகனையும், குடிமகளையும் திவாலாக்குகின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்றீர்கள்.

தமிழகத்தினுடைய மொத்த மக்கள்தொகை 7 கோடி. ஆனால், நீங்கள் விட்டுச்செல்ல இருக்கும் கடன் தொகையோ 1 இலட்சத்து 1 ஆயிரத்து 541 கோடி. இது தமிழகத்தைச் சார்ந்த தனி மனிதன் ஒவ்வொருவரையும் திவாலாக்குகின்ற முயற்சி அல்லவா? ** இலவச திட்டங்களை மூட்டை கட்டிவிட்டு, நாட்டுக்குத் தேவையான நல்ல திட்டங்களைச் செயல்படுத்தித் தந்தால் இந்தக் கடன் சுமை வந்திருக்குமா? ஒரு தமிழனைப் பார்க்கின்ற மற்ற மாநிலத்தவர் அதோ கடன்காரன் வருகின்றான் பார் என்று ஏளனப்படுகின்ற அளவுக்கு ஒவ்வொரு தமிழனின் தலையிலும் கடன் சுமையை ஏற்றியிருக்கின்றீர்கள். இதுதான் தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டு சாதனை என்று எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுட்டிக்காட்டுவதில் என்ன தவறு இருக்கிறது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பிற்பகல் 12-40

நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நேற்று இதே சட்டமன்றத்தில் பதில் சொல்லும்போது, "ஓர் அரசு பல்வேறு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திட்டங்களை நிறைவேற்ற கடன் வாங்குகிறது; கடன் வாங்கித்தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும்; இலவச திட்டங்களுக்குக் கடன் வாங்குவது இல்லை; வாங்கிய கடன் அனைத்தும் மூலதனச் செலவுகளுக்காகத்தான்; கட்டுமானம் அல்லது வேறு தொழில்களுக்கு இந்தக் கடன் பயன்படுத்தப்படுகிறது; இந்தக் கடன்தான் தமிழகத்தை வாழ வைக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். இது எப்படி? இது உண்மையிலேயே தவறான கருத்து. எங்களுக்கெல்லாம் மூத்தவர் அவர். நாங்கள் பிறக்கின்ற காலத்திலேயே அவர்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராக இந்த அவையிலே இருந்திருக்கின்றார்கள். கடன்தான் இந்தத் தமிழகத்தை வாழ வைத்திருக்கின்றது என்ற ஒரு கருத்தை இங்கே பதிய வைத்தால், இது நாட்டிற்கு உண்மையிலேயே ஒரு நல்ல வாசகமா என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகின்றேன்.

ஆகவே, நம்முடைய வரி வருவாயிலிருந்து என்ன பெறுகிறோமோ அதை மூலதனத்திற்குச் செலவு செய்யுங்கள். வரி வருவாயிலிருந்து பெறுவதை எல்லாம் தேவையில்லாத ஆடம்பரச் செலவுகளுக்காகச் செய்துவிட்டு, மூலதனச் செலவுகளுக்குக் கடன் வாங்கி செலவு செய்து போய்க்கொண்டே இருந்தோமென்றால், நாட்டினுடைய நிதிநிலைமை என்னவாகும்? அதெல்லாம் சாதாரண நாட்டு மக்களுக்குத்தானே போய்ச் சேரும் என்பதனை இந்த அவையினுடைய கவனத்திற்கு வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், இங்கே தனி நபர் வருமானம் கூடியிருக்கிறது, கூடியிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அந்தத் தனி நபர் வருமானத்தையெல்லாம், இருக்கிற 7 கோடி பேருக்குத் தனித் தனியாகப் பிரித்துக் கொடுப்பது மாதிரி ஒரு தோற்றத்தை இங்கே உருவாக்குகிறீர்கள். அது தவறு. நம் மாநிலம் உற்பத்தி செய்கின்ற மாநிலம். அதனால் தனி நபருடைய வருமானம் கூடுகின்றது. நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து ஒவ்வொரு துறையாக உற்பத்தி செய்கின்ற மாநிலமாக இந்த மாநிலம் இருப்பதால், தனி நபர் வருமானம் கூடியிருக்கிறது. தனி நபர் வருமானம் என்று ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பிரித்துக் கொடுப்பதில்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே இன்னும் எத்தனை மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; அப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு நாம் அவர்களிடமிருந்து பெறப்படுகின்ற வரி வருவாயிலிருந்து ஏதாவது மூலதனச் செலவுகளை creation of assets-ஐ உருவாக்குகின்றோமா

என்பதுதான் அரசினுடைய நிலைப்பாடாக இருக்கவேண்டுமே தவிர, கடனை வாங்கி அதை மூலதனச் செலவுகளுக்குச் செய்யவேண்டாம் என்று நான் இந்த அரசை மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசிமுடிக்க உங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்? (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இன்னும் 15 நிமிடங்கள் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஏதோ ** இலவசம் கொடுப்பதே தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேயும் மதிய உணவு கொடுத்தோம் என்று சொன்னதெல்லாம் உண்டு. ஆக, development activities and social welfare schemes (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். சமூக நலத் திட்டங்கள் என்றும், வளர்ச்சிப் பணிகள் என்றும் இரண்டு பணிகளை அரசாங்கம் செய்ய வேண்டும். கலைஞர் அவர்கள் அரசு கடன் வாங்குகிறபோது அந்த வளர்ச்சிப் பணிகளைச் செய்கிற அரசாக இருந்திருக்கிறது. அதைத்தான் பேராசிரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். நிலம் வைத்திருப்பவன் நிலத்தை உழவேண்டுமென்று சொன்னால், அவன் கடன் வாங்கித்தான் நிலத்தை உழவேண்டும். அப்போது அவனுக்குக் கூட்டுறவுக் கடன்களே தேவையில்லை என்று சொல்கிறீர்களா? கூட்டுறவுக் கடனே கொடுக்க வேண்டாமா? அந்த மாதிரிதான், கூட்டுறவிலே கடன் கொடுப்பதைப் போலத்தான், ஓர் அரசாங்கம் நடத்துகிறபொழுது development activities-க்காக, வளர்ச்சிப் பணிகளுக்காகக் கடன் வாங்குவது என்பது நடைமுறை. அதேநேரத்திலே, social welfare schemes வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு 4,000 கோடி ரூபாய் உணவுக்கு மானியமாக கொடுத்து அதைச் செய்வது என்பது ஓர் அரசினுடைய கடமை. ஆக, இரண்டையும் சேர்த்து செய்கிற ஓர் அரசுதான், ஒரு பொதுநல

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அரசுதான், தலைவர் கலைஞர் அரசு என்பதை வீட்டுக்கு வீடு அதை அனுபவித்துக் கொண்டிருக்கிற மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வெங்காய வியாபாரம் மாதிரி ஏதோ வேதனைப்படுகிறார்கள் என்று நீங்கள் சொன்னீர்களே! ஆனால், இன்று மக்கள் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். கலைஞருடைய ஆட்சியின் சாதனை (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சாப்பாடு இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை, இன்றைக்கு T.V. வேண்டுமென்று நினைக்கிறார்கள். அது உங்களுக்குத் தெரியுமா? அந்த அளவுக்குப் பணக்காரர் வீடுகளில் இருந்ததை ஏழையெளியவர்களுக்கும் கொடுத்திருக்கிற தலைவர் டாக்டர் கலைஞர் என்பதைத் தமிழகத்து மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஒரு வீட்டிலே சினிமா படத்தைப் போட்டுப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, ஏழை எளியவன் வீட்டிலேயும் தொலைக்காட்சிப் பெட்டி வருவதற்கு வழி வகுத்திருக்கிற அரசுதான் தலைவர் கலைஞருடைய அரசு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, என்னவென்று சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெங்காயத்தினுடைய விலை உயர்ந்தபொழுது அதற்கு அரசு காரணம் இல்லை என்று சொன்னீர்கள். வெங்காயத்தின் விலை குறைந்தபொழுது நீங்கள் ஏதாவது உத்தரவு போட்டீர்களா? வெங்காயம் விலை குறையவேண்டுமென்று நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்களா? ஆகவே, வெங்காய விலை உயர்விற்கும், தாழ்விற்கும் இடையிலே அரசு எதுவுமே செய்வதில்லை. அதுதான் விலைவாசி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்களுடைய கேள்வியிலேயே அதற்கான விடை இருக்கிறது. வெங்காய விலை உயர்கின்றபோது அதற்கு அரசு காரணம் என்று நீங்கள் சொன்னீர்கள். இன்று வெங்காயத்தினுடைய விலை குறையும்போது அதற்கு அரசுதான் காரணம் என்று சொல்ல

நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? அந்தக் கேள்வியைத்தான் நாங்கள் கேட்கிறோம். ஆகவே, நாங்கள் என்ன சொல்கிறோம் என்று சொன்னால், காய்கறிப் பொருட்களுடைய விலை உயர்வுக்கும் அழுகும் பொருள்கள், குறிப்பாக, perishable commodities, அவை சமூகத்தினுடைய தேவைக்கேற்ப உற்பத்திக்கு ஏற்ப, கால பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு மாதிரியாக விற்கப்படுகிறது. இதற்கு எந்தவகையிலேயும் நீங்கள் அரசுகளைக் குற்றஞ்சாட்டி அரசியல் ஆதாயம் தேட விரும்பாதீர்கள் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, நீங்கள் சொன்னீர்கள். அவர் அதற்குப் பதில் சொல்லிவிட்டார். விடுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. இன்று கில்லட்டின் நேரம் இருக்கிறது. (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஓர் அரசுக்கு, ஒரு பொறுப்பான எதிர்க்கட்சிக்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு மணி நேரம் பேசியாகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இல்லை. நிறைய குறுக்கீடு செய்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இல்லை. (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

பிற்பகல் 12-45

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாஸ்மாக் கடைகளில் Bar-களை உருவாக்கி, ஆளும் கட்சிக்காரர்களுக்கே வருமானம் தருகின்ற அட்சயப் பாத்திரங்களாக உங்கள் ஆட்சி மாறிக்கொண்டிருக்கின்றது. ஓர் அரசாங்கம் மக்களின் நலனை எப்படி அதிகரிப்பது என்று திட்டமிடவேண்டும். வசதிகளை எப்படி அதிகரிப்பது என்று திட்டமிட வேண்டும். சாலைகளை எப்படி அதிகரிப்பது என்றும், தொழிற்சாலைகளை எப்படி அதிகரிப்பது என்றும், கல்விக் கூடங்களையும், மருத்துவமனைகளையும் எப்படி அதிகரிப்பது என்றும் திட்டமிடவேண்டும். அதில் செலுத்தும் கவனத்தைவிட மதுபான Bar-களை அதிகமாகத் திறந்து, அதாவது club என்ற போர்வையிலே நிறைய பேர் un official ஆக வாங்கி

வைத்திருக்கிறார்கள். Recreation club என்ற போர்வையிலே வாங்கி வைத்திருக்கிறார்கள். அந்த club-ஐத் திறந்துவிட்டு (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் கடைகளைச் சொல்லவில்லை. Bar-களைச் சொல்கிறேன். அந்த Bar-களை (குறுக்கீடு) இல்லை, Recreation club என்ற போர்வையில் நிறைய பேர் Bar-களைத் திறந்திருக்கின்றார்கள். கடைகளெல்லாம் இரவு 10-00 மணிக்கு அடைத்த பிறகு, stock-களையெல்லாம் இந்த club-களில் வைத்துக்கொண்டு, போலியான மதுபானங்களை நிறைய வைத்துக்கொண்டு, விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை இன்று தமிழகத்திலே உருவாகியிருக்கிறது. அதைத்தான் நான் இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆக, இந்த அரசு அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சார், கொஞ்சம் சீக்கிரம் உங்கள் பேச்சை முடித்தால் நல்லது. ஏனென்றால் இன்றைக்கு 1-30 மணிக்கு guillotine time இருக்கிறது. நிதியமைச்சர் இன்னும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இன்னும் பேச வேண்டியது நிறைய இருக்கிறதே? தமிழக மீனவர் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எல்லாம் பேச வேண்டியிருக்கிறதே? ஆட்சியில் இருப்பவர்கள் பாதுகாப்புத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு வாழும் மக்களின் நம்பிக்கையை நீங்கள் உடைத்தெறிந்துவிட்டீர்கள். உங்கள் ஆட்சியில் சமூக விரோதிகள் சட்டத்தின் பாதுகாப்பில் பவனி வருகிறார்கள். இயற்கை வளங்கள், மணல்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. எல்லாம் அழிக்கப்படுகின்றன. அப்பாவிகளின் நிலங்கள் ஆளுங்கட்சியினரின் துணையோடு அபகரிக்கப்படுகின்றன. ஆளுங்கட்சியின் மிரட்டலுக்குப் பயப்படாதவர்களும், பணியாதவர்களும் கொலை செய்யப்படுகிறார்கள். கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளியே வரும் குற்றவாளிகளுக்குக்கூட சிறைவாசலிலே மாலை மரியாதைகளோடுகூட வரவேற்பு கொடுக்கிறார்கள். போக்குவரத்தையே ஸ்தம்பிக்கச் செய்து, ஊர்வலம் நடத்துகிறார்கள். ஆளுங்கட்சியின் ஆர்ப்பாட்டத்தையும் காவல் துறையினர் கண்டுகொள்ளாமல் வேடிக்கை பார்க்கின்றார்கள். தவறு செய்துவிட்டு சிறைக்குச் சென்றவர்களுக்கெல்லாம்

அமைச்சர்களின் ஆசி உங்கள் ஆட்சியில்தான் இருக்கிறது. இதையெல்லாம் மக்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். காவல் துறை அதிகாரிகளையே காவல் துறையால் காப்பாற்ற முடியாமல் தவிக்கின்ற நிலையைப் பார்த்து மக்கள் மிரண்டு போயிருக்கின்றார்கள். தங்களையே பாதுகாத்துக்கொள்ள முடியாத காவல் துறை, எங்கே நம்மைக் காப்பாற்றப்போகின்றது என்று மக்கள் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

தமிழகத்தில் குழந்தை கடத்தல் என்பது குடிசைத் தொழிலாகிவிட்டது. கடத்தப்பட்ட குழந்தையை மீட்க காவல் துறையே பணத்தை ஏற்பாடு செய்து கொடுத்த அவலமும் தமிழகத்தில்தான் நடந்தேறியுள்ளது. அதன் காரணமாக, காவல் துறையே பணம் தரும் என்ற எண்ணத்தில் தற்பொழுது குழந்தைக் கடத்தல் சம்பவங்கள் தினசரி நிகழ்வாகிவிட்டன. கொலை செய்யப்பட்ட ஒருவனின் தலையைத் தேடி தமிழகத்தின் தலைநகரில் காவல் துறை தத்தளித்த தலைகுனிவான சம்பவமும் இந்த ஆட்சியில்தான் நடந்தது.

அதுபோல, இந்தியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க நமது எல்லையோர நாடுகளால் புழக்கத்தில் விடப்படும் கள்ள நோட்டுகள் தமிழகத்தில்தான் அதிக அளவில் வட மாநிலத்தவர்களால் புழக்கத்தில் விடப்படுகின்றன.

காவல் துறையில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது. ஆளுங்கட்சியினரால் காவல் துறையின் கைகள் கட்டப்பட்டு, அது ஆளுங்கட்சியின் ஏவல் துறையாக செயல்படுகிறது என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

கடந்த 5 ஆண்டுகளில் ரூ.11,416 கோடி காவல் துறைக்கு ஒதுக்கியுள்ளதாகவும், இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கையில் ரூ.3,239 கோடி நிதி ஒதுக்கியுள்ளதாகவும் கூறியுள்ளீர்கள். இவ்வளவு கோடிகள் கொட்டிக் கொடுத்தும் பெருகிவரும் கேடிகளை ஏன் உங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்ற கேள்வியை உங்கள்முன் வைக்கின்றேன்.

Bank ATM machine-ஐ உடைக்க முயன்றவர்களில் சிலர், Engineering படித்தவர்கள். குழந்தைகளைக் கடத்திப் பணம் பறிக்க முயன்றவர்களில் சிலர் பட்டப் படிப்புப் படித்தவர்கள். கொலை செய்தவர்களில் சிலர் கல்லூரி மாணவர்கள். இப்படிப்பட்ட

செய்திகளெல்லாம் அடிக்கடி செய்தித்தாள்களில் வருகின்றன. கைச்செலவுக்காகப் பெண்களின் கழுத்துச் செயினை அறுக்கும் இளைஞர்கள் என்ற செய்திகள் மனதைப் பதற வைக்கின்றன. உங்கள் ஆட்சியின் நிருவாகத் திறமையின்மையால் படிக்கின்ற இளம் தலைமுறைகூட குற்றவாளிகளாக மாறிக்கொண்டிருக்கின்றார்கள். திருடுவதையும், கொள்ளை அடிப்பதையும், கொலை செய்வதையும் பொழுதுபோக்கு என்று நினைக்கும் அளவுக்கு உங்கள் ஆட்சியில் குற்றங்கள் பெருகிவிட்டன. குற்றவாளிகள் பெருகிவிட்டார்கள். நடந்த குற்றங்களுக்கு தண்டனை கொடுப்பது மட்டும்தான் காவல் துறையின் வேலை என்பது இல்லை. குற்றங்களே நடக்காமல் தடுப்பதுதான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Speaker Sir, அவரை ஒரு விளக்கம் கேட்க வேண்டும். ஏதோ எங்கள் ஆட்சியிலேதான் வழிப் பறியும், செயின் அறுப்பதும், கழுத்து அறுப்பதும், திருடுவதும், இவையெல்லாம் நடக்கின்றனவென்று சொல்லியிருக்கிறார். உங்கள் ஆட்சியில் செயின் அறுத்ததே கிடையாதா? கற்பழித்ததே கிடையாதா? கடத்தலே கிடையாதா? ஒரு எம்.எல்.ஏ. பாலனையே கடத்திவிட்டுப் போய்விட்டீர்களே சாமி. எவ்வளவு வேலை செய்திருக்கிறீர்கள். உங்கள் எம்.எல்.ஏ. கடத்தப்பட்டபோது-Law and Order கெட்டுப்போனது மாதிரி உலகத்திலேயே-Governor சென்னா ரெட்டியையே கல்லைவிட்டு அடித்தீர்கள். நம்முடைய சேஷனை ஓட்டலில் போய் அடித்தீர்கள். ஒரு ஆடிட்டரை அவருடைய வீட்டுக்குள் போய் அடித்தீர்கள். ஒரு M.L.A.-ஐ வெட்டிப்போட்டீர்கள். சொக்கலிங்கத்தை மதுராந்தகத்திலே வெட்டிப்போட்டீர்கள். கும்மிடிப்பூண்டி M.L.A. அடிபட்டு செத்துப்போய் விட்டார். I.A.S. Officer அடிவாங்கிச் செத்தார். ஒரு I.A.S. Officer மீது திராவகத்தை வீசினீர்கள். எல்லாம் செய்தது, ரௌடித்தனம் முழுவதும் செய்தது நீங்கள். உங்கள் ஆட்சியில் நடந்ததை இன்னொருவர் மேல் சுமத்துகிறீர்களே!

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: உரையை முடித்துவிடுகிறேன், அவ்வளவுதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து, அவர்களுடைய பங்கிற்குச் சொல்லியிருக்கிறார்கள். நிறைவுரையாக, இந்த ஓட்டை நிதிநிலை அறிக்கையை வைத்துக்கொண்டு, மீண்டும் உப்பரிகை ஏறிவிடலாம் என்று கனவு காண்கிறீர்கள். ** நடவடிக்கைகளை இலவசங்கள் மறைத்துவிடுமென்று கண்மூடித்தனமான உறுதி கொண்டிருக்கிறீர்கள். இத்தனையையும் மீறி, கோடி கோடியாகக் குவித்து வைத்திருக்கும் பணத்தை வாரி இறைத்து, மக்களை விலைக்கு வாங்கிவிடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இது எதுவுமே நடக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மக்கள் ஒரு திடமான முடிவுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சி தொடர்ந்தால் ரௌடிகள் ராஜ்யம் நிரந்தரமாகிவிடும்; நிம்மதியான வாழ்க்கையைக் கனவில்கூட காணமுடியாது என்று மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். மொத்தத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அரசு நிருவாகம் நேர்மையாக இருந்தது. உங்கள் ஆட்சியில் நிலைகுலைந்து போய்விட்டது. எல்லா வழிகளிலும் மக்கள் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதுமே ஏமாற்றங்களில்தான் புதிய மாற்றங்கள் வரும் என்பார்கள். உங்களுடைய ஐந்து வருட ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள்தான் வர இருக்கின்ற தேர்தலில் மாற்றம் வரப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி மலரும். எங்கெல்லாம் அதர்மம் தலை தூக்குகிறதோ அங்கெல்லாம் தர்மத்தைக் காப்பாற்ற கிருஷ்ண பரமாத்மா வருவதுபோல, உங்களின் அராஜக ஆட்சியை வீழ்த்தி, நல்லாட்சி தருவதற்கு புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் வரவேண்டும், வரவேண்டும் என்று மக்கள் ஏங்க ஆரம்பித்துவிட்டார்கள். "தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்; தர்மம் மறுபடியும் வெல்லும்" என்னும் சத்திய வாக்கை மறந்துவிட்டீர்கள். தர்மத்தின் வாழ்வுதனை இப்பொழுது சூது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கவ்வியிருக்கிறது. தர்மம் மறுபடியும் வெல்லும் என்பது உலக நிச்சயம். மக்கள் சக்தியின் துணையோடு மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் ஆட்சிபீடம் அமருவார்கள். இது சத்தியம். மீண்டும் சந்திப்போம். நன்றாக, கவனமாகக் கேட்டுக்கொள்ளுங்கள். மீண்டும் சந்திப்போம். நீங்கள் எதிர்க்கட்சி வரிசையில், நாங்கள் ஆளுங்கட்சி வரிசையில் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது, இந்த அவையில் 33 உறுப்பினர்கள், 9 மணி, 48 நிமிட நேரங்கள் உரையாற்றியிருக்கிறார்கள். ஓர் அறிக்கைமீது எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு, அவரவர்களுடைய கருத்துகளையும் எடுத்துக்கூறி, ஒரு நிறைவான கருத்தை இந்த அவையில் தெரிவித்திருப்பதற்காக இங்கே உரையாற்றிய அத்தனை கட்சி உறுப்பினர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையில், இன்று காலையில் பேசிய இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹசன் அலி அவர்களுடைய பேச்சைத் தொடர்ந்து, அந்த உணர்வோடு நான் உரையாற்ற வேண்டுமென்று விரும்பினேன். நேற்றும்கூட, திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, நெஞ்சார்ந்த நன்றி உணர்வைத் தெரிவித்து, அவையில் உரையைத் தொடங்கி முடிக்க வேண்டுமென்று விரும்பினேன். இன்னும் நம்முடைய திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னதைப்போல, நடுநிலை உணர்வோடும், நல்ல நம்பிக்கையோடும், எதிர்காலத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கக்கூடிய முறையில் பேச வேண்டுமென்றுதான் நான் விரும்பினேன். இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் நான் பேசுகின்ற இந்தப் பேச்சு, ஒரு வேளை இந்தப் பொறுப்பிலேயிருந்து நான் பேசுகிற இறுதியான பேச்சும் ஆகலாம் என்று முறையில், நான் அனைவருக்குமே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2011 பிப்ரவரி 10

10. எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி கோரியது குறித்து

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், முதலிலே தொடங்குகிறபோது, வழிபாட்டிலே தொடங்கி, முடிக்கிறபோது கோரசிலே முடித்தார்கள். அவர்களுக்கு அது பழக்கமான ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள், இந்த ஆட்சி போய்விட வேண்டும். எதிர்க்கட்சியாக இருக்கிற அவர்கள் ஆளுங்கட்சி வரிசையில் வந்து அமர வேண்டும் என்று தெரிவித்ததுடன், அதுவும் அவர்களுடைய தலைவி அம்மையார் அவர்கள் முதலமைச்சராக வரவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, அந்த ஆசையோடு தன்னுடைய பேச்சை முடித்திருக்கிறார்கள். அவர் ஆசைப்படுவது தவறல்ல. அதை நிறைவேற்றித் தரவேண்டியது பொது மக்கள். செய்வார்களா என்பது கேள்விக்குறி. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் ஒன்று, அவர் ஆசைப்படுவது. ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறவரை முதலமைச்சராக ஆக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். முதலில் ஓய்வு முடிந்தல்லவா? அரசியலிலே, ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாக அவர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னதை மறுப்பதற்கு இதில் ஒன்றுமில்லையே? (குறுக்கீடுகள்) சொன்னதில் ஒன்றும் தவறில்லையே? இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். நேரமில்லை, please. ஏதாவது கேட்க வேண்டுமென்றால் பின்னர் கேளுங்கள்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: இந்த அவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை நான் ஏற்றுப் பேசுவதை, உங்களுடைய கட்சியின் தலைவர் . . . (கூச்சல்-குழப்பம்) அது உங்கள் இஷ்டம். (கூச்சல்-குழப்பம்) அது உங்கள் இஷ்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உங்களுக்கு நான் மைக் கொடுக்கவில்லை. எல்லோரும் உட்காருங்கள். Please, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

2011 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியவர்கள், எதற்காக அந்தத் தீர்மானம்? ஓய்வு எடுத்துக் கொள்வதற்குத்தான். *(கூச்சல்-குழப்பம்)* சொன்னதை சொன்னால் உங்களுக்கு என்ன கடுப்பு? *(கூச்சல்-குழப்பம்)* அந்தத் தீர்மானத்திலே இந்த வாசகம் இல்லையென்றால், என்னுடைய வாசகத்தை நான் திரும்பப் பெறுகிறேன். *(குறுக்கீடுகள்)* அப்படி அந்தத் தீர்மானம் இல்லையென்றால் நான். . . *(குறுக்கீடுகள்)* தீர்மானத்திலே என்ன இருக்கிறது என்று படித்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நான் சொல்வதைக் கேளுங்கள். தீர்மானத்திலே இருக்கிற வார்த்தையை அவர் சொல்லியிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* Nothing. உட்காருங்கள். தீர்மானத்திலே அதுதானே இருக்கிறது? *(கூச்சல்-குழப்பம்)* தீர்மானத்திலே இருக்கிற வார்த்தையைச் சொல்வது ஒன்றும் தவறு இல்லையே? *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு காரசாரமாகப் பேசவேண்டுமோ அவ்வளவும் பேசினார்கள். இது ரௌடிகள் ஆட்சி என்று சொன்னபோதுகூட நாங்கள் சும்மா, அமைதியாக உட்கார்ந்திருந்தோம். ஆனால், நீங்கள்தான் அம்மா ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். அந்த ஓய்வு என்பது தவறான வார்த்தையல்ல. ஓய்ந்த நேரத்தில் போவதல்ல. ஓய்வு என்பது ஓய்ந்த நேரத்தில் போவதல்ல. ஓய்ந்த நேரத்தில் ஓய்வு எடுப்பது என்பது rest எடுப்பது. அதென்ன தவறா? Is it unparliamentary, is it unparliamentary? No, you can't expunge the word. If the word is unparliamentary, then only the Speaker can expunge it. It is not unparliamentary. You are threatening on the last day, ஒன்றை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள், இங்கு ஒருவர்கூட திரும்பி வரமாட்டீர்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்திலே இருக்கிற வாசகம், உடல்நலக் குறைவு காரணமாக பூரண ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு என்பது, இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்தது நீங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓய்வு எடுப்பது தவறா? இதில் என்ன இருக்கிறது? உழைத்தவர்கள் ஓய்வு எடுப்பார்கள். இதிலே என்ன இருக்கிறது? இதிலே தவறான அர்த்தம் என்ன இருக்கிறது? (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். உழைத்தவர்கள் ஓய்வு எடுப்பார்கள், அதுதானே உண்மை? (கூச்சல்-குழப்பம்) இதோ பாருங்கள், நான் தீர்மானத்தை வாசிக்கிறேன், கேளுங்கள். வாசிக்கிறேன் கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் கொடுத்த தீர்மானத்தை நான் வாசிக்கிறேன், கேளுங்கள்.

"தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதையடுத்து, அவரைப் பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ள நிலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 20 (I)-ன்கீழ் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இக்கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பட வேண்டும்" என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் முன்மொழிந்தார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் முன்மொழிந்த அந்தத் தீர்மானத்தை திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வழிமொழிந்தார்கள்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு அந்தத் தீர்மானம் சபையிலே ஒட்டுமொத்தமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதில் என்ன இருக்கிறது? உங்களுடைய வேண்டுகோள் அதுதானே? (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள் — "தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும்" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான என்று திரு. ஓ. பன்னீர்செல்வம் கொடுத்திருக்கிறார் — "உடல்நலக் குறைவு ஏற்பட்டிருப்பதால், பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இதன் காரணமாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது'' (குறுக்கீடுகள்) இப்படித்தானே சொல்லியிருக்கிறீர்கள்? (கூச்சல்-குழப்பம்) இது உண்மையா, இல்லையா? இது உண்மையா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த வேண்டுகோள் உண்மையா, இல்லையா? எல்லோரையும்

2011 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

உட்காரச் சொல்லுங்கள், (குறுக்கீடுகள்) எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள், (குறுக்கீடுகள்) ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அது ஒரு unparliamentary word இல்லையே?

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சுரிமையை நீங்கள் தடுக்க முடியாது. பெங்களூரு நீதிமன்றத்தில், உங்களுடைய கட்சித் தலைவர், பெங்களூரு நீதிமன்றத்திற்குப் போக முடியாததற்காக, அந்த நீதிமன்றத்திலே தெரிவித்த வார்த்தையில், தமிழகச் சட்டமன்றத்திலே அவர் ஓய்வு பெறுவதற்குத் தீர்மானம் கொடுத்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அங்கேயே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அதை நான் சொல்லாமல், யார் சொல்வது? (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான்தான் சொல்ல வேண்டும். உங்களுக்குத் தலைவராக இருக்கலாம். ஆனால், சட்டமன்றத்தில் அவர்கள் உறுப்பினர்தான். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணி நேரம் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பேசிவிட்டு, வேண்டுமென்றே இந்த அவை நடக்காத அளவுக்குத் திட்டமிட்டு சதி செய்கிறார்கள். எனவே, ஒன்று அவர்களை வெளியேற்றவேண்டும், இல்லையென்றால் இந்தச் சட்டமன்றம் ஒழுங்காக நடைபெறுவதற்கு நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், ஒரு மணி, 10 நிமிடங்கள்--70 நிமிடங்கள் பேசியிருக்கிறார். உறுப்பினர்கள், கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். பட்ஜெட்டை நிறைவேற்றவேண்டும். முதலில் எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) It is not an unparliamentary word. அதிலே என்ன உங்களுக்கு உஷ்ணம் ஆகிறது? எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஓய்வு எடுக்கிறார்கள் என்று சொல்வதில் தவறு என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)

மற்றவர்கள் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள் please. எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். Please, எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். அவரவர் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) போக முடியாது என்று சொல்லக்கூடாது. உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். அவரவர் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவரவர் இடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் உடல்நலக் குறைவு ஏற்பட்டிருப்பதால், இந்தக் கூட்டத் தொடருக்கு வர முடியாது என்ற காரணத்தால் நான் அந்தத் தீர்மானத்தை இங்கு முன்மொழிந்தேன். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். பேச விடுங்கள். அது இந்தக் கூட்டத் தொடர் முடியும் வரைக்கும்தான். தற்காலிக ஏற்பாடாகத்தான் நாங்கள் அந்த அனுமதியை வேண்டினோம். அதை அரசியல் ஆக்குகின்ற விதத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கின்ற ஒருவர் எப்படி என்பதுபோல ஆரம்பித்தார்கள். அதைத்தான், தேவையில்லாதது, அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள் என்று சொல்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரை நான் குறைவுபடுத்துவதற்காக அந்த வார்த்தையைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்கோட்டையன், எல்லோரையும் மதித்து நடந்துகொள்ளச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அந்த மாதிரியெல்லாம் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இந்த அவையில் முதலமைச்சர் இருக்கையிலே, அந்த அம்மையார், எதிர்க்கட்சித் தலைவர் வந்து அமரக்கூடிய அளவிற்கு ஒரு நிலை வரும் என்று அவர் பேசினார். இங்கு ஆளுங்கட்சியாக உள்ளவர்கள் இந்த இடத்தைவிட்டு எதிர்க்கட்சியிலே போய் அமர்வார்கள் என்ற எண்ணத்தையும் அவர் தெரிவித்தார். அப்படித் தெரிவித்தபோது ஓய்வுபெற்றுக் கொண்டிருப்பவரே அந்த நிலையைப் பெற முடியுமானால், இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றவர், அந்த நிலையைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதா? என்றுதான் நான் கேட்டேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-இலிருந்து 2006 வரை ஐந்தாண்டுக் காலம் மாண்புமிகு முதலமைச்சர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். இந்த சபைக்கே வரவில்லை. அவர்களே முதலமைச்சராக வரும்போது, எங்களுடைய அம்மா சபைக்கு வந்து இங்கே நிறைய பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஏன் முதலமைச்சராக வர முடியாது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன வார்த்தையிலே தவறு இல்லை. அவ்வளவுதான். யார் யாருக்கு, என்னென்ன நோக்கம் இருக்கிறதோ, அந்த நோக்கத்திலே அந்த வார்த்தையை எடுத்துக்கொள்வதைப் பற்றி எனக்கு வருத்தம் இல்லை.

இந்த விலைவாசியைப் பற்றி அந்த அம்மையாரே ஓர் அறிக்கையிலே தெரிவிக்கின்றபோது, விலை உயர்விற்கான காரணங்களை நிதிநிலை அறிக்கையில் பட்டியலிட்டிருப்பது வருத்தமளிக்கிறது என்கிறார். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது அவருக்கு ஏற்ப ஒரு தொனியிலே கருத்தினை வெளிப்படுத்தினார்கள். ஓய்வு பெறுவோர்கள் வெற்றி பெறமுடியும் என்றால், நாங்கள்

எல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இனி எதிர்காலத்தில் முழுமையாக நீங்கள் ஓய்வுபெறப் போகிறீர்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அதைப் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், அதெல்லாம் மக்கள் முடிவு செய்ய வேண்டியது. இப்போது அதுபற்றி ஏன் பேசுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தூரம் எதிர்க்கட்சி வலியுறுத்தினாலும், அந்த வார்த்தையை நிதியமைச்சர் அவர்களும், நீங்களும் வாபஸ் பெறாத காரணத்தினாலே சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. ல. ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. க. இராஜேந்திரன் தவிர) அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(திரு. டி. ஜெயக்குமார், திரு. கோ. அரி, திரு. ஏ.கே. போஸ் ஆகியோர் நிதிநிலை அறிக்கை புத்தகங்களை வீசியெறிந்து சென்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் ஆகியோர் நிதிநிலை அறிக்கை புத்தகத்தை வீசியெறிந்த செய்கை கண்டிக்கத்தக்கது. இம்மாதிரியாக அவையை அவமதிக்கின்ற வகையில் அவர்கள் நடப்பது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1-10

9. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதன்மூலமாக நிரந்தரமாக இந்த அவைக்கு நாங்கள் வரமுடியாதவர்களாக ஆகிவிட்டோம் என்பதை ஒப்புக்கொண்டு,*

வெளியேறியிருக்கின்றார்கள் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் நீண்ட காலமாகவே அடிக்கடி எதிர்க்கட்சியினர் வெளியேறி வெளியேறி, இந்த அவையை நல்ல முறையில் நடத்துவதற்கு அவர்கள் ஒத்துழைப்புத் தந்ததற்காக, இந்த நேரத்தில் நான் நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே எதிர்க்கட்சியினுடைய கருத்தைப் போல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ம.தி.மு.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இந்த அரசைக் குறை சொல்லிப் பேசி முடித்திருக்கிறார்கள். இந்த அரசினுடைய திட்டங்கள் எல்லாம் தோல்வி என்று கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் சொன்னபோது, எல்லாத் திட்டங்களும் தோல்வியா? இதுவரையிலே இந்த அரசு தொழிலாளர்களுக்கு செய்த நன்மைகள் எல்லாம் தோல்வியா? நியாய விலைக் கடையிலே ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தருகின்ற அந்தத் திட்டம் தோல்வியா? சமுதாயத்திற்குச் செய்த பல நன்மைகளும் தோல்வியா என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள எனக்குக் கடமையிருக்கிறது.

அதேநேரத்தில், இங்கே நிதிப் பற்றாக்குறையைப் பற்றி அம்மையார் சொன்ன கருத்தை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசினார். நிதிப் பற்றாக்குறை என்பது, நடைமுறைச் செலவுகளுக்கு ஆண்டுதோறும் வருவாய்க் கணக்கிலே செய்யப்படுகிற செலவுகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டால்தான் அது பெரிய குறை. வருவாய்க் கணக்கிலே செய்யப்படுகிற செலவு போக உபரியாக இருக்கக்கூடிய அளவுக்கு இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மூலதனக் கணக்கிலேதான் பெரிய அளவுக்குக் கடன் சுமை ஏறுகிறது. அந்தக் கடன் சுமை ஏறுவது எவ்வளவு ஆனாலும், மூலதனக் கணக்கிலே செய்யப்படுகிற செலவு அத்தனையும் சமுதாயத்தினுடைய கட்டுமானப் பணிகளுக்காக, சமூக நலப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிற தொகையாக இருக்குமானால், அது அந்தச் சமுதாயத்திற்கு நன்மை செய்கிற காரணத்தால், அந்தக் கடன் ஏற்புடைய கடன், விரும்பத்தக்க கடன் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மற்றொன்று, சாதாரணமாகக் கடன் வாங்காதே என்று நம்மைப் பார்த்துச் சொல்கிறவர்கள், அவர்கள் இருக்கிற காலத்திலே கடன்தான் வாங்கினார்கள். கடந்த முறை நாங்கள் ஆட்சியிலிருந்து விலகுகிறபோது ரூ. 28 ஆயிரம் கோடி கடன் இருந்தது. அதை

ஒரு குற்றமாகவே எடுத்துக்காட்டி ரூ. 28 ஆயிரம் கோடி கடன் வைத்துவிட்டுப் போனார்கள் என்று சொன்னார்கள். திரும்ப அவர்கள் 5 ஆண்டுக் காலம் ஆட்சி நடத்தி, 2006 ஆம் ஆண்டிலே அந்த ஆட்சி நீங்கி, நாம் ஆட்சிக்கு வருகிறபோது அவர்கள் ரூ. 56 ஆயிரம் கோடி கடன் வைத்திருந்தார்கள். நாம் வைத்தது ரூ. 28 ஆயிரம் கோடி. அவர்கள் வைத்தது ரூ.56 ஆயிரம் கோடி. இன்றைக்கு அது ஏறத்தாழ 1 இலட்சம் கோடி ரூபாய்க்கு உயர்ந்து வருகிறது. ஆனால், மொத்த வரவு-செலவினுடைய அளவு விகிதத்தைப் பார்க்கிறபோது, அன்றிருந்ததைப்போல 2 மடங்கு மொத்த வரவு-செலவு உருவாகியிருக்கிற காரணத்தால் நாட்டில் உற்பத்தி பெருகியிருக்கிறது; வரி பெருகியிருக்கிறது; வருவாய் கூடியிருக்கிறது; திட்டங்கள் வளர்ந்திருக்கின்றன; பல்வேறுவிதமான பலன்கள் கிடைத்திருக்கின்றன. மத்திய அரசினுடைய தொகுப்பு நிதியிலிருந்து நம்முடைய பங்கு அதிகமாகியிருக்கிறது. இவற்றின் காரணமாக, மாநிலத்தில் கடன் தொகை அதிகமானது எந்தவகையிலேயும் குறைபாடு உடையதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கடனிலேதான் தமிழகம் வாழ்கிறது என்று நான் சொன்ன சொல்லை, வாழ்கிறது என்பதைத் தவறான கருத்தில் வாழ்கிறது என்றால் இருக்கிறது, நடைபோடுகிறது என்ற கருத்தாக எடுத்துக்கொண்டிருக்கின்றனர் சிலர். வாழ்கிறது என்றால் வளர்கிறது என்ற பொருளிலேதான், வாழ்கிறது, வளர்கிறது என்ற பொருளிலேதான் நான் சொன்னேன். வளர்ச்சிக்கான அடிப்படையான பணிகள், கடன் தொகையினாலே செய்யப்படுகிற capital expenditure என்று சொல்லப்படுகிற, அந்த வகையிலே அமைகிற காரணத்தாலேதான், இந்த வளர்ச்சி உருவாகியிருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், விலைவாசி உயர்வு பற்றி நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசியபோது சொன்னார். இன்றைக்குக்கூட அந்த வாதம் நடைபெற்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் செல்வி பாலபாரதி அம்மையார் அவர்களும் ஒருவருக்கொருவர் கேள்வியும் பதிலுமாகப் பேசினர். உண்மையென்னவென்று கேட்டால், இந்த விலைவாசி ஏற்றத்தினுடைய முதல் காரணம் இயற்கை; இரண்டாவது காரணம், இயற்கையில் ஏற்படுகிற உற்பாதங்கள்; மூன்றாவது நிலை, தேவையினுடைய மிகுதி; 4-வது உற்பத்தியாகும்

பண்டங்களை உரிய முறையிலே பங்கிட்டுத் தருவதற்கான வாய்ப்பு குறைவு; 5-வது நிலை அதைப் பங்கிட்டுக் கொடுக்கிறபோது யார் யார் வழியாக கை மாறுகிறதோ அதைப் பொறுத்து அதனுடைய விலை ஏறுகிறது. Intermediaries இல்லாமல், உலகத்திலே எந்தக் காரியமும் நடைபெறவில்லை. கல்யாணத்துக்குக்கூட Intermediaries இருக்கிறார்கள். ஆகவே, Intermediaries இடையில் இருப்பவர் வியாபாரத் தரகரோ, விற்பவரோ, வாங்குபவரோ அவர்களும் தொழில் நடத்தி பிழைப்பு நடத்துபவர்கள். விவசாயிகள் மட்டும்தான் உலகத்திலே வாழ்கிறவர்கள் என்று நான் கருதவில்லை. எல்லோரும் வாழ்கிறார்கள், பல்வேறு தொழில் செய்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை காரணமாக விலைவாசி உயர்வதும், இறங்குவதும் நடைபெறுகிறது. ஆனால், பாதிக்கப்படுகிற மக்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் அரசு மானியம் தந்து விலையைக் குறைக்கிறது. விலைவாசி ஏறினாலும், இறங்கினாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதனால் அதிகம் பாதிப்பு இல்லை, அமைச்சர்களுக்குப் பாதிப்பு இல்லை, கலெக்டருக்கு பாதிப்பு இல்லை. சாதாரண கூலிக்காரர்களுக்குப் பாதிப்பு இருக்கிறது. ஆகவே, இந்தக் கூலிக்காரர்களைப் போல் குறைந்த வருமானத்தில் உள்ளவர்கள் பட்டினிக்கோ, பசிக்கோ ஆளாகாமல் காப்பாற்றப்படுவதுதான், நாம் நிறைவேற்ற வேண்டிய கடமை. அந்த அடிப்படையிலேதான் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குகிற திட்டம் வந்தது.

பிற்பகல் 1-15

அதேபோல, நம்முடைய அரசு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் இவற்றையெல்லாம் விலை குறைவாக நியாய விலைக் கடைகளிலே வழங்குவதற்கு ஏற்பாடு செய்த காரணத்தினால், ஒரு கோடியே 70 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள், அதனால் பயன்பெற்றிருக்கிறார்கள். மிச்சம் அதனால் பயன்பெறாதவர்கள் யார் இருந்தால் என்ன? அவர்கள் வசதியுள்ளவர்களாகத்தானே இருப்பார்கள்? அவர்களுக்கு எண்ணெய் விலையேறிய காரணத்தால் ஒன்றும் பெரிய பாதிப்பு இல்லையே! அல்லது பருப்பு விலையேறிய காரணத்தால் அவர்களது வீட்டிலே ஒன்றும் பட்டினி இல்லையே! விலையேற்றம் என்பதை நான் ஆதரிப்பதற்காக இதைச் சொல்லவில்லை. விலையேற்றம் என்பது தவிர்க்க முடியாதது. விலையேற்றத்தாலே ஏற்படுகிற பாதிப்பை ஓரளவு தவிர்க்க நாம் முயற்சிக்கலாம். இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் மூலம் அது பெருமளவிற்குக்

குறைந்திருக்கிறது. அதற்கான விவரங்களை எடுத்துச்சொல்ல எனக்கு இப்போது வாய்ப்பில்லை. 4,000 கோடி ரூபாய் அளவுக்கு உணவுப் பண்டங்களினுடைய விலையைக் குறைப்பதற்காக இந்த அரசு மானியம் வழங்கி, விலையைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. அதனால் பொது மக்கள் அதிகம் பாதிக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, எல்லோரும் எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்று. இங்கே பேசிய அ.தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் பேசுகிறபொழுது 'குஜராத்திலே, வேறு பல மாநிலங்களிலே பெரிய தொழில் வளர்ச்சியும், உற்பத்திப் பெருக்கமும் ஏற்பட்டு, பெரிய வளர்ச்சி காணப்பட்டாலும் அதனால் நாட்டுக்கு எவ்வளவு வருவாய் கிடைத்தாலும், அடித்தட்டிலிருக்கிற ஏழை மக்களுடைய வாழ்க்கையிலே மாற்றம் ஏற்படுத்தவில்லை' என்று பிரதமர் சொன்னதாக எடுத்துச் சொன்னார். தமிழ்நாட்டில்கூட அப்படிப்பட்ட நிலை, உண்மைதான். ஆனால், அந்த வகையில் வருமான உயர்வு ஏற்படுத்தப்படாத நிலையிலே இருக்கிற அடித்தட்டு மக்களுடைய நலனைக் கவனிக்கக்கூடிய ஒரு முறை தமிழக அரசிலேதான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே வேறு எந்த அரசும் இந்த அளவிற்கு உணவுப் பண்டத்தை விலை குறைத்து, மக்களுக்குக் கிடைக்கச் செய்கின்ற காரியத்திலே ஈடுபட்டிருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், 'இலவசம், இலவசம்' என்று வெறுப்புடன் சொல்கிறார்களே, அந்த இலவசம்தான் ஏழைகளைக் காப்பாற்றியிருக்கிறது. இலவசம்தான் பட்டினியைப் போக்கியிருக்கிறது. அந்த இலவசம்தான் சமூக நலத் திட்டத்தின் அடிப்படையாக இருக்கிறது. வளர்ந்த நாடுகளிலேகூட இலவசமாகப் பண்டங்கள் மட்டுமல்ல, ஊதியமேகூட இலவசமாகத் தருகிறார்கள். ஊதியம் என்றால் வேலை செய்வதற்கல்ல, வேலை செய்யாமல் இருக்கிறவர்களுக்குக்கூட. நாம் எப்படி முதியோர் உதவித் தொகை தருகிறோமோ அப்படி வேலையில்லாதவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. பாடுபடுகிற மக்களாக இருந்து வேலையில்லை என்றால், உடனே உதவித் தொகை. இன்னும் பல்வேறுவிதமான உதவித் தொகைகள், வளர்ந்த, பொருளாதார செழிப்புள்ள நாடுகளிலே இருக்கின்றன. ஆகவே, இந்த இலவசம் கேலிக்குரியதல்ல. ஒரு காலத்திலே 'இலவசம்' எவ்வளவு பெருமையாக இருந்தது தெரியுமா? மேல் ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு தானம், தர்மம் கொடுப்பதுதான் இந்த உலகத்திலே பெரிய புண்ணியமான காரியம் ஆகும். மேல்

ஜாதியினர் தானம், தர்மத்திலே செல்வந்தராக வளர்ந்து கிராமம் கிராமமாக வாங்கினார்கள். ஆக, மேல் ஜாதியினருக்கு தானம், தர்மம் கொடுத்தால், அது கேலி அல்ல. ஏழைகளுக்கு இலவசமாகப் பொருள் போய் சேர்ந்தால், அது ஓர் அரசாங்கம் சூழ்ச்சியான நோக்கத்தோடு கொடுப்பதாக ஒரு தவறான கருத்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் தகுந்த விளக்கத்தை முழு அளவில் நான் சொல்லாவிட்டாலும்கூட, தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு திரட்டும் கடன் தொகையிலிருந்து Capital Expenditure-க்காகப் பயன்படுத்த வேண்டிய கடன் தொகையை எடுத்து, நாங்கள் இலவசப் பண்டங்கள் எதையும் மக்களுக்குத் தரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி உயர்வு குறித்து ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பல புதிய தகவல்களைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார். விலைவாசி உயர்வுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது பெட்ரோல் விலை உயர்வு. ஒரே மாதத்தில் 3 முறை விலை கூடியிருக்கிறது. சென்ற கூட்டத்திலேயே நான் சொன்னேன், ஆளுநர் உரைக்குப் பிறகு இன்றைக்கு லிட்டர் ரூ.2.55 உயர்த்தப்பட்டிருக்கிறது. சர்வதேச அளவிற்கு உயர்கிறது என்று சொன்னால், அருகிலுள்ள பாகிஸ்தானில் விலை உயர்வே இல்லை. இந்திய நாட்டில் தனியார் நிறுவனங்கள் பெட்ரோல் விலையை உயர்த்துகின்றன. பெட்ரோல்-டீசல் விலை உயர்வு கண்காணிப்புக் குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய இரசாயனத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில், பெட்ரோல் விலை உயர்வு எங்களைப் பாதிக்கிறது என்று ஏன் நீங்கள் கூறவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. நாங்கள் தீர்மானித்து வேண்டுமென்றால்தான் செய்வோம். எதை வேண்டுமானாலும் விலை கொடுத்து இலவசமாகக் கொடுக்கவேண்டும் என்பது எங்களுடைய கடமை அல்ல. இந்த அரசாங்கம் பெட்ரோல் விலையினாலே பாதிக்கப்படக்கூடிய சாதாரண மக்களுக்கு உதவ, பேருந்துகளிலே பயணம் செய்கின்றபோது, அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் வரக்கூடாது என்பதற்காகத்தான் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல்

(மேசையைத் தட்டும் ஒலி) இந்த 5 ஆண்டுக் காலமாக நடந்திருக்கிறது என்பதைப் பார்த்தால் யாரை பாதிக்கிறதோ அவர்களுக்கு இந்த அரசு உதவுகிறது. வசதியுள்ளவர்கள், பெட்ரோல் வாங்குகிறபோது, அந்த விலையைக் கொடுத்து வாங்குவதைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? ஏழைகளுக்கு மருந்து கிடைக்கவில்லை என்றால்தான் நாங்கள் கவலைப்படவேண்டுமே தவிர, வசதி உள்ளவர்களுக்கு மருந்து விலையைக் குறைத்துத் தரவேண்டும் என்பது ஒரு கட்டாயம் இல்லை. ஆகவே, பல்வேறு பண்டங்களின் விலை உயரத்தான் செய்யும். வெளிநாட்டிலே இருந்து இறக்குமதியாகிற பண்டங்களின் விலை உயரத்தான் செய்யும். கார் விலை எவ்வளவு உயர்ந்திருக்கிறது? அதற்காக கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் காரிலே ஏறாமலா இருக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) நான் முதன்முதலில் M.L.A. ஆக இருந்தபோது 17 ஆயிரம் ரூபாய்க்கு கார் வாங்கினேன். இன்றைக்கு அது 7 இலட்சம் ரூபாய். ஆகவே, விலை மாற்றம், பொருளாதார வளர்ச்சி விரைவு என்பது . . . (குறுக்கீடு)

பிற்பகல் 1-20

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உருக்கமாகவே பேசத் தொடங்கினார்கள். இடையிலே கொஞ்சம் குறைந்துவிட்டது. பேசுவது விலைவாசி உயர்வை நியாயப்படுத்துவதாக அமைந்துவிடக் கூடாது என்பதைத்தான் நான் கவலையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்டுப்படுத்துவோம் என்று ஒரு வார்த்தையாவது சொல்லக்கூடாதா என்று இறைஞ்சி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். யாருக்கு விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமோ அவர்களுக்குக் கட்டுப்படுத்துகிறோம். யாருக்கெல்லாம் கட்டுப்படுத்தத் தேவையில்லையோ, அவர்களுக்கெல்லாம் கட்டுப்படுத்துவானேன்? ஆகவே, விலையை கட்டுப்படுத்துவது என்பதுகூட, எந்த இடத்தில் எங்களால் முடியுமோ, எந்த இடத்தில் அது கட்டாயம் தேவைப்படுகிறதோ, எந்த இடத்தில் இலவசம் போன்ற தேவை இருக்கிறதோ அங்கேதான் செய்வோம். (குறுக்கீடு)

TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. குணசேகரன், என்ன என்று சொல்லுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசல் விலை உயர்வு சம்பந்தமாக நமது நிதி அமைச்சர் சொல்கிற கருத்தில், காரிலே கம்யூனிஸ்டுகள் செல்வது இல்லையா என்று சொல்கிறார்கள். ஆனால், எல்லா கார்களுமே பெட்ரோலில் ஓடுவதில்லை. வசதி படைத்தவர்கள் செல்கிற கார்தான் பெட்ரோலில் சென்று கொண்டிருக்கிறது. எங்களைப் போன்றவர்கள் செல்கிற கார் டீசலிலே சென்று கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, ஆட்டோ ரிக்ஷா பெட்ரோலில் ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே, ஆட்டோ ரிக்ஷாவில் செல்லக்கூடிய அத்தனை நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள், எங்களைப் போன்றவர்கள் இங்கே வருகிற நேரத்தில் இன்றைக்குக் கட்டணம் என்பது அதிகமாக உயர்ந்திருக்கிறது. 2006-இலே நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு இங்கே வந்த நேரத்தில் 30 ரூபாய்க்குச் சட்டமன்றத்திற்கு வந்து சேர்ந்தேன். ஆனால், இன்றைக்கு 80 ரூபாய் கேட்கிறார்கள். எனவே, ஆட்டோவில் வரக்கூடிய அத்தனை பேர்களுடைய கட்டணமும் கூடி இருக்கிறது. இதுவும் ஏழை எளிய மக்களை பாதிப்படையச் செய்கிறது. எனவே, விலை ஏற்றம் என்பது காய்கறிகள் மட்டுமல்ல, வாழ்க்கைச் செலவினம் ஒவ்வொன்றிலும் கூடுகிற காரணத்தால்தான் இந்த விலை ஏற்றத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். எனவே, பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய, மாநில அரசாங்கங்களுடைய கொள்கைகள்தான் காரணமே தவிர, விலை உயர்வுக்கு வேறு எந்தக் காரணமும் இல்லை என்பது எங்களுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்கள் பெட்ரோலில் ஓடிய காலம் போய், சென்னையிலே இப்போது gas-இல் ஓடுகிறது. ஏழை எளியவர்கள் குறைவான கட்டணத்தில் பயணம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் gas-இல் ஓட்டிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கில்லட்டின் இருக்கிற காரணத்தினாலே நான் யாருக்கும் இப்பொழுது குறுக்கிடுவதற்கு

இடம் தரக்கூடிய நிலையில் இல்லை. நேரம் இல்லை. இங்கே பேசிய சில மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தமிழ்நாட்டிலே பயங்கரவாதம் வளர்வதைப்போலப் பேசினார்கள். தமிழ்நாட்டில்தான் பயங்கரவாதம் இல்லை, நக்சலைட் வாதம் இல்லை, வன்முறைப் போராட்டங்கள் அதிகம் இல்லை. தனிப்பட்ட முறையிலே நடைபெறுகிற குற்றச் செயல்களைப் புள்ளிவிவரம் தந்து சில பேர் அவை அதிகமாக நடைபெறுவதாகச் சொன்ன காரணத்தினால், அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றதைவிட, இப்பொழுது நடைபெறுவது குறைவாகத்தான் உள்ளது. ஒரு பத்திரிகையைப் புரட்டி சில செய்திகளைப் பார்க்கிறபோது, அந்தக் குற்றங்கள் ஏதோ இன்றைக்குப் புதிதாக நடைபெறுவதைப்போலத் தெரியுமே தவிர, கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றது பற்றிய அந்தப் புள்ளிவிவரமும், இந்த ஆட்சிக் காலத்திலே நடைபெறுவது பற்றிய அந்தப் புள்ளிவிவரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி; தமிழ்நாட்டில் நடைபெறுவது, ஆந்திராவிலே நடைபெறுவது, கேரளத்திலே நடைபெறுவது பற்றிய புள்ளிவிவரங்களின் விகிதாச்சாரத்தை வைத்துப் பார்த்தாலும் சரி, இலட்சம் மக்களுக்கு எவ்வளவு குற்றம் செய்யக்கூடியவர்கள் இருப்பார்கள் என்ற அந்த புள்ளிவிவரத்தை கணக்கிட்டுப் பார்த்தாலும் சரி, தமிழ்நாடு எல்லா விதத்திலேயும் அமைதியாக உள்ளது. முறையாக மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற முறையில், தமிழகக் காவல் துறை தன்னுடைய கடமையைச் செய்கிறது. கடந்த கால காவல் துறையைவிட இந்தக் காலத்து காவல் துறை திறமையாகச் செயல்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், குற்றவாளிகளை உடனடியாகக் கண்டுபிடிக்கிறது. ஆயிரம் குற்றங்கள் நடைபெற்றால், அவற்றில் 800 குற்றங்களை உடனடியாக 15 நாட்களுக்குள்ளாகக் கண்டுபிடித்திருக்கிறது. திருட்டுப் போகிற பண்டங்களுடைய, பொருட்களுடைய மதிப்பு 10 கோடி ரூபாய் இருக்குமானால் ஏறத்தாழ 8 கோடி ரூபாய் பொருளைத் திரும்ப மீட்டிருக்கிறது. அந்தப் புள்ளிவிவரங்கள் அத்தனையும், இங்கே இதற்கு முன்னால் நடைபெற்ற விவாதத்திலே அதிக நேரம் போகாமல் இருந்திருக்குமானால், நான் படித்துக் காட்டியிருக்க முடியும்.

பிற்பகல் 1-25

மற்றொன்று இங்கே பேசியவர்கள், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைக் குறை கூறி, ஏதோ உலகத் தமிழ்ச் செம்மொழி மகாநாடு கலைஞருடைய புகழ் பாடத்தான் நடைபெற்றது என்று சொன்னார்கள். மகாநாடு, கலைஞரின் புகழுக்காக நடைபெற்றால்கூட

தவறில்லை. ஒரு நாட்டினுடைய முதலமைச்சரின் புகழுக்காக நடைபெறக் கூடாதா? ஒரு தலைசிறந்த எழுத்தாளருடைய புகழுக்காக நடைபெறக் கூடாதா? ஒரு கலைஞனின் புகழுக்காக நடைபெறக் கூடாதா? அவர் பிறந்த சாதிக்காக வேண்டுமென்றால் நடைபெறக்கூடாதே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) சமூகத்திலே அவருடைய பின்னணிக்காக வேண்டுமானால் நடைபெறக் கூடாதே தவிர, அவரைப் புகழ்வதில் என்ன தவறு? ஆனால், மகாநாடு அதற்காக நடைபெறவில்லை. எல்லாப் பத்திரிகைகளிலும் மகாநாட்டைப்பற்றி எழுதுகிறபோது அவர்கள் கூறுகின்றனர். முதலமைச்சர் ஆணையிட்டார், அரசியல் வாடையே இல்லாமலும் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியோ, தோரணமோ எதுவும் இல்லாமலும் மகாநாடு முழுவதும் பண்பாடுடைய மகாநாடாக நடைபெற்றது என்று. (மேசையைத் தட்டும் ஒலி) கோவை மாநகரம் முழுவதும் தமிழ் மொழி கமழ்கிற மகாநாடாக நடைபெற்றது என்று வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் எல்லாம் கூறுவதுடன் அங்கே கிடைத்த வரவேற்பைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் அடையக்கூடிய மகாநாடாகவும், பயன்படக்கூடிய மகாநாடாகவும், ஆய்வு கருத்தரங்குகள் எல்லாம் சிறந்த முறையிலே நடைபெறக்கூடிய சூழ்நிலையில் அந்த மகாநாடு நடைபெற்றது என்றும் சொன்ன செய்திகள், பாராட்டுகள் எல்லாம் விவரமாக எங்களிடத்தில் இருக்கின்றன.

ஆனால், அன்றைக்கு தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மகாநாடு எப்படிப்பட்ட அலங்கோலத்தோடு நடைபெற்றது என்று ஓர் அமைச்சரே சொன்னார். தேதி, சொன்ன அமைச்சரின் பெயர் எல்லாம் எங்களிடம் இருக்கிறது. அந்த மகாநாட்டிற்காக 38 கோடி ரூபாய் செலவானதாக ஓர் அமைச்சர் சொன்னார். மற்றொரு அமைச்சர் 52 கோடி ரூபாய் செலவானதாகக் கூறியுள்ளார். அந்த மகாநாடு நடைபெற்றபோது, அதற்காக அழைக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்பினார்கள். ஈழத்திலிருந்து வந்த அறிஞர்கள் இங்கே வந்து இறங்கிய பின்னர், மகாநாட்டில் கலந்து கொள்ள முடியாமல் திரும்பிச் சென்றார்கள். அந்த மகாநாடு நடைபெற்றபோது, நடைபெற்ற விளம்பரம் முழுவதும் அன்றைய முதல் அமைச்சருக்குத்தான். அன்றைக்கு வைக்கப்பட்ட கட்-அவுட் எல்லாம் அன்றைய முதல் அமைச்சருக்குத்தான். அன்றைக்குத் துணைப் பிரதமர் அவர்கள் மகாநாட்டில் குத்துவிளக்கேற்ற வந்தபோது, குத்துவிளக்குகூட வைக்கப்படாத அவலம் நிகழ்ந்தது. ஆக, அப்படி நடைபெற்ற அந்த மகாநாடு என்பது, அன்று ஒரு மகாநாடாகவே நடக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், அன்று தஞ்சை மாநகரம் முழுவதும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதாக அறிவித்து, அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. அதற்குப் பின்னர் பார்த்தால், தஞ்சைப் பகுதியில் அந்த வளர்ச்சிப் பணி எதுவும் சரியாக நடைபெறவில்லை. எல்லாவற்றிலும் ஊழல், அந்த ஊழலுக்கு ஒரு விசாரணை, அந்த விசாரணை முடிந்து பார்த்தால் அந்த மகாநாடு நடைபெற்றதிலே பெரும் நிதி தவறான வழியிலே போய்விட்டதாக அன்று அமைச்சராக இருந்தவர்களே கூறினர். ஆக, அப்படி நடைபெற்ற மகாநாட்டைப்போல், கோவை மகாநாடு நடைபெறவில்லை. வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர்கள் சொன்னார்கள், இந்தக் கோவை மகாநாடானது, தமிழ் மொழி ஒரு செம்மொழி என்பதை மத்திய அரசு அங்கீகரித்ததன் அடிப்படையில் நடைபெற்ற அந்தச் செம்மொழிக்கு உலகமெல்லாம் கிடைக்கக்கூடிய முறையில் தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞரால் அந்த மகாநாடு ஏற்பாடு செய்ததை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம் என்று அந்த வெளிநாட்டு அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கில்லட்டின் நேரமான *1-30* மணிக்குள் முன்பண மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்புக்கு விடவேண்டும். எனவே, முன்பண மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்பிற்கு விட்டு நிறைவேற்றலாம்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2011-2012, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2011-2012* ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 206, read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, SURJIT SINGH BARNALA, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance, during the financial year, 2011-2012."

TRUTH ALONE TRIUMPHS

10. எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி கோரியது குறித்து

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், முதலிலே தொடங்குகிறபோது, வழிபாட்டிலே தொடங்கி, முடிக்கிறபோது கோரசிலே முடித்தார்கள். அவர்களுக்கு அது பழக்கமான ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள், இந்த ஆட்சி போய்விட வேண்டும். எதிர்க்கட்சியாக இருக்கிற அவர்கள் ஆளுங்கட்சி வரிசையில் வந்து அமர வேண்டும் என்று தெரிவித்ததுடன், அதுவும் அவர்களுடைய தலைவி அம்மையார் அவர்கள் முதலமைச்சராக வரவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, அந்த ஆசையோடு தன்னுடைய பேச்சை முடித்திருக்கிறார்கள். அவர் ஆசைப்படுவது தவறல்ல. அதை நிறைவேற்றித் தரவேண்டியது பொது மக்கள். செய்வார்களா என்பது கேள்விக்குறி. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் ஒன்று, அவர் ஆசைப்படுவது. ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறவரை முதலமைச்சராக ஆக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். முதலில் ஓய்வு முடிந்தல்லவா? அரசியலிலே, ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாக அவர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னதை மறுப்பதற்கு இதில் ஒன்றுமில்லையே? (குறுக்கீடுகள்) சொன்னதில் ஒன்றும் தவறில்லையே? இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். நேரமில்லை, please. ஏதாவது கேட்க வேண்டுமென்றால் பின்னர் கேளுங்கள்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: இந்த அவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை நான் ஏற்றுப் பேசுவதை, உங்களுடைய கட்சியின் தலைவர் . . . (கூச்சல்-குழப்பம்) அது உங்கள் இஷ்டம். (கூச்சல்-குழப்பம்) அது உங்கள் இஷ்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உங்களுக்கு நான் மைக் கொடுக்கவில்லை. எல்லோரும் உட்காருங்கள். Please, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

2011 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியவர்கள், எதற்காக அந்தத் தீர்மானம்? ஓய்வு எடுத்துக் கொள்வதற்குத்தான். *(கூச்சல்-குழப்பம்)* சொன்னதை சொன்னால் உங்களுக்கு என்ன கடுப்பு? *(கூச்சல்-குழப்பம்)* அந்தத் தீர்மானத்திலே இந்த வாசகம் இல்லையென்றால், என்னுடைய வாசகத்தை நான் திரும்பப் பெறுகிறேன். *(குறுக்கீடுகள்)* அப்படி அந்தத் தீர்மானம் இல்லையென்றால் நான். . . *(குறுக்கீடுகள்)* தீர்மானத்திலே என்ன இருக்கிறது என்று படித்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நான் சொல்வதைக் கேளுங்கள். தீர்மானத்திலே இருக்கிற வார்த்தையை அவர் சொல்லியிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* Nothing. உட்காருங்கள். தீர்மானத்திலே அதுதானே இருக்கிறது? *(கூச்சல்-குழப்பம்)* தீர்மானத்திலே இருக்கிற வார்த்தையைச் சொல்வது ஒன்றும் தவறு இல்லையே? *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு காரசாரமாகப் பேசவேண்டுமோ அவ்வளவும் பேசினார்கள். இது ரௌடிகள் ஆட்சி என்று சொன்னபோதுகூட நாங்கள் சும்மா, அமைதியாக உட்கார்ந்திருந்தோம். ஆனால், நீங்கள்தான் அம்மா ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். அந்த ஓய்வு என்பது தவறான வார்த்தையல்ல. ஓய்ந்த நேரத்தில் போவதல்ல. ஓய்வு என்பது ஓய்ந்த நேரத்தில் போவதல்ல. ஓய்ந்த நேரத்தில் ஓய்வு எடுப்பது என்பது rest எடுப்பது. அதென்ன தவறா? Is it unparliamentary, is it unparliamentary? No, you can't expunge the word. If the word is unparliamentary, then only the Speaker can expunge it. It is not unparliamentary. You are threatening on the last day, ஒன்றை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள், இங்கு ஒருவர்கூட திரும்பி வரமாட்டீர்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்திலே இருக்கிற வாசகம், உடல்நலக் குறைவு காரணமாக பூரண ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு என்பது, இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்தது நீங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓய்வு எடுப்பது தவறா? இதில் என்ன இருக்கிறது? உழைத்தவர்கள் ஓய்வு எடுப்பார்கள். இதிலே என்ன இருக்கிறது? இதிலே தவறான அர்த்தம் என்ன இருக்கிறது? (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். உழைத்தவர்கள் ஓய்வு எடுப்பார்கள், அதுதானே உண்மை? (கூச்சல்-குழப்பம்) இதோ பாருங்கள், நான் தீர்மானத்தை வாசிக்கிறேன், கேளுங்கள். வாசிக்கிறேன் கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் கொடுத்த தீர்மானத்தை நான் வாசிக்கிறேன், கேளுங்கள்.

"தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதையடுத்து, அவரைப் பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ள நிலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 20 (1)-ன்கீழ் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இக்கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பட வேண்டும்" என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் முன்மொழிந்தார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் முன்மொழிந்த அந்தத் தீர்மானத்தை திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வழிமொழிந்தார்கள்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு அந்தத் தீர்மானம் சபையிலே ஒட்டுமொத்தமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதில் என்ன இருக்கிறது? உங்களுடைய வேண்டுகோள் அதுதானே? (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள் — "தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும்" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான என்று திரு. ஓ. பன்னீர்செல்வம் கொடுத்திருக்கிறார் — "உடல்நலக் குறைவு ஏற்பட்டிருப்பதால், பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இதன் காரணமாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது'' (குறுக்கீடுகள்) இப்படித்தானே சொல்லியிருக்கிறீர்கள்? (கூச்சல்-குழப்பம்) இது உண்மையா, இல்லையா? இது உண்மையா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த வேண்டுகோள் உண்மையா, இல்லையா? எல்லோரையும்

2011 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

உட்காரச் சொல்லுங்கள், (குறுக்கீடுகள்) எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள், (குறுக்கீடுகள்) ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அது ஒரு unparliamentary word இல்லையே?

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சுரிமையை நீங்கள் தடுக்க முடியாது. பெங்களூரு நீதிமன்றத்தில், உங்களுடைய கட்சித் தலைவர், பெங்களூரு நீதிமன்றத்திற்குப் போக முடியாததற்காக, அந்த நீதிமன்றத்திலே தெரிவித்த வார்த்தையில், தமிழகச் சட்டமன்றத்திலே அவர் ஓய்வு பெறுவதற்குத் தீர்மானம் கொடுத்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அங்கேயே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அதை நான் சொல்லாமல், யார் சொல்வது? (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான்தான் சொல்ல வேண்டும். உங்களுக்குத் தலைவராக இருக்கலாம். ஆனால், சட்டமன்றத்தில் அவர்கள் உறுப்பினர்தான். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணி நேரம் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பேசிவிட்டு, வேண்டுமென்றே இந்த அவை நடக்காத அளவுக்குத் திட்டமிட்டு சதி செய்கிறார்கள். எனவே, ஒன்று அவர்களை வெளியேற்றவேண்டும், இல்லையென்றால் இந்தச் சட்டமன்றம் ஒழுங்காக நடைபெறுவதற்கு நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், ஒரு மணி, 10 நிமிடங்கள்--70 நிமிடங்கள் பேசியிருக்கிறார். உறுப்பினர்கள், கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். பட்ஜெட்டை நிறைவேற்றவேண்டும். முதலில் எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) It is not an unparliamentary word. அதிலே என்ன உங்களுக்கு உஷ்ணம் ஆகிறது? எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஓய்வு எடுக்கிறார்கள் என்று சொல்வதில் தவறு என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)

மற்றவர்கள் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள் please. எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். Please, எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். அவரவர் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) போக முடியாது என்று சொல்லக்கூடாது. உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். அவரவர் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவரவர் இடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் உடல்நலக் குறைவு ஏற்பட்டிருப்பதால், இந்தக் கூட்டத் தொடருக்கு வர முடியாது என்ற காரணத்தால் நான் அந்தத் தீர்மானத்தை இங்கு முன்மொழிந்தேன். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். பேச விடுங்கள். அது இந்தக் கூட்டத் தொடர் முடியும் வரைக்கும்தான். தற்காலிக ஏற்பாடாகத்தான் நாங்கள் அந்த அனுமதியை வேண்டினோம். அதை அரசியல் ஆக்குகின்ற விதத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கின்ற ஒருவர் எப்படி என்பதுபோல ஆரம்பித்தார்கள். அதைத்தான், தேவையில்லாதது, அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள் என்று சொல்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரை நான் குறைவுபடுத்துவதற்காக அந்த வார்த்தையைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், எல்லோரையும் மதித்து நடந்துகொள்ளச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அந்த மாதிரியெல்லாம் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

2011 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இந்த அவையில் முதலமைச்சர் இருக்கையிலே, அந்த அம்மையார், எதிர்க்கட்சித் தலைவர் வந்து அமரக்கூடிய அளவிற்கு ஒரு நிலை வரும் என்று அவர் பேசினார். இங்கு ஆளுங்கட்சியாக உள்ளவர்கள் இந்த இடத்தைவிட்டு எதிர்க்கட்சியிலே போய் அமர்வார்கள் என்ற எண்ணத்தையும் அவர் தெரிவித்தார். அப்படித் தெரிவித்தபோது ஒய்வுபெற்றுக் கொண்டிருப்பவரே அந்த நிலையைப் பெற முடியுமானால், இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றவர், அந்த நிலையைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதா? என்றுதான் நான் கேட்டேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-இலிருந்து 2006 வரை ஐந்தாண்டுக் காலம் மாண்புமிகு முதலமைச்சர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். இந்த சபைக்கே வரவில்லை. அவர்களே முதலமைச்சராக வரும்போது, எங்களுடைய அம்மா சபைக்கு வந்து இங்கே நிறைய பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஏன் முதலமைச்சராக வர முடியாது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன வார்த்தையிலே தவறு இல்லை. அவ்வளவுதான். யார் யாருக்கு, என்னென்ன நோக்கம் இருக்கிறதோ, அந்த நோக்கத்திலே அந்த வார்த்தையை எடுத்துக்கொள்வதைப் பற்றி எனக்கு வருத்தம் இல்லை.

இந்த விலைவாசியைப் பற்றி அந்த அம்மையாரே ஓர் அறிக்கையிலே தெரிவிக்கின்றபோது, விலை உயர்விற்கான காரணங்களை நிதிநிலை அறிக்கையில் பட்டியலிட்டிருப்பது வருத்தமளிக்கிறது என்கிறார். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது அவருக்கு ஏற்ப ஒரு தொனியிலே கருத்தினை வெளிப்படுத்தினார்கள். ஓய்வு பெறுவோர்கள் வெற்றி பெறமுடியும் என்றால், நாங்கள்

எல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இனி எதிர்காலத்தில் முழுமையாக நீங்கள் ஓய்வுபெறப் போகிறீர்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அதைப் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், அதெல்லாம் மக்கள் முடிவு செய்ய வேண்டியது. இப்போது அதுபற்றி ஏன் பேசுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தூரம் எதிர்க்கட்சி வலியுறுத்தினாலும், அந்த வார்த்தையை நிதியமைச்சர் அவர்களும், நீங்களும் வாபஸ் பெறாத காரணத்தினாலே சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. ல. ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. கு. இராஜேந்திரன் தவிர) அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(திரு. டி. ஜெயக்குமார், திரு. கோ. அரி, திரு. ஏ.கே. போஸ் ஆகியோர் நிதிநிலை அறிக்கை புத்தகங்களை வீசியெறிந்து சென்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் ஆகியோர் நிதிநிலை அறிக்கை புத்தகத்தை வீசியெறிந்த செய்கை கண்டிக்கத்தக்கது. இம்மாதிரியாக அவையை அவமதிக்கின்ற வகையில் அவர்கள் நடப்பது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1-10

9. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதன்மூலமாக நிரந்தரமாக இந்த அவைக்கு நாங்கள் வரமுடியாதவர்களாக ஆகிவிட்டோம் என்பதை ஒப்புக்கொண்டு,*

இன்னும் சொல்லப்போனால், அன்று தஞ்சை மாநகரம் முழுவதும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதாக அறிவித்து, அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. அதற்குப் பின்னர் பார்த்தால், தஞ்சைப் பகுதியில் அந்த வளர்ச்சிப் பணி எதுவும் சரியாக நடைபெறவில்லை. எல்லாவற்றிலும் ஊழல், அந்த ஊழலுக்கு ஒரு விசாரணை, அந்த விசாரணை முடிந்து பார்த்தால் அந்த மகாநாடு நடைபெற்றதிலே பெரும் நிதி தவறான வழியிலே போய்விட்டதாக அன்று அமைச்சராக இருந்தவர்களே கூறினர். ஆக, அப்படி நடைபெற்ற மகாநாட்டைப்போல், கோவை மகாநாடு நடைபெறவில்லை. வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர்கள் சொன்னார்கள், இந்தக் கோவை மகாநாடானது, தமிழ் மொழி ஒரு செம்மொழி என்பதை மத்திய அரசு அங்கீகரித்ததன் அடிப்படையில் நடைபெற்ற அந்தச் செம்மொழிக்கு உலகமெல்லாம் கிடைக்கக்கூடிய முறையில் தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞரால் அந்த மகாநாடு ஏற்பாடு செய்ததை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம் என்று அந்த வெளிநாட்டு அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கில்லட்டின் நேரமான *1-30* மணிக்குள் முன்பண மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்புக்கு விடவேண்டும். எனவே, முன்பண மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்பிற்கு விட்டு நிறைவேற்றலாம்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2011-2012, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2011-2012* ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 206, read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, SURJIT SINGH BARNALA, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance, during the financial year, 2011-2012."

11. முன்பண மானியக் கோரிக்கைகள், 2011–2012, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011-2012 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 1 — மாநிலச் சட்டமன்றம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மானியக் கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.30,49,50,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

மானியக் கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,99,19,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மானியக் கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம்

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்பட்டி, அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் அமைந்துள்ள கிராமங்களின் நில உடமை மேம்பாட்டுத் திட்ட பதிவேடுகள் ‘அ’ பதிவேடுகள், நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்போது தயாரிக்கப்பட்ட ஒப்பீட்டு பட்டியல்கள் ஆகியவற்றை சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பின்னரே, இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான அனைத்து நிலங்களையும் முழுமையாக கண்டறிந்து, அவற்றின் குத்தகை உரிமையினை பொது ஏலம் மூலம் முறைப்படுத்த இயலும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் பெரும்பான்மையாக விவசாயத்திற்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயிலுக்கு செயல் அலுவலர் 4-2-2008-ல் பொறுப்பேற்ற பின்னர், குத்தகைதாரர்களிடமிருந்து நாளது வரை ரூ. 43,100/- மட்டும் வழக்குகளுக்கு பாதகமின்றி குத்தகையாக பெறப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் முன்னாள் பரம்பரை அறங்காவலரால் 143.60 ஏக்கர் பரப்பளவிலான நிலங்களுக்கான குத்தகை உரிமையினை பொது ஏலத்தின்மூலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், இந்நிலங்களுக்கான குத்தகை உரிமையினை பொது ஏலத்தின் மூலம் விட திருக்கோயில் செயல் அலுவலர் அனுமதி கேட்டுள்ளார். திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் அமைந்துள்ள கிராமங்களின் அடிப்படை கிராமக் கணக்குகளை

வருவாய்த் துறையிலிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திருக்கோயிலுக்குச் சொந்தமானவை என உறுதிபடுத்தப்பட்டுள்ள நிலங்களைப் பகுத்து அவைகளை மட்டும் பொது ஏலத்தின்மூலம் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

93—

திருப்பணி

வினா எண் 115097—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் உற்சவமூர்த்திகளுக்கு, வாகன பாதுகாப்பு செய்து, திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்புட்டி, அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயிலில் உபயதாரர்கள் மூலமாக ரூ. 1.25 இலட்சம் செலவில் திருக்கோயில் நுழைவாயில் மண்டபத்திற்கான மேற்கூரையும், ரூ. 95,000/- செலவில் மகா மண்டபத்தின் கூரையும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் திருக்கோயிலின் திருமதிலும், தரைதளமும் புதுப்பிக்கப்பட்டு 27-11-2009 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. எனவே மேற்படி திருக்கோயிலில் தற்போது நடைபெற வேண்டிய திருப்பணிகள் ஏதுமில்லை.

94—

கழிவு நீர் சுத்திகரிப்பு

வினா எண் 56942—திருமதி ஜி. லதா: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) வேலூர் மாவட்டம், தோல் தொழிற்சாலை கழிவு நீரை சுத்திகரித்து கடலில் கலக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், தோல் தொழிற்சாலை கழிவுநீரை சுத்திகரித்து கடலில் கலக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

95—

விளையாட்டு மையம்

வினா எண் **58592—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நடுகாட்டுப்பாளையத்தில் சிறுவர்கள் விளையாட்டு மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுசூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, நடுகாட்டுப்பாளையத்தில் சிறுவர்கள் விளையாட்டு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

[2011 பிப்ரவரி 10

96—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 89379—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் நகரில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் நகரில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

97—

விளையாட்டு பயிற்சி மையம்

வினா எண் 93207—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் மத்திய அரசு அனுமதித்த விளையாட்டு பயிற்சி துணை மையம் அமைக்கும் பணியினை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு தொகுதியில் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தினை

2011 பிப்ரவரி 10]

இந்திய விளையாட்டு மையம் அமைக்கும் பொருட்டு தர இயலாது என இந்து சமய அறநிலையத் துறையால் தெரிவிக்கப்பட்டபடியால் மாற்று இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

98—

அரங்கத்தை சீரமைத்தல்

வினா எண் 104138—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் உள்ள மகாத்மா காந்தி விளையாட்டு அரங்கத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) சேலத்தில் உள்ள மகாத்மா காந்தி விளையாட்டு அரங்கத்தை சீரமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

99—

தியான வகுப்பு

வினா எண் 107640—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து கிராமங்களிலும் வாரம் ஒருமுறை தியான வகுப்புகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

அனைத்து கிராமங்களிலும் வாரம் ஒருமுறை தியான வகுப்புகள் துவக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

100—

குத்துச் சண்டை பயிற்சி

வினா எண் 108448—திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதியில் குத்துச்சண்டை பயிற்றுவிக்க விளையாட்டு அரங்கம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) சைதாப்பேட்டை தொகுதியில் குத்துச்சண்டை பயிற்றுவிக்க விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழுவில்லை.

101—

சமையலறை

வினா எண் 5457—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, பொற்குணம் கிராமத்தில் சத்துணவுக் கூடத்திற்கு புதிய சமையலறை கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம் பொற்குணம் ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவு மையத்திற்கு கடந்த 2004-2005 ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ. 70 ஆயிரம் மதிப்பீட்டில் சத்துணவு மைய கூடம் கட்டப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

2011 பிப்ரவரி 10]

102—

சீருடை

வினா எண் 23673—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அங்கன்வாடி, சத்துணவு பணியாளர்களுக்கு சீருடை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் 2 சேலைகள் தலா ரூ. 200/— மதிப்பில் வழங்கப்படுகின்றன.

103—

அடிப்படை வசதி

வினா எண் 16491—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஆண்டுதோறும் தனித் தொகுதிகளிலுள்ள ஓர் ஊராட்சியை சிறப்புத் திட்டத்தின்கீழ் தத்து எடுத்து அடிப்படை வசதிகளை செய்ய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தீண்டாமையை கடைபிடிக்காத மற்றும் நல்லிணக்கத்துடன் வாழும் ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஊராட்சிக்கு, ஆண்டுதோறும் 2009-2010 வரை ரூ. 1.00 இலட்சம் பரிசு வழங்கி, தேர்ந்தெடுத்த ஊராட்சிக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டு 2010-2011

முதல் ரூ. 1.00 இலட்சம் என்பது 2.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு பரிசு தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 150.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் நடப்பு 2010-2011-ம் ஆண்டில் 157.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு ஆதி திராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, ஆதி திராவிடர் நல துணைத் திட்டத்தின் மூலம் ரூ. 5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதில் 10% தொகையில் அதாவது ரூ. 50.00 இலட்சம், பள்ளிகள், விடுதிகள் மற்றும் ஆதி திராவிடர் காலனிகள் ஆகியவற்றிற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பணிகளுக்காக செலவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது பிரதம மந்திரி ஆதர்சன் கிராம யோஜன திட்டத்தின்கீழ் கிராம மொத்த மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கு மேல் பட்டியலின மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அக்கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிக்கான பணிகள் செய்ய, தற்போது முதற்கட்டமாக திருவாரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 225 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

104—

அடிப்படை வசதி

வினா எண் 73673—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனியில் சுடுகாடு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனிக்கு, சுடுகாடு அனைத்து வசதிகளுடன் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

105—

அங்காடி

வினா எண் 125394—டாக்டர் (திருமதி) கே. காயத்திரி தேவி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, செய்யூரில் மீன் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

நீர்வள நிலவள திட்டம் (IAMWARM) வாயிலாக ஓங்கூர் உபவடி நிலப் பகுதியில் ரூபாய் எட்டு லட்சம் செலவில் இரண்டு மீன் விற்பனை நிலையம் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் மதுராந்தகம் தொகுதி, செய்யூர் இவ்வடி நில கோட்டப் பகுதியில் அமைந்துள்ளதால் மீன் அங்காடி அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் தகுதி வாய்ந்த பயனாளி குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு இந்த ஆண்டுக்குள் மீன் விற்பனை நிலையம் செயல்படுத்தப்படும்.

106—

மீன் விதை வங்கி

வினா எண் 131726—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராமப்புறங்களில் புதிய மீன் விதை வங்கிகளை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மீன்விதை வங்கிகள் அமைத்தல் மானிய அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. நீர்வள நிலவள திட்டத்தில் 63 உபவடி நிலக்கோட்டங்களில் அமைந்துள்ள நீர்நிலைகளின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

அருகாமையில் மட்டுமே மீன் விதை வங்கிகள் அமைக்கப்பட்டு நீர் உபயோகிப்போர் சங்கத்தினரால் நிர்வகிக்கப்படுகிறது. மேலும், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 70 மீன் விதை வங்கிகளும், 10 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நீர்வள நிலவள திட்டத்தில் முதற் கட்டம் மற்றும் இரண்டாம் கட்ட உபவடி நிலக்கோட்டங்களில் 12 மீன் விதை வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

107—

கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 117473—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் துவக்க அரசு ஆவன செய்யுமா:

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரையில், Q-557 மானாமதுரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்கு 164 உறுப்பினர்கள் பால் வழங்கி வருகிறார்கள். இச்சங்கத்தின்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 810 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு 420 லிட்டர் பால் சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது. எஞ்சிய 390 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது. மானாமதுரை நகரப் பகுதியாக உள்ளதால், கறவை மாடுகள் வளர்த்து கூட்டுறவுச் சங்கத்திற்கு பால் வழங்க ஆதி திராவிட பொது மக்கள் ஆர்வம் காட்டாததால், புதியதாக ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க தற்பொழுது வாய்ப்புகள் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

108—

கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 117474—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியிலுள்ள ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை புதுப்பித்து, செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியிலுள்ள, எம்.எஸ். 128 திருப்பாச்சேத்தி ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் புதுப்பிக்கப்பட்டு 18-10-2010 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்தில் நாளொன்றுக்கு 30 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

109—

பயிற்சி

வினா எண் 107815—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கதர் ஆடைகள் விற்பனையை ஊக்குவிக்க, மக்களை கவரும் வண்ணம் ஆடைகளை வடிவமைக்கும் பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ், கதர் ஆடைகள் விற்பனையை ஊக்குவிக்க, மக்களை கவரும் வண்ணம் ஆடைகளை வடிவமைக்கும் பயிற்சி, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வழங்கப்படும்.

இணைப்பு III

(196ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

பதின்மூன்றாவது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

முத்தமிழறிஞர், வரலாற்று நாயகர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் தலைவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, அனைவருக்கும் வணக்கம்.

பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் 15 கூட்டத் தொடர்கள் 2006 ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாள் தொடங்கி இன்று 10-2-2011 வரை நடைபெற்றுள்ளன.

இந்தப் பதினைந்தாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 7-1-2011 முதல் 13-1-2011 வரையிலும், இரண்டாவது கூட்டம் 4-2-2011 முதல் இன்று (10-2-2011) வரையிலும் மொத்தம் 11 நாட்கள் நடைபெற்றுள்ளது. 7-1-2011 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

5-2-2011 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இடைக்கால நிதிநிலை அறிக்கையை அளித்தார்கள்.

இந்த ஐந்தாண்டுகளில் இப்பேரவை நிறைவேற்றிய அலுவல்களை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)	*-- 226*
மாலையிலும் பேரவை கூடிய நாள்	*-- 1*
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்	*-- 903 மணி 05 நிமிடம்*

2011 பிப்ரவரி 10]

ஆளுநர் உரை விவாதம்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானங்களின் மீது விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள்	--	26
உரையாற்றிய உறுப்பினர்கள்	--	191 பேர்
உரையாற்றிய நேரம்	--	66 மணி 45 நிமிடம்
2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம்	--	3 மணி 01 நிமிடம்
2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம்	--	2 மணி 43 நிமிடம்

நிதி அலுவல்கள்--

வரவு--செலவுத் திட்டப் பொது விவாதம்

வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள்	--	31
பங்கேற்ற உறுப்பினர்கள்	--	247
உரையாற்றிய நேரம்	--	89 மணி 35 நிமிடம்
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம்	--	6 மணி 30 நிமிடம்

மானியக் கோரிக்கைகள்

விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	--	123
உரையாற்றிய உறுப்பினர்கள்	--	1044
உரையாற்றிய நேரம்	--	239 மணி 34 நிமிடம்
மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம்	--	109 மணி 48 நிமிடம்

[2011 பிப்ரவரி 10

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதிலளித்த நேரம்	--	7 மணி 2 நிமிடம்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதிலளித்த நேரம்	--	13 மணி 18 நிமிடம்
கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற்ற நாட்கள்	--	7
உரையாற்றிய உறுப்பினர்கள்	--	31
உரையாற்றிய நேரம்	--	8 மணி 35 நிமிடம்
மாண்புமிகு நிதியமைச்சர் பதிலுரை ஆற்றிய நேரம்	--	2 மணி 12 நிமிடம்

இந்த ஐந்து ஆண்டுகளில் விவாதங்களில் பேசுவதற்கு கட்சிவாரியாக வழங்கப்பட்ட வாய்ப்புகள் பற்றிய விவரம்

தி.மு.க.	- 272 வாய்ப்புகள், பேசிய நேரம் 65 மணி 25 நிமிடங்கள்,
அ.இ.அ.தி.மு.க.	- 276 வாய்ப்புகள், 100 மணி 3 நிமிடங்கள்,
இ.தே.கா.	- 312 வாய்ப்புகள், 92 மணி 30 நிமிடங்கள்,
பா.ம.க.	- 191 வாய்ப்புகள், 55 மணி 17 நிமிடங்கள்,
இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்)	- 156 வாய்ப்புகள், 33 மணி 31 நிமிடங்கள்,
இந்திய கம்யூனிஸ்டு	- 142 வாய்ப்புகள், 28 மணி 42 நிமிடங்கள்,
ம.தி.மு.க.	- 90 வாய்ப்புகள், 14 மணி 55 நிமிடங்கள்
வி.சி.க.	- 47 வாய்ப்புகள், 9 மணி 19 நிமிடங்கள்,
தே.மு.தி.க.	- 8 வாய்ப்புகள், 1 மணி 37 நிமிடங்கள்,
சுயேச்சை	- 11 வாய்ப்புகள், 1 மணி 29 நிமிடங்கள்,

2011 பிப்ரவரி 10]

எக்கட்சியையும் சாராதவர் - 3 வாய்ப்புகள், 28 நிமிடங்கள்,

நியமன உறுப்பினர் - 5 வாய்ப்புகள், 1 மணி 13 நிமிடங்கள்

மொத்தம் பேசிய உறுப்பினர்களின் வாய்ப்புகள் -- 1513

மொத்தம் பேசிய நேரம் -- 404 மணி 29 நிமிடங்கள்

வெட்டுத் தீர்மானங்கள் (துணை மானியக் கோரிக்கை உட்பட):

வரப்பெற்றவை	--	71,191
அனுமதிக்கப்பெற்றவை	--	65,952
அவையில் முன்மொழியப்பெற்றவை	--	12,962

வினாக்கள்--விடைகள்:

17-5-2006-ல் இப்பேரவைக் கூட்டம் தொடங்கியது முதல் 5 ஆண்டுகளில் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்	--	1,35,382
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	--	190
அனுமதிக்கப்பெற்றவை	--	1,29,073
உடுக்குறியிட்டவை	--	11,687
உடுக்குறியிடாதவை	--	20,514
குறுகிய கால வினா	--	81

அனுமதிக்கப்பெற்றவற்றில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்--

வ. எண்	உறுப்பினர் பெயர்	கட்சி	வினாக்களின் எண்ணிக்கை
1	திரு. கோவை தங்கம்	இ.தே.கா.	29,139
2	திரு. ம. குணசேகரன்	அ.இ.அ.தி.மு.க.	16,057
3	திரு. அ. தமிழரசு	பா.ம.க.	9,687
4	திரு. கி. ஆறுமுகம்	பா.ம.க.	5,655
5	திரு. பெ. கண்ணன்	பா.ம.க.	5,432

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

உடுக்குறியிட்ட வினாக்கள்

அவையில் விடையளிக்கப்பட்டவை -- *1302*

மொத்த துணை வினாக்கள் -- *4409*

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

வ. எண்	அமைச்சர்	வினாக்களின் எண்ணிக்கை
1	மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்	116
2	மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	94
3	மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	85
4	மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்	81
5	மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்	79

வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள் -- *138*

வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் -- *84*

நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் -- *12 மணி 27 நிமிடங்கள்*

குறுகிய கால வினா -- *1*

உடுக்குறியிடாத வினாக்கள்——

அவைமுன் வைக்கப்பெற்றவை -- *8,921*

உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் -- *4,735*

2011 பிப்ரவரி 10]

சிறப்புக் கவன ஈர்ப்பு--

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருட்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை -- *69*

மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை -- *26*

மாண்புமிகு துணை முதலமைச்சர் பதிலளித்தவை -- *5*

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் -- *39* மணி *15* நிமிடம்

தகவல் கோரல்--

தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்ட நேர்வுகள் -- *332*

மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை -- *85*

மாண்புமிகு துணை முதலமைச்சர் பதிலளித்தவை -- *13*

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் -- *39* மணி *04* நிமிடம்

கவன ஈர்ப்புகள்--

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை -- *9,086*

கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை -- *934*

அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை -- *58*

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்--

அவையில் எழுப்பப்பெற்றவை -- *16*

உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை -- *11*

திரும்பப்பெற்றது -- *1*

[2011 பிப்ரவரி 10

அரசினர் சட்டமுன்வடிவுகள்---

வரப்பெற்றவை	--	*239*
நிறைவேற்றப்பெற்றவை	--	*235*

அரசினர் தனித் தீர்மானம்---

வரப்பெற்றவை	--	*12*
நிறைவேற்றப்பெற்றவை	--	*12*

தனி உறுப்பினர் தனித் தீர்மானம்---

வரப்பெற்றது	--	*1*
நிறைவேற்றப்பெற்றது	--	*1*

விதி 110—ன்கீழ் மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள்---

மொத்தம் அளிக்கப்பெற்றவை	--	*46*
மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை	--	*18*
மாண்புமிகு துணை முதலமைச்சர் அளித்தவை	--	*8*

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்---

பொதுக் கணக்குக் குழு	--	*238*
பொது நிறுவனங்கள் குழு	--	*184*
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு	--	*11*
அரசு உறுதிமொழிக் குழு	--	*47*
மதிப்பீட்டுக் குழு	--	*36*
மனுக்கள் குழு	--	*123*
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	--	*11*

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்---

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்	--	*811*
(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்	--	*1609*
அவற்றில், விசாரணைக் குழு அறிக்கைகள்	--	*8*
உயர்மட்டக் குழு அறிக்கைகள்	--	*1*

2011 பிப்ரவரி 10]

உறுப்பினர்கள் வருகை—

17-5-2006 முதல் *5* ஆண்டுகளில் பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல்-

1. செல்வி ஆ. அங்கையற்கண்ணி
2. திரு. எம். அன்பழகன்
3. திரு. சபா. இராஜேந்திரன்
4. திரு. தா. உதயசூரியன்
5. திரு. கோ. ஐயப்பன்
6. திரு. வே. கண்ணன்
7. திரு. பெ. காமராஜ்
8. திரு. க. சுந்தர்
9. திரு. கே. திருநாவுக்கரசு
10. திரு. வி.எஸ். பாபு
11. திரு. ப. ரங்கநாதன்
12. திரு. விடியல் எஸ். சேகர்
13. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

பார்வையாளர்கள்—

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்

மொத்தம்	--	*81,726*
ஆண்கள்	--	*72,687*
பெண்கள்	--	*9,039*

நூலகம்—

இப்பேரவையின் ஐந்தாண்டு காலத்தில் சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்	--	*4,002*
வழங்கப்பெற்ற நூல்கள்	--	*1,123*
புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள்	--	*1,420*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

நடவடிக்கைக் குறிப்புகள்--

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	-	5,008
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	-	40,508
மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	-	10,403
தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	-	2,475

சிறப்பு நேர்வுகள்--

17-5-2006 ஆம் நாளன்று தொடங்கி இன்று நிறைவுறும் இந்த பதின்மூன்றாவது சட்டப் பேரவை கூட்டத் தொடர்களில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளன. தமிழ்நாட்டு மக்களின் அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும் வண்ணம் எண்ணிலடங்கா மக்கள் நலத் திட்டங்கள் பற்றிய அறிவிப்புகளும் சட்டமுன்வடிவுகளும் பேரவையில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. அவையனைத்தையும் எடுத்துரைப்பதென்றால் பல மணி நேரமாகும். எனினும், நேரத்தின் அருமை கருதி அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இத்தருணத்தில் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமானதாக இருக்குமெனக் கருதுகிறேன்.

13-5-2006 அன்று ஐந்தாவது முறையாக அரசுக்குத் தலைமையேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த விழா மேடையிலேயே அறிவித்தவாறு, வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியை கிலோ இரண்டு ரூபாய்க்கு வழங்கியதோடு, 2008 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் முதல் அதனை கிலோ ஒரு ரூபாய் எனக் குறைத்து பசிப் பிணி போக்கிய மருத்துவராக விளங்குபவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்றால், அது மிகையாகாது.

2011 பிப்ரவரி 10]

அதேபோல 7,000 கோடி ரூபாய் அளவுக்குக் கூட்டுறவுக் கடன்களை இரத்துச் செய்ததோடு, ரூபாய் 9,000 கோடி அளவுக்குப் பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழக மக்களின், அதிலும் குறிப்பாகப் பெண்களின், விழிப்புணர்வையும், உலக அறிவையும் வளர்க்க, ஒரு கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கியமை, சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பல மேம்பாலங்கள் மற்றும் மெட்ரோ ரெயில் திட்டச் செயலாக்கம், மாநிலமெங்கும் குறைந்த கட்டணத்தில் அதிநவீன பேருந்து வசதி, கூவம் நதி சீரமைப்பு, நெல், கரும்பு மற்றும் பாலுக்கான கொள்முதல் விலை உயர்வு, மத்திய அரசு உதவியுடன் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத் துவக்கம், ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம், ரூபாய் 52,195 கோடி அளவிற்கு தொழில் முதலீடுகளைப் பெற சிறப்புச் செயல் திட்டம் போன்ற பலப் பல திட்டங்கள் இதில் அடங்கும்.

மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில், இதுவரை 2 இலட்சத்து 70 ஆயிரத்து 265 பயனாளிகள் ரூபாய் 702 கோடி அளவுக்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர். இது தவிர அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 108 என்கிற அவசர கால மருத்துவ ஊர்தி இலவச சேவை, கருவுற்ற தாய்மார்களுக்குப் பேறுகால உதவித் திட்டம், திருமண உதவித் திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெருமளவு உயர்வு, தமிழர் திருநாளையொட்டி 3 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் மீண்டும் அமல், சமூக நீதியை நிலைநாட்ட பெரியார் நினைவு சமத்துவபுரங்களை அமைத்தல் என இப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

அதுமட்டுமல்லாமல், எஸ்மா, டெஸ்மா சட்டத்தை நீக்கி அரசுப் பணியாளர்கள் இழந்த சலுகைகளை மீண்டும் வழங்கியமை, மிகுந்த நிதிச் சுமைக்கிடையிலும் மத்திய அரசு அமைத்த ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை மாநில அரசு ஊழியர்களுக்கும் நடைமுறைப்படுத்தியமை, சத்துணவுப் பணியாளர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, பலவகையான தொழில் புரிவோருக்கென தனி நல வாரியங்கள் அமை ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டுமல்லாது திருநங்கை

வாழ்விலும் ஒளியேற்ற சிறப்புத் திட்டங்கள், அனைத்து சாதியினரும் அர்ச்சகராக நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கை மற்றும் அவர்களுக்கான பயிற்சி நிலையங்கள் துவக்கம், 2007 ஆம் ஆண்டு முதல் தொழில் கல்விக்கான நுழைவுத் தேர்வு இரத்து, அமரர் ராஜீவ் காந்தி அவர்களது பெயரில் விமானவியல் உயர் கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி அமைத்தல், சென்னை அரசு பொது மருத்துவனைக்கு அவரது திருப்பெயரைச் சூட்டுதல், சட்டப் பேரவை உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதி ஒன்றேமுக்கால் கோடி ரூபாயாக உயர்வு, படிகள் உட்பட உறுப்பினர்களின் மொத்த ஊதியம் ரூபாய் 50,000 ஆக உயர்வு என அரசின் பல முடிவுகள் அவையில் அறிவிக்கப்பட்டுள்ளன.

புதியதாக அரியலூர், திருப்பூர் மாவட்டங்களும், பல்வேறு வட்டங்களும் உருவாக்கப்பட்டதோடு, சமூக சீர்திருத்தத் துறை மீண்டும் உருவாக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகளின் நலத் திட்டங்களை மேலும் சிறப்பாகச் செயல்படுத்த தனித் துறை உருவாக்கியதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அத்துறையினை தனது நேரடிப் பொறுப்பில் இயங்கச் செய்துள்ளார்கள்.

நமது மாநிலத்தில் முதல் முறையாக 2007 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்குநரகம் அமைக்கப்பட்டதோடு, பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கென தனியே 3.5 சதவீத உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டு, 15-9-2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான துணைத் திட்டங்கள் செயலாக்கம், பஞ்சமி நிலங்களை உரியோருக்கு அளிப்பது குறித்து ஆராய குழு அமைப்பு போன்றவை சமூகத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட இனங்களையும் கைதூக்கிவிட வழிவகுக்கும்.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டு, இதுவரை ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 976 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, 2 இலட்சத்து 12 ஆயிரத்து 946 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் மூலம், இந்த ஐந்தாண்டு காலத்தில் 8 இலட்சத்து 21 ஆயிரத்து 3 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வளவு குறுகிய காலத்தில் இந்தளவுக்கு பட்டாக்கள் வழங்கியிருப்பதென்பது ஓர் இமாலயச் சாதனையாகும்.

2011 பிப்ரவரி 10]

இவற்றுக்கெல்லாம் மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 முதல் 27 வரை கோவை மாநகரில், உலகமே வியக்கும் வண்ணம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தி, அனைவரது பாராட்டையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்றார்கள். அதன் தொடர்ச்சியாக சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பழைய சட்டப் பேரவை மண்டபத்தில் பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகத்தினையும், சென்னையில் செம்மொழிப் பூங்காவையும் அமைத்துள்ளது பாராட்டத்தக்கது.

தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடிசை வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் மிகப் பெரும் திட்டத்தினை 3-3-2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருச்சியில் தொடங்கி வைத்தார்கள்.

தமிழக மக்களின் நலன் பேணுவதில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தந்தைக்கேற்ற மகனாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, அனைத்துத் தரப்பு மக்களின் பாராட்டையும் பெற்றுள்ளார்கள். அவருக்கு எனது பாராட்டுதல்களைப் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மற்றும் நகராட்சி நிருவாகத் துறைகள் தமிழகத்தின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வளர்ச்சித் துறைகளாக விளங்கும் வண்ணம் சிறப்பாகச் செயல்பட்ட அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 29-5-2009 அன்று மாநில வரலாற்றில் முதல் முறையாக துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்டதையடுத்து, பேரவையில் 17-6-2009 அன்று அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், பெண்கள் சுய உதவிக் குழுக்களை அமைத்துச் செயல்படுத்துவதில் ஒரு மாபெரும் புரட்சியை மேற்கொண்டு, இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார்கள் என்பது நமக்கெல்லாம் பேருவகை அளிப்பதாக உள்ளது. மாநிலம் முழுவதும் அயராது பயணம் செய்து ஒவ்வொரு இடத்திலும் நீண்ட நேரம் கால் கடுக்க நின்று தன் திருக்கரங்களாலேயே சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் சுழல் நிதியினை வழங்கிச் சாதனை படைத்தார்கள். பெண்களுக்கு மட்டுமல்லாமல், ஆண்களுக்கெனவும், திருநங்கைகளுக்கெனவும் சுய உதவிக் குழுக்கள் கண்டார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

அதுமட்டுமல்லாமல் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட்டது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற பல்வேறு குடிநீர் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றிட அரும்பணி ஆற்றி வருகிறார்கள்.

அவரது பொறுப்பின்கீழ் வரும் துறைகள் சம்பந்தப்பட்ட அனைத்து அரசாணைகள், விளக்கப் புத்தகங்கள், விதிகள், சாதனைகள் அடங்கிய வெளியீடுகள், புதிய தொழில் கொள்கை குறித்த விவரங்கள் அடங்கிய pen drive ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வழங்க நடவடிக்கை எடுத்து முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

துணை முதலமைச்சரான பிறகு தொழில் துறை செழிக்கவும், சிறப்பு முயற்சிகள் என்ற பெயரில் பல்வேறு முக்கிய கட்டமைப்புத் திட்டங்கள் விரைந்து செயலாக்கத்திற்கு வரவும் ஓயாது உழைதது மகத்தான பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட உதவி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டப் பேரவையைப் பொறுத்தவரை இந்த ஐந்து ஆண்டு காலத்தில் பல்வேறு முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் பணியாற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையைப் போற்றும் வகையில் "சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா" இரண்டு நாட்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. 11-5-2007 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் பாராட்டுரை வழங்கினார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். 12-5-2007 அன்று அன்றைய மக்களவைத் தலைவர் திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்கள் பாராட்டுரை நிகழ்த்தி, பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளின் தொகுப்பைப் புத்தகமாக வெளியிட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'பொன் விழா' நிகழ்ச்சியில் புதிய அறிவிப்பாக, புதிய சட்டமன்றக் கட்டடம் கட்டுவது குறித்து அறிவிப்புச் செய்தார்கள். அதனடிப்படையில் துரிதமாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, உலகளவிலான வடிவமைப்பாளர்களைக் கொண்டு மிகச் சிறந்த கவின்மிகு இந்தக் கட்டடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் கட்டப்பட்டு,

2011 பிப்ரவரி 10]

13-3-2010 அன்று இந்தியப் பிரதமர் அவர்களால் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களது முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. அவ்வமயம் அன்னை சோனியா காந்தி அவர்களது திருக்கரங்களால் விழா சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இந்த எழில்மிகு அரங்கில் 19-3-2010 முதல் இன்று வரை பேரவைக் கூட்டம் பொலிவுடன் நடைபெற்று வருகிறது.

ஜனநாயகத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வண்ணம், தமிழகத்தில் சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கக் கோரும் தீர்மானம் 12-4-2010 அன்று நிறைவேற்றப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கேற்ப மேலவை மண்டபம் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டப் பேரவை மண்டபம் மற்றும் சட்டமன்ற மேலவைக்காக அமைக்கப்பட்டுள்ள மண்டபம் ஆகியவற்றில் தேசத் தலைவர்கள், நாட்டிற்காகப் பாடுபட்ட தியாகச் செம்மல்கள், அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த பெரும் தலைவர்களின் திருவுருவப் படங்களை நிறுவச் செய்ததன்மூலம் சட்டமன்ற வரலாற்றுப் பாரம்பரியத்தினைப் பேணுவதிலும், அனைத்துத் தரப்பினையும் சேர்ந்த பெரும் தலைவர்களின் நினைவினைப் பேணுவதிலும், அவருக்கு நிகர் அவரே என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார்கள்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்தில் நான் பேரவைத் தலைவராக இருக்கும் வாய்ப்பு எனக்கு கிடைக்கப் பெற்றதைப் பெரும் பேறாக நான் எண்ணுகிறேன். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை விதி 110-ன்கீழ் பல்வேறு முக்கியப் பொருள்கள் குறித்து அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. உதாரணமாக, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துதல், சிறப்பு பொது விநியோகத் திட்டம் என்ற பெயரில் நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் உணவுப் பொருட்களடங்கிய பொட்டலங்கள் வழங்குதல், சென்னை மத்திய சிறை இருந்த இடத்தினை சென்னை பொது மருத்துவமனைக்கு ஒதுக்குதல், தனியார் வசமிருந்த அரசு நிலத்தை கையகப்படுத்தி செம்மொழிப் பூங்கா அமைத்தல், குறுவை நெல் சாகுபடிக்கு மும்முனை

[2011 பிப்ரவரி 10

மின்சாரம் அதிகரிப்பு, கூட்டுறவுக் கடன் தள்ளுபடி, வட்டி குறைப்பு, பொது விநியோகத் திட்டத்தில் சர்க்கரைப் பொங்கலுக்கான பொருட்களை இலவசமாக வழங்குதல் உள்ளிட்ட பொருள்கள் குறித்து அறிக்கைகள் அளிக்கப்பட்டன.

அரசினர் தனித் தீர்மானங்கள் என்ற முறையில் மேலவையை அமைக்கக் கோருதல், உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு கோருதல், சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்கக் கோருதல், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்ற மத்திய அரசின் உதவியைக் கோருதல் போன்றவை குறிப்பிடத்தக்க தீர்மானங்களாகும்.

சட்டமுன்வடிவுகளைப் பொறுத்தவரை, எஸ்மா, டெஸ்மா மற்றும் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டங்களை நீக்குதல், பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு தனியார் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு, தமிழில் கல்வி கற்றல் மற்றும் தமிழில் கல்வி பயின்றோருக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துக் கொண்டாடுதல், ஊனமுற்றோர் நல வாரியம் அமைத்தல், சிறுபான்மையின மக்களுக்கு 3.5 சதவிகித உள் ஒதுக்கீடு வழங்குதல், பொங்கல் திருநாளைத் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்க நாளாக அறிவித்தல், ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினை மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைத்தல், பள்ளிகளில் சமச்சீர்க் கல்வி முறையை அமல்படுத்துதல், கல்விக் கட்டணங்களைச் சீர்செய்தல், மகளிர் ஆணையத்தினை சட்டப்படியான அமைப்பாக்குதல், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பது தொடர்பான சட்டமுன்வடிவுகள் இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

2009 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதுகுத் தண்டில் அறுவை சிகிச்சை செய்திருந்தபோதிலும், மருத்துவமனையிலிருந்துகொண்டே வரவு-செலவுத் திட்டத் தயாரிப்பில் மிகச் சிறந்த பங்காற்றியதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே அவையில் நினைவுகூர்ந்தார்கள். 26-2-2009 அன்று அருந்ததியினருக்கான உள் ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வது குறித்து இராமச்சந்திரா

2011 பிப்ரவரி 10]

மருத்துவமனையிலிருந்து பேரவை உறுப்பினர்களுக்கு உருக்கமாக ஒரு கடிதம் எழுதி, அதனை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அவையில் வாசித்துவிட்டு சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்த நிகழ்வு நம் அனைவரது நெஞ்சத்திலும் நீங்கா இடம் பெற்றுள்ளது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் உறுப்பினர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் நவீன உடற்பயிற்சி மையத்தைத் திறந்து வைத்ததோடு, உறுப்பினர்களின் நல்வாழ்வுக்காக யோகா பயிற்சி வகுப்புகளுக்கும் ஏற்பாடு செய்தது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

சட்டப் பேரவையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்களுக்கு 2008 ஆம் ஆண்டு, முதல்முறையாக பேனா மற்றும் சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்கும் முறையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

12-5-2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மீது ஓர் உரிமைப் பிரச்சினை அறிவிப்பை காலை 9-58-க்குக் கொடுத்துவிட்டு, படிக்கக்கூட நேரம் இல்லாத நிலையில், கேள்வி நேரம் முடிந்ததும் அப்பிரச்சினையை எதிர்க்கட்சியினர் எழுப்பியபோது, “விதிமுறைகளை ஆழமாகக் கவனிக்காமல் அப்பிரச்சினையை உடனே எடுத்துக்கொள்ளுங்கள், உரிமைக் குழுவில் அதனை விவாதிக்க நான் தயார்” என்று தாமாகவே முன்வந்து தம் மீதான உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்புமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இத்தகைய முன்நிகழ்வு இந்திய வரலாற்றில் என்றும் நிகழ்ந்ததில்லை.

சட்டப் பேரவை நடவடிக்கைகளில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்று நாட்டுக்கு நலம் சேர்க்க வேண்டும் என்று விழைவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஈடு இணையே கிடையாது என்பதை நான் ஆணித்தரமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இத்தகைய ஜனநாயகப் போக்கினை அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் பின்பற்றவேண்டும் என்று பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

[2011 பிப்ரவரி 10

ஒவ்வொரு நாளும் பேரவைக் கூட்டத்திற்கு முன்னர் காலை 9-00 மணிக்கே எனது அறைக்கு வருகை தந்து, அவையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பொருள்கள் குறித்தும் அரசு வழங்கவுள்ள விளக்கங்கள் பற்றியும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்து விவாதித்து முடிவெடுக்கும் மிகச் சிறந்த ஜனநாயக நடைமுறையைப் பின்பற்றி, அனைவருக்கும் முன்னோடியாக விளங்கி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். மூத்த வயதிலும், தன்னுடைய உடல் நலத்தையும் பொருட்படுத்தாது, சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை கொடுத்து, பேரவை நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு இப்பேரவையை நடத்திச் செல்ல அனைத்து வகைகளிலும் எனக்குப் பேருதவியாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல என்னிடம் வார்த்தைகள் இல்லை.

தந்தையின் வழியிலிருந்து சிறிதும் வழுவாமல், அமைதியின் திருவுருவமாக இருந்து, எப்போதும் மலர்ந்த முகத்துடன் பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டும் நமது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து, எந்தப் பிரச்சினையை உறுப்பினர்கள் எழுப்பினாலும், அதுகுறித்து உடனுக்குடன் அரசின் சார்பாக விளக்கங்களை அளிக்க முன்வந்த பாங்கு, நம் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், மன நிறைவையும் அளிக்கக்கூடியதாக இருந்தது. கூடுதல் விவரங்கள் தேவைப்படின், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடமிருந்து உடனே பெற்று அறிவிக்கும் அவரது வேகம் என்னைப் பல முறை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. ஒவ்வொரு நாளும் பேரவையில் எழுப்பப்படவுள்ள பொருட்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் போலவே விளக்கமளிக்க தன்னை முழுமையாகத் தயார் செய்து கொண்டு வந்து, முக்கியப் பொருள்கள் பற்றி அவையில் எழுப்பியவுடன் உறுப்பினர்கள் உரிய விளக்கம் பெறுவதற்கு உதவிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில நேரங்களில், ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலாக உறுப்பினர்கள் நீண்ட உரையாற்றுகின்ற வேளையிலும், அவை முன்னுள்ள பொருள் அல்லது அவை மரபுக்கு அப்பாற்பட்டு

கருத்துகளைத் தெரிவிக்கின்றபோதெல்லாம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தனக்கே உரித்தான பாணியில் அவையின் விதிமுறைகள் மற்றும் மரபுகளைச் சுட்டிக்காட்டி, விவாதத்தின் போக்கு திசைமாறால், எடுத்துக்கொண்ட பொருள்மீது பேரவை உறுப்பினர்கள் குறித்த காலத்திற்குள் உரையாற்றி முடித்து, அவையின் அலுவல்கள் தொய்வில்லாமல் நடைபெறுவதற்குப் பெரிதும் உதவியுள்ளார்கள். பழுத்த அனுபவம் மிக்க பண்பாளர் அவை முன்னவராக இருப்பதால் எனது பணி மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. பேரவை நடவடிக்கைகளை நடத்துவதில் எனக்குப் பேருதவியாக இருந்த மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதத்தின்போது எழுப்பும் பல்வேறு பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் விளக்கமளித்ததோடு, பற்பல புதிய அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றைப் புத்தகமாக அச்சிட்டு வழங்கிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரவை நடவடிக்கைகளை மிக நல்ல முறையில் நடத்திச் செல்வதில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எனக்குப் பெரும் துணையாக இருந்திருக்கிறார்கள். தனது நாடாளுமன்ற அனுபவத்தின் காரணமாக, அவையின் நடைமுறைகள் மற்றும் மரபுகளை உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்து வழிநடத்தியதுடன், நகைச்சுவை ததும்பும் மொழியாற்றலால் அனைத்து உறுப்பினர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்ற அவருக்கு இந்த நேரத்தில் என் நன்றியினையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பேரவை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறவும், உறுப்பினர்கள் நல்ல முறையில் விவாதங்களில் பங்கேற்கவும் உறுதுணையாக இருந்த அரசுத் தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா, இதர கட்சித் தலைவர்கள், இதர கட்சிக் கொறடாக்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2011 பிப்ரவரி 10

இந்த ஐந்து வருட காலத்தில் பேரவையினுடைய அலுவல்கள் அனைத்தையும் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்ற, எல்லா வகைகளிலும் உறுதுணையாக இருந்து, மிகச் சிறந்த முறையில் எனக்கு உதவிய பேரவைச் செயலாளர் திரு. மா. செல்வராஜ் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும், பேரவையின் மின்னணு கடிகாரத்தை 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பராமரித்து வரும் திருவாளர்கள் குகன் பிரதர்ஸ் நிறவனத்தாருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சிறப்புற ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் ரேடியோ பிரிவினருக்கும், அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எழில்மிகு இந்தப் புதிய சட்டப் பேரவை மண்டபத்தில் பேரவையின் கூட்டங்கள் மிக நல்ல முறையில் நடந்தேற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பொதுப் பணித் துறையினருக்கும், இதர அரசு அலுவலர்களுக்கும், எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

சட்டமன்றத்தில் தனது ஐம்பதாண்டு காலப் பணியினை நிறைவு செய்து பொன் விழா கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பேரவையில் பவள விழா கொண்டாடும் நன்னாளை நாம் அனைவரும் எதிர்நோக்கியுள்ளோம் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திற்கும் இந்த நாட்டுக்கும் தொடர்ந்து வழிகாட்டியாக இருந்து உதவவேண்டுமென்ற எனது அவாவினைத் தெரிவித்துக்கொண்டு, பேரவையின் கூட்டத் தொடர் இனிதே நிறைவு பெறும் இந்நாளில் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைகளின் அட்டவணை (Index)

பயன்படுத்தும் முறை

பேரவை நடவடிக்கைகளின் ஒவ்வொரு தொகுதிக்கும் (Volume) தனித்தனியாக அட்டவணை வெளியிடப்பெறுகின்றது. உறுப்பினர்கள் பேரவையில் எழுப்பிய வினாக்கள், ஆற்றிய உரைகள் ஆகியவை தொடர்பான குறிப்புகளை இலகுவாகவும், விரைவாகவும் அறிந்துகொள்ள அகர வரிசைப்படி அமைக்கப்பட்ட இவ்வட்டவணை பெரிதும் பயன்படும்.

இந்த அட்டவணை கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:—

(1) உள்ளடக்கம் (Contents)

(2) உறுப்பினர்களின் பெயர் அட்டவணை (Name Index)

(3) பொருள் அட்டவணை (Subject Index)

அவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட அலுவல்கள் பற்றிய குறிப்புகளை "உள்ளடக்கம்" என்ற தலைப்பின்கீழும், உறுப்பினர்கள் பேசியது தொடர்பான குறிப்புகளை "பெயர் அட்டவணை" என்ற தலைப்பின்கீழும், விவாதிக்கப்பட்ட பொருள்கள் குறித்த குறிப்புகளை "பொருள் அட்டவணை" என்ற தலைப்பின்கீழும் காணலாம்.

"உள்ளடக்கம்" என்ற தலைப்பின்கீழ்—

அமைச்சரின் அறிக்கை

அரசினர் சட்டமுன்வடிவுகள்

அறிக்கை அளித்தல்

அறிவிப்புகள்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் இதர தீர்மானங்கள்

இரங்கற்குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானங்கள்

உரிமைப் பிரச்சினைகள்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

ஒழுங்குப் பிரச்சினைகள்

கவன ஈர்ப்பு

சிறப்புக் கவன ஈர்ப்பு

தகவல் கோரல்

தனித் தீர்மானங்கள்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

வரவு-செலவுத் திட்ட பொது விவாதம்

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் மற்றும் இதர நிதி அலுவல்கள்

போன்றவை வருவதால் அவை "பொருள் அட்டவணை"யில் இடம்பெறவில்லை.

"பெயர் அட்டவணை"யில் ஒவ்வோர் உறுப்பினரது பெயரின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பின் இறுதியிலும் அவ்வுறுப்பினர் அவையில் எந்த அலுவல் தலைப்பின்கீழ் உரையாற்றினார் என்பதைக் குறிக்கும் வகையில் அடைப்புகளுக்குள் அது பற்றிய சுருக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறு பொருள் தலைப்பின்கீழும் அடைப்புக்குறிச் சுருக்கங்கள் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, (ஒ.பி.) என்பது ஒழுங்குப் பிரச்சினையையும், (க.ஈ.) என்பது கவன ஈர்ப்பையும், (சி.க.ஈ.) என்பது சிறப்புக் கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்பது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ.) என்பது அமைச்சரின் அறிக்கையையும், (வி.) என்பது மூல வினாவையும் அதற்கான விடையையும், (து.வி.) என்பது துணை வினாவையும் அதற்கான விடையையும் குறிக்கும். இவ்வட்டவணையில் பயன்படுத்தப்பட்டுள்ள சுருக்கங்களின் விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

அ.	–	அமைச்சரின் அறிக்கை
அ.த.தீ.	–	அரசினர் தனித் தீர்மானம்
அ.தீ.	–	அரசினர் தீர்மானம்
அ.நி.	–	சட்டமுன்வடிவின் அறிமுக நிலை

அ.வி. — அரை மணி நேர விவாதம்

ஆ.இ. — ஆளுநர் இசைவு

ஆ.உ. — ஆளுநர் உரை

ஆ.செ. — ஆளுநர் செய்தி

ஆ.நி. — சட்டமுன்வடிவின் ஆய்வு நிலை

உ.பி. — உரிமைப் பிரச்சினை அல்லது உரிமை மீறல் பிரச்சினை

ஒ.தீ. — ஒத்திவைப்புத் தீர்மானம்

ஒ.பி. — ஒழுங்குப் பிரச்சினை

க.ஈ. — கவன ஈர்ப்பு

க.ஈ.அ. — கவன ஈர்ப்பு அறிக்கை

கு.வி. — குறுகிய கால விவாதம்

சி.க.ஈ. — சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention)

த.கோ. — தகவல் கோரல்

த.த.தீ. — தனி உறுப்பினர் தனித் தீர்மானம்

த.வி. — தன்னிலை விளக்கம்

து.மா.கோ. — துணை மானியக் கோரிக்கை

து.வி. — துணை வினா

மா.கோ. — மானியக் கோரிக்கை

மி.மா.கோ. — மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை

வ.செ.தி. — வரவு-செலவுத் திட்டம்

வி. — மூல வினா

சில குறிப்புகளைப் பொறுத்தவரையில், அவ்வாறு அடைப்புகளுக்குள் சுருக்கங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில், அக்குறிப்புகளே தேவையான விளக்கங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.

தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "பெயர் அட்டவணை"யில் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

பொருள் அட்டவணையில் வரும் பல்வேறு பொருள்களைப் பொறுத்தவரையில் அவை உரிய பொதுத் தலைப்புகளின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, "கல்விக் கூடங்கள்" என்ற பொதுத் தலைப்பின்கீழ் பள்ளிகள், கல்லூரிகள், பல்தொழில் பயிலகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பொறியியல் . கல்லூரி, மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவை இடம்பெறுகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான
பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின்
பதினைந்தாவது கூட்டத் தொடர்

2011 பிப்ரவரி 10

(தொகுதி 96)

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	ix - xiv
Governor and Council of Ministers	xv - xix
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xxi - xxiv
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxv - xxxv

அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கடற்பகுதியில் மீன்பிடித்தலை முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011	17-18
தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு, 2011	16
தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011	16-17
தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2011	30-31
தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2011	173

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

தமிழ்நாடு கடற்பகுதியில் மீன்பிடித்தலை முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 — *193-194*

தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 — *187-190*

தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு, 2011 — *179-185*

தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 — *191-192*

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2011 — *175-176*

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2011 — *177-178*

தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 — *185-187*

அரசினர் தீர்மானங்கள்—

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் — *197*

பேரவையின் கண்ணியத்திற்கு குந்தகம் விளைவித்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைக் கண்டித்தல் — *195*

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்துதல் — *174*

அறிக்கைகள் அளித்தல்—

அரசு உறுதிமொழிக் குழு — *12*

சட்ட விதிகள் ஆய்வுக் குழு — *12*

பொது நிறுவனங்கள் குழு — *11*

மதிப்பீட்டுக் குழு — *10-11*

மனுக்கள் குழு — *12*

பக்கங்கள்

அறிவிப்புகள்—

கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2010-2011, முன்மொழிதல் (ஆ.செ.) 24

தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு (ஆ.இ.) 179

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2011 (ஆ.இ.) 30

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2011 (ஆ.இ.) 172

பதின்மூன்றாவது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் 196, 1550-1568

முன்பண மானியக் கோரிக்கைகள், 2011-2012, முன்மொழிதல் (ஆ.செ.) 136

இடைக்கால வரவு—செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்— 31-119, 126-136

இரங்கற்குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு 1-2

இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2010–2011, அளித்தல் 18-24

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி கோரியது குறித்து— 120-126

கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2010–2011, வாக்கெடுப்பு 25-30

தகவல் கோரல்—

சென்னை, புழல் சிறையில் கைதி தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டது 4-5

பக்கங்கள்

தகவல் கோரல்—தொடர்ச்சி

சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர்கள் போராட்டம் 8-1

வட்டார வளர்ச்சி அலுவலர்களுடைய ஊதிய முரண்பாட்டைக் களைவது குறித்த போராட்டம் 5

வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை யானைகள் மிதித்துக் கொன்றது 6-7, 13-15

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், காளியம்மன்பட்டி, அருள்மிகு காளியம்மன் கோயிலுக்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது 2-3, 48-49

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 197-203

முன்பண மானியக் கோரிக்கைகள், 2011–2012, வாக்கெடுப்பு— 137-172

வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 9 முதல் 13 வரை) 2, 205-1475

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 14) 2, 1476-1549

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் பதினைந்தாவது கூட்டத் தொடர்

2011 பிப்ரவரி 10

(தொகுதி 96)

பெயர் அட்டவணை

பக்கங்கள்

"அ"

அங்கையற்கண்ணி, செல்வி ஆ.—

கரியாலூர், சங்கராபுரம் தொகுதி, காவல் நிலையக் கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுதல் (வி.) 225

அப்பாவு, திரு. மு.—

இடிந்தகரை, ராதாபுரம் வட்டம், மீன் பதப்படுத்தும் கிட்டங்கியைப் பழுதுபார்த்தல் (வி.) 1421

இயந்திரக் கட்டுமரங்கள், மாதந்தோறும் 400 லிட்டர் மண்ணெண்ணெய் நியாய விலையில் வழங்குதல் (வி.) 1047-1048

ஈரோடு, கொங்கு அறிவாலயம் மன வளர்ச்சி குன்றியோர் பள்ளிக்கு அரசு புறம்போக்கு நிலத்தை வழங்குதல் (வி.) 1510-1511

உறுமன்குளம், இடையன்குடி, குட்டம், ராதாபுரம் வட்டம், குடிநீர்க் குழாய்கள் அமைத்தல் (வி.) 535

உறுமன்குளம், ராதாபுரம் வட்டம், இரம்மதபுரம்-திசையன்விளை சாலையைச் செப்பனிடுதல் (வி.) 1094

பக்கங்கள்

"அ"—தொடர்ச்சி

அப்பாவு, திரு. மு.— தொடர்ச்சி

கரைச்சுத்துபுதூர், ராதாபுரம் வட்டம், தோப்புவிளை-இரம்மதபுரம் சாலையைச் செப்பனிடுதல் (வி.) 1093

குஞ்சான்விளை, ராதாபுரம் தொகுதி, ஒன்றிய தொடக்கப் பள்ளியைத் தரம் உயர்த்துதல் (வி.) 869

குமாரபுரம், ராதாபுரம் வட்டம், நாலாந்துலா குளத்தைத் தூர் வாருதல் (வி.) 1093

குமாரபுரம், ராதாபுரம் வட்டம், ராஜீவ் காந்தி நகர், ஆதி திராவிடர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் (வி.) 1476

கூடன்குளம், அடங்கார்குளம், ராதாபுரம் தொகுதி, தாமிரபரணி குடிநீர் விநியோகம் (வி.) 535-536

கூட்டப்பனை, ராதாபுரம் தொகுதி, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் (வி.) 812

கோட்டை கருங்குளம், ராதாபுரம் வட்டம், ஆதி திராவிடர் காலனிக்கு குடிநீர் வழங்குதல் (வி.) 1019

கோரியூர், காருண்யாபுரம், இராஜலிங்கபுரம், சகாயபுரம், ராதாபுரம் வட்டம், தாமிரபரணி தண்ணீர் வழங்குதல் (வி.) 553, 554-555

சங்கனாபுரம், ராதாபுரம் தொகுதி, ஒன்றிய தொடக்கப் பள்ளியைத் தரம் உயர்த்துதல் (வி.) 870

சமூகரெங்கபுரம், ராதாபுரம் தொகுதி, உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துதல் (வி.) 851

சுப்பிரமணியபுரம், ராதாபுரம் வட்டம், தாமிரபரணி குடிதண்ணீர் வழங்குதல் (வி.) 613

சென்னை, நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் (வி.) 594

பக்கங்கள்

"அ"—தொடர்ச்சி

அப்பாவு, திரு. மு.— தொடர்ச்சி

தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம், திருநெல்வேலி மாவட்டம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் 113 கிராமங்களைச் சேர்த்தல் (வி.) 664

தாமிரபரணி-நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர் திட்டம், நபருக்கு தினம் 50 லிட்டர் நீர் வழங்குதல் (வி.) 693

திருநெல்வேலி மாநகராட்சி, இராஜேந்திர நகர், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியில் சேர்த்தல் (வி.) 553

திருநெல்வேலி மாநகராட்சி, கே.எம்.ஏ. நகர் 4-வது தெரு, பாதாளச் சாக்கடை அமைத்தல் (வி.) 626

திருநெல்வேலி மாநகராட்சி, பாதாளச் சாக்கடைப் பணியின் நிலை (வி.) 554

துலுக்கர்பட்டி, ராதாபுரம் தொகுதி, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் (வி.) 812

துலுக்கர்பட்டி, ராதாரபுரம் தொகுதி, ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துதல் (வி.) 483-484

